Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2044 கார்த்திகை 10 செவ்வாய்க்கிழமை (26.11.2013) பக்கங்கள் 20 ஓசை – 057

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant ❖ Luxurious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline: 0212229497
(C/3175)

# அழுத்தங்களுக்கு அடிபணிய இலங்கை மக்கள் தயாரில்லை

## ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

அழுத்தங்களுக்கு அடிபணிந்து வாழ இந்த நாட்டு மக்கள் தயாரில்லை என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சுதந்திரம், சுயாதீனத்தை பெரிதும் மதிக்கும் நாடு இலங்கை எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு பொது நூலகத்தில் அமைக்கப்பட்டுள்ள வியட்நாம் முன்னாள் ஜனாதிபதி கோச் மிங்கின் உருவச்சிலையை திறந்து வைத்து உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை சுதந்திரத்தையும் சுயாதீனத்தையும் மேன்மையாக மதிக்கும் நாடு. இலங்கை மக்களின் சுயாதீனமான போராட்டங்களின் சாரம்சத்தை பிழிந்தே மகிந்த சிந்தனை வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டது.

வியட்நாம் போராட்டத் தலைவரது உருவச்சிலையை இலங்கையில் அமைக்கக் கிடைத்தமை சரியான காலச் செயற்பாடு என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கும் வியட்நாமுக்கும் இடையிலான நல்லுறவுகளை மேலும் பலப்படுத்தும் நோக்கில் இந்த உருவச் சிலை அமைக்கப்பட்டுள்ளது.

அங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஹோ சி மிங்கின் புகைப்படக் கண்காட்சியையும் ஜனாதிபதி பார்வையிட்டார்.

வியட்நாம் உதவிப் பிரதமர்

(19) ஆம் பக்கம் பார்க்க

## அரச தாதியர்கள் தொழிற்சங்கப் போர்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் அரச தாதியர்கள் மற்றும் 15 அமைப்புக்கள் இணைந்து நாளையும் நாளைமறுதினமும் தமது தொழிற்சங்க நடவடிக்கையாக தொடர் சுகயீன விடுப்புப் போராட்டமொன்றை நடத்தவுள்ளன.

நாடுபூராவும் உள்ள அரச தாதியர்கள் மற்றும் சுகாதாரத் துறை சார்ந்த 15 அமைப்புக்களும் இணைந்து அவற்றின் தாய்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த சுகயீன விடுப்புப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையிலேயே அவர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

(19) ஆம் பக்கம் பார்க்க

## மன்மோகனின் புறக்கணிப்பால் கொழும்பின் போக்கில் மாற்றமில்லை

### இந்தியாவுக்கே பாதிப்பு என்கிறது ஆஸி. ஊடகம்

(கொழும்பு)

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் கொழும்பில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகள் அரச தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்காமை, இலங்கையின் மனித உரிமை நிலைமைகளில் மாற்றத்தை ஏற்படுத்தாது என அவுஸ்ரேலிய ஊடகமொன்று சுட்டிக்காட்டியுள்ளது.

அவுஸ்ரேலியாவின் கென்பரா டைம்ஸ் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

கொழும்பு மாநாட்டை புறக்கணித்தமை காரணமாக இந்தியா பல இழப்புக்களை சந்திக்குமே தவிர, நன்மைகளின் அளவும் மிகவும் குறைவானதே என ஊடகத்தின் பத்தி எழுத்தாளரான அவுஸ்ரேலிய தேசிய பல்கலைக்கழகமான க்ரோவ்போட்டின்

(19) ஆம் பக்கம் பார்க்க

## சர்வதேச அழுத்தத்திற்கு அரசு வழிசமைத்துள்ளது

### குற்றம்சாட்டுகிறது ஐ.தே.க.



(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் சர்வதேச விசாரணைகளுக்கு ஒத்துழைக்கப் போவதில்லை என்று நாட்டு மக்களுக்குக் கூறிக்கொண்டு, மறுபுறத்தில் சர்வதேச அழுத்தங்களுக்கு அடிபணிவதற்கான வழிமுறைகளை பொதுநலவாய மாநாட்டின் ஊடாக ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாக பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளதாக பி.பி.சி. செய்தி வெளியிட்டுள்ளது.

பொதுநலவாய மாநாட்டின் இறுதியில் அரசு தலைவர்கள் வெளியிட்டுள்ள இணக்கப்பாடுகளின்படி, இலங்கையின் மனித உரிமை விவகாரம் சர்வதேச நீதிமன்றம் ஒன்றின் முன்னால் கொண்டுசெல்லப்பட வழியேற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியன் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க பி.பி.சி.க்கு மேலும் தெரிவித்துள்ளதாவது,

பொதுநலவாய மாநாட்டின் இறுதியில் அரசு தலைவர்கள் இணங்கி வெளியிட்ட பிரகடனத்தில் உள்ள 98 விடயங்களில் 39 ஆவது பிரிவு மிக முக்கியமானது.

(19) ஆம் பக்கம் பார்க்க

## பயங்கரவாதத்திற்கு எதிராக சர்வதேச செயற்றிட்டம்



### கோருகிறார் கோத்தாபய

(கொழும்பு)

பயங்கரவாதத்துக்கு எதிராக சர்வதேச ரீதியான ஒருங்கிணைந்த கூட்டு நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்படவேண்டும் என்று பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

காலியில் நேற்றுக் காலை ஆரம்பமாகிய, கடல்சார் பாதுகாப்புக் கருத்தரங்கில் கலந்துகொண்டு முக்கிய உரை நிகழ்த்திய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கரையில் இருந்து இன்னும் தொலைவில் செயற்படவும், கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், ரோந்துப் பணிகளை மேற்கொள்ளவும் இன்னும் பல கடற்படைக் கப்பல்களை கடற்படைக்காக பெறவேண்டியுள்ளது.

ஏற்கனவே பல செல்வந்த நாடுகளிடம் இருந்து இத்தகைய கப்பல்களை தருமாறு கேட்டிருக்கிறோம்.

இந்தநிலையில், அடுத்த ஆண்டில் இரண்டு பே வகை ரோந்துப் படகுகளை அன்பளிப்புச் செய்யும் அவுஸ்ரேலிய அரசாங்கத்தின் முடிவை நன்றியுடன் வரவேற்கிறேன்.

இதன் மூலம், சட்டவிரோத ஆட்கடத்தல்களைத் தடுப்பதுடன், இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தின் உறுதிப்பாடு மற்றும் பாதுகாப்பை மேலும் உறுதிப்படுத்தவும் முடியும்.

எமது தற்போதைய வெளிவிவகாரக் கொள்கையை மாற்றிக் கொள்ள வேண்டியதில்லை. அம்பாந்தோட்டை துறைமுகத்தை

(19) ஆம் பக்கம் பார்க்க

## கவிஞர் ஜெயபாலன் நாடு கடத்தப்படவுள்ளார்

(கொழும்பு)

விசா விதி முறைகளை மீறி செயற்பட்டதாக கைது செய்யப்பட்டு தற்சமயம் மிரிஹான முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நோர்வே பிரஜையான ஈழத்து கவிஞர் வி.ஐ.எஸ்.ஜெயபாலன் நாடு கடத்தப்படவுள்ளார்.

இத்தகவலை அரசாங்க தகவல் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ செய்தித்தளம் தெரிவித்துள்ளது.

தென்னிந்திய திரைப்பட நடிகர் ஜெயபாலன் கடந்த


(19) ஆம் பக்கம் பார்க்க

06



மன்னன்

09



விருது

18



ஆலம்

## மாவீரர் தின அனுஷ்டிப்பு; தண்டனைக்குரிய குற்றம்

### அரசு திட்டவட்டம்

(கொழும்பு)

மாவீரர் தினத்தை அனுசரிக்கக்கூடாது என்று அரசாங்கம் அறிவித்திருக்கிறது. அவ்வாறு அனுஷ்டிப்பது சட்டப்படி தண்டனைக்குரிய குற்றமாகும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஊடக சுதந்திரம் என்ற போர்வையில் விடுதலைப் புலிகளின் புகழ்பாடுதல், பெருமை போற்றுதல் சட்டவிரோதமானது என்றும், அவ்வாறு எவரும் நடந்துகொண்டால் சட்ட நடவடிக்கைக்கு முகங்கொடுக்க வேண்டிவரும் என்று தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் லக்ஸ்மன் ஹுலுகல்ல தெரிவித்தார்.

(19) ஆம் பக்கம் பார்க்க

## ஜெயபாலன் கைது விவகாரம் மனிதாபிமானத்துடன் அணுகப்படவேண்டும்

(கொழும்பு)

ஜெயபாலனின் கருத்து சுதந்திரத்தையும் தனது தாயாருக்கு அஞ்சலி செலுத்துவதற்குமுள்ள உரிமையையும் மனிதாபிமான அடிப்படையிலேயே நோக்கப்படவேண்டும் என்று ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் சி.தவராசா விடுத்திருக்கும் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கவிஞர் ஜெயபாலன் கைதுசெய்யப்பட்டிருப்பது தொடர்பாக பல்வேறு தளங்களில் பலவாறான கோணங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

நீண்டகாலமாக நோர்வேயிலும் இந்தியாவிலும் தங்கியிருந்த ஜெயபாலன் தனது தாயாரின் கல்லறைக்கு அஞ்சலி செலுத்துவதற்காக மாங்குளத்துக்குச் சென்றபோது கைதுசெய்யப்பட்டிருப்பதாக அவரது மனைவியினால் கூறப்பட்டிருந்தும் அவர் சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வருகைதந்து அவ் விசா விதிமுறைகளுக்கு முரணான நடவடிக்கைகளில் ஈடுபட்டதனால் அவரை குடிவரவு

(19) ஆம் பக்கம் பார்க்க

# வறுமை ஒழிப்பு திட்டம் வெற்றிபெற மக்களின் ஒத்துழைப்பு அவசியம்

## வட மாகாண சபை உறுப்பினர் தவநாதன் வலியுறுத்து

(கிளிநொச்சி)

சமுர்த்தி உள்ளிட்ட அரசின் அனைத்து வறுமை ஒழிப்புத் திட்டங்களின் வெற்றிக்கும் மக்களின் ஒத்துழைப்பும் அவசியம் என வடக்கு மாகாணசபை உறுப்பினர் வை.தவநாதன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச தொண்டமான் நகர் கிராமத்தில் சமுர்த்தி பயனாளிகளிலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான சுயதொழில் கடன் வழங்கும் நிகழ்வு நேற்றைய தினம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்

வறுமை ஒழிப்புத்திட்டங்கள் மூலம் பெறப்படுகின்ற சுய தொழில் கடன் உள்ளிட்ட உதவித்திட்டங்களை பெறுகின்ற மக்கள் அதனை சிறந்த திட்டமிடலுடன் பெறப்படுகின்ற உரிய நோக்கத்திற்கு பயன்படுத்த வேண்டும் இதன்போது அந்த நோக்கம் நிறைவடைவதன் ஊடாக வறுமை ஒழிப்பும் வெற்றிபெறும்.



கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது முப்பது வீதமான மக்களுக்கே சமுர்த்தி பயன் கிடைக்கிறது இதனை மேலும் அதிகரிக்க வேண்டும் என அண்மையில் இடம்பெற்ற கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அதனை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் அமைச்சரவையில் சமர்பித்து உரிய நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்துள்ளார்.

மக்கள் தங்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக கடன் பெறுவது ஒன்றும் ஏளனத்திற்குரிய விடயமல்ல பெறுகின்ற கடனை உரிய முறையில் பயன்படுத்தி உரிய நோக்கத்தை அடைந்துகொள்ளவேண்டும் அதுவே முக்கியமானது எனவும் தெரிவித்தார்.

தொண்டமான்நகரில் தெரிவு செய்யப்பட்ட பத்து சமுர்த்தி பயனாளிகளுக்கு சுயதொழில் கடனாக இருபதாயிரம் வீதம் வழங்கப்பட்டுள்ளது.

பிரதேச சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் காந்தி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கரைச்சி பிரதேச செயலக உதவித்திட்டப்பணிப்பாளர் அமல்ராஜ், மாவட்ட சமுர்த்தி இணைப்பாளர் சிவகுமார் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# கணவன், மனைவியிடையே சண்டை; இடையில் சிக்கிய குழந்தை மரணம்

(யாழ்ப்பாணம்)

அரியாலை பூம்புகார்ப்பகுதியில் கடந்த 20 ஆம் திகதி இரவு கணவன், மனைவி இருவரது சண்டையின்போது சிக்கி நிலத்தில் வீழ்ந்து தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவந்த ஒன்றரை வயதுச் சிறுவன சிகிச்சை பயனின்றி நேற்று முன்தினம் இரவு மரணமடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

அதே இடத்தைச் சேர்ந்த ஜெயசீலன் டிலக்சன் என்ற சிறுவனே உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

சம்பவ தினத்தன்று கணவனுக்கும் மனைவிக்குமிடையே சண்டை ஏற்படவே கணவன், மனைவியை அடிப்பதற்காக முயன்ற போது மனைவியின் இடுப்பில் இருந்த குழந்தை நிலத்தில் இருந்த பள்ளமொன்றில் வீழ்ந்து தலையில் காயம் ஏற்பட்டதாகவும், எனினும் அந்தக் குழந்தை வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல வாகனம் இல்லாததன் காரணமாக மறுநாளே வைத்தியசாலைக்கு கொண்டு வந்து சேர்ந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட பெண்ணின் கணவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (பா)

# மாணவர்களுக்கான மாலை நேர வகுப்புகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட சர்வோதய நிறுவனத்தால் பின்தங்கிய பாடசாலை மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் நோக்கில் மாலை நேர வகுப்புக்கள் நடத்தப்பட்டுவருகின்றன.

இம்மாவட்டத்திலுள்ள பாரதிபுரம், கிருஸ்ணபுரம், பன்னங்கண் மருதநகர், மலையாளபுரம் போன்ற 5 கிராமங்கள் தெரிவு செ யப்பட்டு இக்கிராமத்தில் கல்வியைத் தொடரும் மாணவர்களுக்கு நிறுவனம் மாலை நேர வகுப்புக்களை நடத்திவருகின்றது.

இவ்வகுப்பில் இக்கிராமங்களைச் சேர்ந்த 250 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (கே)


## INVITATION FOR BIDS
## TEACHING HOSPITAL, JAFFNA

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna. invite sealed bids from eligible and qualified bidders for the construction and renovation works in the schedule below.

| Work/Service Details | Non-refundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity Period of Bidsecurity (Days) | Approximate Direct cost of the work (Rs. In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|
| Improvements and Repairs of the Sewerage Treatment Plant | 500.00 | 56,000.00 | 90 | 2.79 | C-8 |

1. Bidding will be conducted through National Competitive Bidding Procedure
2. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the Institute for Construction, Trainimg and Development (ICTAD).
3. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.
4. A Complete set of Bidding Documents in English Language may be purchased by interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 2013.11.27 until 2013.12.04. The payment shall be made to the Shroff s Office, Teaching Hospital, Jaffna.
5. Sealed bids shall be delivered to the address below at before 10.00 hrs on 2013.12.05, late bids will be rejected. Bids will be open at 10.15 hrs at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders' representatives who choose to attend.

Director (Chairman),
Regional Procurement Committee,
Teaching Hospital, Jaffna.
26/11/2013.

(C/3204)


# ஆட்டோ சங்கம் அமைக்க நகரசபையில் தீர்மானம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பகுதியில் முச்சக்கர வண்டியை வாடகைக்கு விடுபவர்களுக்கான சங்கமொன்றை அமைப்பது குறித்து நகரசபை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

சாவகச்சேரி நகரசபையின் மாதாந்தக் கூட்டம் அண்மையில் சபை மண்டபத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நகரசபையின் செயற்திட்டங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

இதன்போது சாவகச்சேரிப் பகுதியில் முச்சக்கர வண்டியை வைத்திருப்போர் அதனை வாடகைக்கு விடுவதற்கு ஏதுவாக சங்கமொன்று அமைக்கப்படவேண்டும்.

சங்கம் ஒன்று இருந்தால் அதனூடாக இதனைச் செயற்படுத்துவது முறையானதாக இருக்கும் என நகரசபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் சாள்ஸ் சபையின் கோரிக்கையை முன்வைத்தார்.

இதனை ஏற்றுக்கொண்ட சபைத் தவிசாளர் சங்கம் அமைப்பது தொடர்பான நடவடிக்கையை மேற்கொள்வதற்காக உபதவிசாளரை நியமித்துள்ளார். (11)

## முன்னெச்சரிக்கை விழிப்புணர்வு ஒத்திகைப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலக பிரிவில் உள்ள அரியாலை கிழக்கு பிரதேசத்தில் J/89 கிராம உத்தியோகத்தர் பிரிவில் இன்றைய தினம் முற்பகல் 10 மணிக்கும், அரியாலை தென் கிழக்கு J/90 கிராம உத்தியோகத்தர் பிரிவில் பிற்பகல் 3 மணிக்கும் அனர்த்த முகாமைத்து பிரிவினரால் முன்னெச்சரிக்கை விழிப்புணர்வும், ஒத்திகைப் பயிற்சிச் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

எனவே இது தொடர்பில் பொது மக்களை அமைதியாக இருக்குமாறும், இது ஒரு ஒத்திகைச் செயற்பாடு என்பதால் எவரும் குழப்பமடையத்தேவையில்லை எனவும் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தெரிவித்துள்ளார்.

# மீள்குடியேற்றப்பட்ட கிளாலியில் 200 ஏக்கரில் நெற்செய்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கிளாலி பிரதேசத்தில் இவ்வருடம் 200 ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட கமநல சேவை திணைக்கள அபிவிருத்தி உதவி ஆணையாளர் தயாரூபன் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக தெரிவிக்கையில்,

யுத்த அனர்த்தங்களின் பின்னர் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட நிலையில் இப்பிரதேசத்தில் கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகள் இடம்பெற்று வந்தன.

இப்பிரதேசத்தில் தற்போது முழுமையாக கண்ணிவெடி அகற்றப்பட்ட நிலையில் 200 ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் இப்பிரதேசத்தில் நெற்செய்கை மேற்கெண்டுள்ள விவசாயிகளுக்கு விதை நெல், மானிய உரம் என்பன வழங்கப்பட்டுள்ளன. இதனால் விவசாயிகள் நெற்செய்கையை மும்முரமாக மேற்கொண்டுள்ளனர்.

நீண்ட காலத்தின் பின் இப்பிரதேசத்தில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது இதன் மூலம் இப்பிரதேசத்தில் விவசாயத்தை நம்பியிருக்கம் மக்கள் பெரும் நன்மையடைந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (கே)

# கடைத்தொகுதி அமைப்பு

முல்லைத்தீவு நகரத்தின் முல்லைத்தீவு பொதுச்சந்தையை அண்டிய பகுதியில் 26 மில்லியன் ரூபா செலவில் நவீன கடைத்தொகுதி அமைக்கப்படவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தை மீளக்கட்டியெழுப்பும் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு பொதுச்சந்தைக்கு அருகாமையில் இந்நவீன கடைத்தொகுதி அமைக்கப்படவுள்ளதாக கரைத்துறைப் பற்று பிரதேசசபையினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (கே)

# மாணவர்களின் ஆளுமைவெளிவர பாடசாலை சமூகம் உதவவேண்டும்

## வடமாகாண கல்வி அமைச்சர்

(வடமராட்சி)

மாணவர்களிடையே புதைந்து கிடக்கின்ற ஆற்றல்களை ஆளுமைகளை வெளிக்கொண்டு வருவதில் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் அக்கறையுடன் செயற்படவேண்டும். அதன் மூலமே பாடசாலைக்கு பெருமை கிடைக்கும் என வடமாகாண கல்வி அமைச்சர் கே.குருகுலராஜா தெரிவித்தார்.

வடமராட்சி கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற வர்ண இரவு நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

முன்னர் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண காலங்களில் வடமாகாணத்தின் கல்வி நடவடிக்கைகள் பின்தங்கிய நிலையில் காணப்பட்டதுடன் மாணவர்கள் அச்ச உணர்வுடன் கல்வியைத் தொடர்ந்தனர்.

ஆனால் தற்போது அச்சவுணர்வு நீங்கி மாணவர்கள் சுதந்திரமாக கற்றல் செற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர். தற்போது வடமாகாண மாணவர்களின் கல்வித்தரம் உயர்வடைந்துள்ளது.

அந்தவகையில் வடமராட்சி வலய பாடசாலை மாணவர்கள் கல்வியில் மட்டுமல்லாது விளையாட்டு மற்றும் இணைப்பாட செயற்பாடுகளிலும் சாதனைபடைத்து வருகின்றனர்.

பல மாணவர்கள் விளையாட்டுப் போட்டிகளில் தேசிய ரீதியில் பதக்கங்களைப் பெற்றுள்ளமை பாராட்டத்தக்க விடயமாக உள்ளது.

எனவே கல்வியிலும் விளையாட்டிலும் மற்றும் ஏனைய இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் திறமைமயாக செயறபடும் மாணவர்களை இனங்கண்டு பாடசாலை சமூகத்தினர் ஊக்கமளிக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (109)

# பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட கோழிக்குஞ்சுகளுக்கு தடுப்பூசி

(மன்னார்)

மன்னார் பிரதேசத்தில் சமுர்த்தி பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட கோழிக்குஞ்சுகளுக்கு த[illegible]பூசி ஏற்றும் செயற்றிட்டம் நேற்று இடம் பெற்றது.

மன்னார் கால் நடை வைத்திய அதிகாரி பணிமனையினால் கோழிக்குஞ்சுகளுக்கான தடுப்பூசி ஏற்றப்பட்டது. இதில் முதற்கட்டமாக 100 கோழிக்குக்குஞ்சுகளுக்கு தடுப்பூசி ஏற்றப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

இப்பிரதேசத்தில் வாழ்வாதார ரீதியாக வறுமையில் வாழும் குடும்பங்களுக்கு சுய தொழிலை மேற்கொள்ளும் முகமாக முன்னர் சமுர்த்திப் பயனாளிகளில் 10 குடும்பங்களுக்கு தலா 10 கோழிக்குஞ்சுகள் வீதம் வழங்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (140)

# 4ஆவது வர்ண இரவு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் 4ஆவது வர்ண இரவு நிகழ்வு நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜாவின் அழைப்பின் பேரில் வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் முதன்மை விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

# மரக்கன்றுகள் விநியோகம்

உடுவில் பிரதேச செயலர்பிரிவிற்குட்பட்ட கிராம மக்களுக்கு பயன்தரு மரக்கன்றுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

குறித்த பிரிவிலுள்ள கிராமங்கள் தோறும் கிராம அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பட்டதாரி பயிலுநர்கள் ஆகியோர் சென்று தென்னை, பலா, மா, தேசி போன்ற பயன்தரு மரக்கன்றுகளை மக்களுக்கு வழங்கி வருகின்றனர்.

# விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(கொடிகாமம்)

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கிராமங்களைச் சேர்ந்த ஆலய நிர்வாகத்தினர், பிரதேச கலைஞர்கள் அறநெறி பாடசாலை பொறுப்பாசிரியர்கள் கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கான கலாசார விழிப்புணர்வுக் கருத்தரங்கு பிரதேச செயலர் தலைமையில் கடந்த சனிக்கிழமை பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வளவாளர்களாக கிளிநொச்சி மாவட்ட உதவித் திட்டமிடல் பணிப்பாளர் கேதீஸ்வரன், கிளிநொச்சி மாவட்ட உள மருத்துவ சமூகப்பணியாளர் வி.ராமேந்திரா முதலானவர்கள் பங்குபற்றியிருந்தனர்.

இந்நிகழ்வானது கிளிநொச்சி மாவட்டத்திலேயே முதன் முறையாக பச்சிலைப் பள்ளி (பளை) பிரதேச செயலர் பிரிவில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (130)

# சாவகச்சேரி பகுதியில் மாடுகள் திருட்டு

(கொடிகாமம்)

சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட கொடிகாமம் வடக்கு, குடமியன் போன்ற பகுதிகளில் மாடுகள் இரவு வேளைகளில் திருட்டுப் போவதாக பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மாடுகள் கட்டியிருக்கும் இடங்களில் இரவு வரும் மர்ம நபர்கள் மாட்டினைக் கொண்டு சென்று மக்கள் நடமாட்டம் குறைந்த பகுதிகளில் வைத்து இறைச்சியாக்கி சந்தைக்குக் கொண்டு செல்வதாகவும் தெரிவிக்கின்றனர்.

மேலும் இப்பகுதியில் அண்மையில் இரவு திருட்டுப் போன மாட்டினை காலையில் மாடு கொண்டு சென்ற காலடியின் உதவியுடன் பின் தொடர்ந்தவேளை அடர்ந்த பற்றைக்குள் மாடு கண்டுபிடிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

எனவே இந்த விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுத்து உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (130)



கிளிநொச்சி வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் இவ் வருடம் தரம் 5 புலமைப் பரிசில பரீட்சைக்குத் தோற்றி வெட்டுப் புள்ளியைப் பெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு விழாவில் மாணவர்களுடன் வலயக்கல்விப் பணிப்பாளர் கே. முருகவேல் உட்பட பாடசாலை அதிபர் ஆசிரியர்கள் நிற்பதை காணலாம். (90)

# மக்களுக்கு சேவை செய்ய மா.சபை உறுப்பினர்கள் படுகின்ற அந்தரம்...!




வடமாகாணசபையில் நடப்பது என்ன என்று அறியத் துடிக்கின்றனர் மக்கள்.

ஆனால், கிழக்கு மாகாணசபையில் என்ன நடக்கிறது என்று அறியத் துடிக்கிறார்கள் மாகாணசபை உறுப்பினர்கள்.

தங்களுடைய மாகாணசபையில் என்ன நடக்கிறது என்று அறிவதில் மக்களுக்கிருக்கும் ஆர்வம் தேவையானது.

மாகாணசபையின் மூலமாக பல தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டிய நிலையில் இருக்கும் மக்கள் நிச்சயமாக அதை அவதானிப்பார்கள்.

அதையும் விட மாகாணசபையை ஆட்சி செய்யும் தரப்புக் குறித்தும் மக்களுக்குச் சில கேள்விகள் இருக்கிறது.

அந்தக் கேள்விகளும் மாகாணசபையை அவர்கள் உன்னிப்பாகக் கவனிக்க வைக்கிறது.

எனவே அவர்கள் அதை மிகக் கூர்மையாகக் கவனிக்கிறார்கள்.

ஆட்சிப் பொறுப்பை ஏற்றவர்கள் அதைச் சரியாக வழிநடத்துகிறார்க்ளா? நிர்வகிக்கிறார்களா என.

ஏனென்றால் உள்குத்துகளும் குழிபறிப்புகளும் ஏட்டிக்குப் போட்டிகளும் ஒத்துழையாமையுமாக இருக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின்(?) உறுப்பினர்கள் இப்படியான கேள்விக்கு இடம் வைத்துள்ளனர்.

அதேவேளை இந்த மாகாணசபையில் அரசாங்கம் தேவையில்லாமல் மூக்கை நுழைத்து அதைக் குழப்பப் பார்க்கிறதா? எனவும் மக்கள் பார்க்கின்றனர்.

ஆனால், கிழக்கு மாகாணசபையைப் பற்றி வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் அறியத் துடிப்பது வேறு சங்கதிகளுக்காக.

ஒரு மாகாணசபை உறுப்பினருக்கு என்னென்ன வசதிகள், சலுகைகள், கொடுப்பனவுகள் எல்லாம் கிடைக்கும்?

அதையெல்லாம் எப்படிப் பெறுவது?

எப்போதிருந்து அவை கிடைக்கும்?

இதை விட தங்களுக்கு வேறு என்னென்ன அதிகாரங்கள் உண்டு? அதை எப்படிப் பாவிக்கலாம்?

இந்த மாதிரியான கேள்விகளோடு தகவல்களைப் பெறுவதற்காக அவர்கள் முன்னாள், இந்நாள் மாகாண சபை உறுப்பினர்களைத் தொடர்பு கொண்டு துளைத்தெடுக்கிறார்கள்.

சிலர் பிள்ளையானை (கிழக்கு மாகாணசபையின் முன்னாள் முதல்வர் சிவனேசதுரை சந்திரகாந்தனை) க்கூட தொடர்பு கொண்டு விசாரித்திருக்கிறார்கள்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் எப்படிப் பிள்ளையானைத் தொடர்பு கொண்டு இதையெல்லாம் கேட்கலாம் என நீங்கள் கேட்கலாம்.

அந்தரம் ஆபத்துக்குப் பழி பாதகம் இல்லை என்பதைப் போல இந்த வசதி வாய்ப்புகளைப் பெறும் அந்தரத்தில் இருக்கும்போது துரோகியும் தியாகியும் என்று பார்க்க முடியுமா?

முதலில் காரியம் முடியவேணும்.

பிறகு மற்றதைப் பார்த்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறார்கள் இவர்கள்.

தங்களுக்குத் தேவையென்றால் யாருடைய கையையும் காலையும் பிடித்துத் தேவையானதையெல்லாம் பெற்றுக்கொள்ளும் தமிழ்த் தலைமைகளின் பழக்கமும் வழக்கமும் இதுதான்.

ஆனால், இதை மக்கள் செய்தாலோ அல்லது மற்றவர்கள் செய்தாலோ அது மாபெரும் குற்றம். படு பாதகச் செயல்.

இதுக்கு என்னய்யா நீதி?

காலம் முழுக்க இப்படிச் சலுகைகளை அடைவதையே குறிக்கோளாகக் கொண்டு இயங்கும் ஒரு கூட்டத்தை மக்களும் தப்பாமல், தவறாமல் தெரிவு செய்து கொண்டேயிருக்கிறார்கள்.

மக்களின் மொக்குத்தனத்தை வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொண்டு ஒரு கூட்டம் பிழைத்துக் கொண்டேயிருக்கிறது. அதுவும் தலைமுறை தலைமுறையாக.

மாகாணசபையின் மூலமாக கிடைக்கும் வசதிகள், வாய்ப்புகள், வளங்களை ஆண்டு அனுபவிப்பது ஒரு புறம். மற்றப்பக்கத்தில் அதை வைத்தே உழைக்கவும் ஆயத்தப்படுத்துகிறார்கள் சில சுழியன்கள்.

நடக்கவுள்ள வேலைத்திட்டங்களில் ஒப்பந்தங்களை எடுத்துத் தருவேன், வேலைவாய்ப்புகளில் முன்னுரிமை அளிப்பேன், இடமாற்றங்களில் செல்வாக்குச் செலுத்துவேன் என ஆளாளுக்கு போட்டி போட்டுக்கொண்டு ஊர்களில் கதைகளை எறிகிறார்கள்.

இதுவும் இறால் போட்டுச் சுறாப்பிடிக்கும் நோக்கம்தான்.

எப்படியும் இந்த மாகாண சபை ஆட்சிக்காலத்தில் உழைக்கக் கூடியதை உழைத்து வாரிச்சுருட்டக் கூடியதை வாரிச்சுருட்டிக் கொண்டு விட வேணும் என ஆலாய்ப்பறக்கிறார்கள்.

ஆனால் தேர்தல் காலத்தில் என்னமாதிரி எல்லாம் சொன்னார்கள் அம்மா!

தேசியத்துக்காக எதையும் துறப்போம்! தமிழ் மக்களுக்காக எதையும் சுமப்போம்!! என்ற மாதிரி... ஆயிரம் உல்டாக்கள்.

எல்லாமே உல்டாக்கள்தான்.

வாழ்வின் அறநெறியை தேடுபவன் தன் வாழ்வின் அன்புநெறியை உணர்ந்திருத்தல் அவசியம். -பொன்மொழி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## வழியா இல்லை பூமியில்?

சோமர்செட் மாமின் கதை ஒன்று. ஒரு இளைஞன் மாதா கோயிலுக்குச் சென்று தனக்கு வேலை கேட்டான். மாதா கோயிலில் மணியடிக்கும் வேலையில் அவனை நியமித்தார்கள். சம்பள நாள் அன்று அவனைப் பதிவேட்டில் கையொப்பமிடச் சொன்னபோது தனக்கு எழுதப் படிக்கத் தெரியாது என்றான். அவனை வேலையிலிருந்து நீக்கி விட்டார்கள்.

அவன் அதே ஊரில் சிறு பெட்டிக்கடை வைத்து வியாபாரத்தை ஆரம்பித்து படிப்படியாக முன்னேறிப் பெரிய பணக்காரனாகிவிட்டான். பெருந் தொழிலதிபராகிவிட்ட அவனைப் பேட்டி காணப் பத்திரிகையிலிருந்து வந்தார்கள்.

அவர்களது கேள்விகளின் போது தனக்கு எழுதப் படிக்கத் தெரியாது என்பதையும் அவன் சொன்னான். ஆச்சரியப்பட்ட அவர்கள், "எழுதப் படிக்கத் தெரியாமலேயே இவ்வளவு பெரிய ஆளாகியிருக்கிறீர்களே... நீங்கள் மட்டும் படித்திருந்தால் எப்படி ஆகியிருந்திருப்பீர்கள்?" என்றனர்.

"ஒன்றுமில்லை. மாதா கோயிலில் மணியடிப்பவனாக இருந்திருப்பேன்!" என்றான் அந்தப் பணக்காரன்.

நல்ல பள்ளிக்கூடத்தில் சேருவது முதல், வேலை அல்லது வியாபார முயற்சிகள் வரை வாழ்க்கையின் எல்லாக் கூறுகளிலும் மற்றவர்களுடன் போட்டியிட்டு முதல் வரிசையில் இடம் பிடிக்கிறவர்களே முன்னேற முடியுமென்ற எண்ணம் எல்லோரிடமும் உள்ளது. வெற்றி பெறப் போட்டிகள் அவசியமில்லை என்று பீற்றர் தியல் கூறுகிறார்.

இவரும் எல்லாப் போட்டிப் பரீட்சைகளும் எழுதி எழுதி வென்று, கடைசியில், உச்ச நீதிமன்ற வேலைக்கான தகுதி காண் பரீட்சையில் தோல்வியுற்றவர். அத்துடன் பரீட்சைகள் எழுதுவதை விட்டுவிட்டு பேபால் என்ற இணையத் தளத்தை நிறுவினார். ஃபேஸ்புக் நிறுவனத்திலும் வேறு பல தொழில்நுட்ப நிறுவனங்களிலும் பங்குகளை மலிவாக வாங்கிப் போட்டார். அதனால் இன்று ஒரு கோடீஸ்வரராகி இருப்பவர். உச்ச நீதிமன்றத்தில் பதவி கிடைக்காமல் போனதால் கிடைத்த பலன் இது என்கிறார்.

போட்டி கடுமையாக இருக்கும்போது போட்டியில் கலந்து கொள்ளாமலிருப்பதே நல்லது என்று தியல் கூறுகிறார். அதைவிடப் போட்டிகள் இல்லாத அல்லது குறைவாக இருக்கிற களங்களில் இறங்கிச் சிறு சிறு வெற்றிகளையும் சாதனைகளையும் எட்டுவது மேலானது. பல்லாயிரம் பேருடன் போட்டியிட்டு முதலிடத்தை எட்ட முயலுவதைவிட ஒரு புதுப்புனைவான செயல்திட்டத்தை உருவாக்கி அதில் முதலிடத்திற்கு வருவது சிறப்பு என்பது தியலின் கருத்து.

மாணவர்கள் எல்லோருமே பரீட்சையில் முதலிடம் பெறும் முயற்சியில் எல்லாப் பாடங்களிலிருந்தும் கேள்வி வரக்கூடிய சில குறிப்பிட்ட பகுதிகளை மட்டுமே படிக்கிறார்கள். நேரப் பங்கீடு செய்து கொண்டு பழைய கேள்வித் தாள்களிலிருந்தும், துணை நூல்களிலிருந்தும் கேள்விகளைத் தேர்ந்தெடுத்துப் படித்து கூடிய புள்ளிகள் வாங்கும் போட்டியில் இறங்குகிறார்கள். அறிவைவிட வெற்றியே முக்கியமானதாகிறது.

மாணவர்கள், எல்லோரும் விரும்பும் துறைகளிலேயே தாங்களும் சேர்ந்து படிக்க விரும்பாமல், தங்களுக்குப் பிடித்த துறை எதுவோ அதை விரும்பித் தேர்ந்தெடுத்துப் படித்து வெல்வதுதான் புத்திசாலித்தனம் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

மருத்துவம் பொறியியல், வங்கி, கணக்காளர்களோடு உலகம் முடிந்துவிடவில்லை. வெற்றியடைய வேறு பல துறைகள் உள்ளன. வாழ நினைத்தால் வாழலாம், விரும்பியதை செய்து வெற்றியடையலாம்... வழியா இல்லை பூமியில்?

- ஆசிரியர்.

# நாட்டில் இருக்கும் உண்மையான தேசப்பற்றாளர்கள் நாங்களே

## நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர

(கொழும்பு)

நாட்டில் இருக்கும் உண்மையான தேசப்பற்றாளர்கள், தான் உட்பட தன்னுடன் இருக்கும் அணியினரே என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

நாட்டில் இருக்கும் உண்மையான தேசப்பற்றாளர்கள் நாங்களே. ஆனால் தேசப்பற்றாளர்கள் என்பதால் இனத்தையும் மதத்தையும் விற்று வாழ விரும்பவில்லை.

அத்தோடு நாங்கள் தேசப்பற்றாளர்கள் என்று மார்பில் முத்திரைகளை ஒட்டிக்கொண்டு இருப்பதில்லை.

கொழும்பில் பொதுநலவாய நாடுகளின் மாநாடு நடைபெற்ற போது வெளிநாட்டில் இருந்து வந்த பிரித்தானிய பிரதமர் கமரூன், சனல் - 4 தொலைக்காட்சியினரை விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் என்று அரசாங்கம் பிரசாரம் செய்தது.

இலங்கையில் வாழும் நான், விக்ரமபாகு மற்றும் எங்கள் கட்சியின் தலைவர் ஆகியோர் புலிகளின் ஆதரவாளர்கள் என்று கூறி எமது நற்பெயரை முற்றாக அழிக்க முயற்சிக்கின்றனர்.

உண்மையில் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் எங்கு இருக்கின்றனர்? எமது பிரச்சினைகளுக்காக கமரூனையோ, சனல் - 4 தொலைக்காட்சியையோ வேறு எவரையுமோ திட்டுவதில் எந்தப் பலனுமில்லை என்றார்.

# எழுவைதீவு கடலில் கைதான 15 இந்திய மீனவர்கள் விடுதலை

(யாழ்ப்பாணம்)

யாழ். எழுவைதீவு கடற்பரப்பில் கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 15 பேரும் சட்டமா அதிபரின் உத்தரவிற்கமைய ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிபதி எம்.எஸ்.மகேந்திரராஜாவினால் நேற்றைய தினம் விடுதலை செய்யப்பட்டனர்.

இந்திய புதுக்கோட்டை ஜனதாபட்டிணத்திலிருந்து 4 படகுகளில் வந்த 15 மீனவர்கள் கடந்த ஒக்ரோபர் மாதம் 14 ஆம் திகதி திங்கட்கிழமை இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் காரைநகர் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

மேற்படி மீனவர்கள் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தினால் தொடர்ந்து மூன்று தடவைகள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்நிலையில், மேற்படி வழக்கு மீண்டும் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, சட்டமா அதிபரின் உத்தரவிற்கமைய மீனவர்களை விடுதலை செய்வதாக நீதிபதி தெரிவித்ததுடன், மீனவர்கள் வந்த 4 படகுகள் தொடர்பான வழக்கினை எதிர்வரும் டிசம்பர் மாதம் 17 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

அத்துடன், அத்தினத்தில் மேற்படி 4 படகுகளின் உரிமையாளர்களும் நீதிமன்றத்திற்கு வருகை தரவேண்டுமெனவும் உத்தரவிடப்பட்டுள்ளது. (25)

# மேல்மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக விக்கிரமபாகு

(கொழும்பு)

விரைவில் கலைக்கப்படவுள்ள மேல் மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிட நவசமசமாஜக் கட்சியின் தலைவர் விக்ரமபாகு கருணாரட்ன தீர்மானித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறுபான்மை கட்சிகள் மற்றும் இடதுசாரி கட்சிகளுடன் கூட்டணி அமைத்து எதிர்வரும் மேல் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட தீர்மானித்துள்ளோம்.

மனோ கணேசனின் ஜனநாயக மக்கள் முன்னணி, அசாத் சாலியின் தேசிய ஐக்கிய முன்னணி, சிறிதுங்க ஜயசூரியவின் ஐக்கிய சோசலிசக் கட்சி ஆகியவற்றுடனும் சில தொழிற்சங்கங்களுடனும் ஏற்கனவே பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது.

அரசியல் இலாபத்திற்காக முதலாளித்துவக் கட்சிகளுடன் இணைந்து தேர்தல்களில் போட்டியிட போவதில்லை.

அரசாங்கத்திற்கு எதிரான கட்சி என்ற வகையில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் எதிர்ப்பு செயற்பாடுகளில் பங்கு கொண்டாலும் எந்த சந்தர்ப்பத்திலும் அந்தக் கட்சியுடன் கூட்டணி அமைக்க போவதில்லை என்றார்.

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு குறித்து மாவட்ட பணியகங்களில் முறையிடலாம்

(கொழும்பு)

வேலைவாய்ப்புக்காக வெளிநாடு செல்லும் ஊழியர்கள் தொடர்பாக முறைப்பாடுகள் செய்வதாயிருந்தால் இனி கொழும்பு வரத்தேவையில்லை. அந்தந்த மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திலுள்ள அலுவலகங்களிலேயே முறைப்பாடு செய்யலாம் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலன்புரி அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் வைத்து நேற்று ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், முறைப்பாடு செய்யப்பட்டு 50 விநாடிகளுக்குள் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் பதிவு செய்யப்பட்ட முகவருடன் தொடர்பு கொண்டு பிரச்சினை குறித்து அறிவிக்கும். 48 மணிநேரத்துக்குள் பிரச்சினைகள் தொடர்பான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும்.

பணியாளர்கள் வீடுகளிலிருந்து தப்பிச் சென்றிருப்பார்களாயிருந்தால் அவர்களது பிரச்சினை தொடர்பாக ரியாத், ஜெடாஹ்ஹி ஆகிய பிரதேசங்களிலுள்ள அலுவலகங்கள் 24 மணிநேரமும் செயற்படும். அதேபோல் நடமாடும் சேவைகளும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. சட்டவிரோதமாக தங்கியிருந்தவர்களுக்கு கடந்த யூலை மாதம் பொது மன்னிப்பு வழங்கப்பட்டது. அப்போது 16000 பேருக்கு வசா கிடைத்து நாடு திரும்பினர். மேலும் தற்காலிகமாக பணியாற்றிக்கொண்டிருந்தவர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமாக தங்கியிருந்த 5500 பேர் பொது மன்னிப்புக் காலத்தில் தம்மை சட்டரீதியாக பதிவு செய்துகொண்டுள்ளனர். மேலும் ஒரு பெண் வெளிநாடு செல்வதாக இருந்தால் அவர்து குடும்பப் பின்னணி பற்றிய அறிக்கை சமர்ப்பிப்பது அவசியம். இதற்கெதிராக பதிவு செய்யப்பட்ட முகவர்கள் நீதிமன்றத்துக்குச் சென்றாலும் அங்கும் அது உறுதி செய்யப்பட்டுள்ளது. தற்போது பெண்கள் வெளிநாடு செல்வது ஐம்பது வீதத்திலிருந்த 37 வீதமாக குறைந்துள்ளது என்றார்.


## மகளை துஷ்பிரயோகம் செய்த தந்தைக்கு 100 வருட சிறை

தன்னுடைய 10 வயது மகளை நிர்வாணமாக படம்பிடித்து பல நாட்களாக துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியதாகக் கூறப்படும் சாரதியான தந்தையை குற்றவாளியாக இனங்கண்ட நீதவான் கடும் வேலைகளுடன் கூடிய 100 வருடங்கள் சிறைத்தண்டனை விதித்தார்.


கம்பஹா மேல் நீதிமன்ற நீதிபதி பியசீலி விக்ரமசிங்கவே மேற்கண்டவாறு தண்டனை விதித்ததுடன் குற்றவாளியான தந்தைக்கு 90 ஆயிரம் ரூபா தண்டமும் ஒரு இலட்சம் ரூபா நட்டஈடும் வழங்குமாறு உத்தரவிட்டார்.

சந்தேகநபரான தந்தைக்கு எதிராக விதிக்கப்பட்ட 12 குற்றச்சாட்டுகளிலும் அவர் குற்றவாளியாக நீதிமன்றத்தினால் இனங்காணப்பட்டார்.

தன்னுடைய மகளுக்கு பாதுகாப்பாக இருக்க வேண்டிய தந்தையே துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தி இருப்பதால் அதனை தெளிவுபடுத்துவதற்கு சிங்களத்தில் வார்த்தைகள் இல்லை என்றும் நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்தார்.



நாம் கதையில் எது உண்மை, எது கற்பனை என்று ஏற்றுக்கொள்கிறோமோ அதைப் பொறுத்துக் கதையை, கதைசொல்லியை நாம் பார்க்கும், புரிந்து கொள்ளும் விதம் மாறுவதால் ஒரு வாசிப்பிலேயே பல கதைகளை இந்த நாவல் கொடுக்கக் கூடியது. இப்படிப்பட்ட நூல் இது என்று அறுதியிட்டுக் கூறமுடியாத, பன்முகத்தன்மை கொண்டதாக உள்ளதாலேயே இது பலருடைய வாசிப்பிலிருந்து விடுபட்டிருக்கலாம். 1968இல் வெளிவந்திருந்தாலும் இன்று தான் எழுதப்பட்டது போல் புத்தம் புதியதாக உள்ளது.




# இரண்டாம் உலகம்

## [It Happened in Boston? – புத்தக விமரிசனம்]

ஆர்.அஜய்

விமர்சகர்களிடம் அதிக புகழ் பெறாமல், சந்தையிலும் பெரிய அளவில் விற்காமல், அதாவது மைய நீரோட்டத்திற்கு வராமல், ஒரு சிறிய வட்டத்திற்குள் மிகவும் பேசப்பட்ட ஒரு நூல் ரஸ்ஸல் எச். க்ரீனன் (Russell H. Greenan) எழுதிய 'It Happened In Boston?' நாவல். இதை ஒரு underground cult classic என்று கூறலாம்.

"சமீப காலங்களாக இந்த புறாக்கள் என்னை வேவு பார்க்கின்றன என்று எண்ணத்தொடங்கி உள்ளேன்" என்ற நாவலின் முதல் வாக்கியத்திலிருந்தே ஆச்சரியங்கள் தொடங்குகின்றன. இது அதி புனைவா, மர்ம நாவலா, திகில் நாவலா, கலைஞர்கள், கலை உலகம், அதில் நடக்கும் மோசடிகள் பற்றியதா, அல்லது ஒரு சிதைந்து கொண்டிருக்கும் மனதின் நாட்குறிப்பா என்று இறுதி வரை எந்த முடிவுக்கும் வரமுடியாமல், நாவலின் பெயரிடப்படாத கதைசொல்லியை, அவன் மனதை நாம் பின்தொடர்கிறோம். ஒரு கதையை நேர்கோட்டில் நடக்கும் சம்பவங்களாக எழுதி, பக்கங்களை முன் பின்னாக மாற்றிப் பிரசுரித்தால் எப்படி இருக்குமோ அப்படி உள்ளது இது. கதையோட்டம் அவ்வப்போது சில ஆபத்துக்களையும் (எப்போதும் கீழே விழுவோமோ) உணரச்செய்யும். நம்மைக் கிறக்க நிலையில் அடிக்கடி வைத்திருக்கும் (hallucinatory) பயணம் தான் இந்த நாவலை வாசிக்கும் அனுபவம்.

இந்த நாவலைக் கதைசொல்லி சொல்லும் சம்பவங்களை வைத்து மூன்று நிலைகளாக பிரிக்கலாம், அதே நேரம் நாவல் மூன்று அடுக்குகளாகவும் உள்ளது (three act structure). முதல் பகுதி அதி புனைவு போல் உள்ளது. கதைசொல்லி தனக்குச் சில காலமாக வேறு காலகட்டத்தில், வேறு நாடுகளுக்கு செல்லும் மனத்திறன் கிடைத்துள்ளதாகக் கூறுகிறார். இதை பகற்கனவென்றோ, அவரின் கற்பனை உலகமென்றோ சொல்ல முடியாது, அவர் இந்த உலகினில் செல்லும் போது முற்றிலும் தன்னிலை இழப்பதில்லை என்று சொல்கிறார். இதை 'mind translation' என்கிறார். இப்படி நாவலின் ஆரம்பத்திலேயே அவர் சொல்லும் போது, அவரின் நம்பகத்தன்மை குறித்து நமக்கு கேள்வி எழுகிறது (நாவலின் முதல் வரியையும் நினைவு கொள்ளுங்கள்), எனினும் அவரைப் பின்தொடர்கிறோம். படிக்கப் படிக்க வழுக்கிச் செல்வது போல் செழிப்பான ஒரு 'sensory pleasure'ஐ தரக்கூடிய நடையைக் கொண்டது இந்த நாவல். அதாவது, படிக்கும் போது நம் உடலிலும் ஒரு வித கிளர்ச்சியை உணர வைக்கக்கூடிய மொழி.

கதை சொல்லியின் இரு நெருங்கிய நண்பர்கள் பெஞ்சமின் மற்றும் ஃபேபர். இவர்களும் ஓவியர்கள் தான். மூவரும் நவீன ஓவிய முறைகளில் நாட்டமில்லாதவர்கள், ஐரோப்பிய மறுமலர்ச்சி (Renaissance) காலத்திய பாணியை விரும்புகிறவர்கள்.

விக்டர் டேரியஸ் என்ற ஓவிய உலகின் பெரும்புள்ளி கதைசொல்லியின் ஓவியங்களால் ஈர்க்கப்பட்டு அவற்றை நல்ல விலை கொடுத்து வாங்குகிறான், பின்னர் கலை ஆர்வலர்களிடம் விற்கிறான். ஆனால் அவை அனைத்தும் ஐரோப்பாவில்தான் விற்பனையாகின்றன. மேலும் அவன், கதைசொல்லியை மறுமலர்ச்சி பாணியில் (குறிப்பாக டாவின்சி) ஒரு செல்வந்தரின் பெண்ணை வரைய வேண்டும் என்கிறான். செல்வந்தர் டாவின்சியின் பரம பக்தர் எனவும் அதனால் ஓவியத்திற்கான வண்ணங்கள், கான்வாஸ் அனைத்தும் பழமையானதாக இருக்க வேண்டும் என்கிறான். வரைந்து முடித்து கதைசொல்லி திரும்பும் போது, அவரிடம் உள்ள அவர் வரைந்த ஓவியத்தின் மாதிரி கோட்டோவியங்கள் களவு போகின்றன. இவை அனைத்திற்கு ஏதேனும் தொடர்பு உண்டா அல்லது அனைத்தும் நியாயமான விளக்கங்கள் இருக்கும் தற்செயலான சம்பவங்களா? இப்படி இந்தப் பகுதியில் ஒரு மர்மம் நாவலில் கவிழ்கிறது.

கதை சொல்லி சொல்வது உண்மையா என்று தோன்றினாலும் முதல் பகுதியில் ஒரு அதி-புனைவுத் தன்மை உள்ளது. இரண்டாம் பகுதியில் என்ன நடக்கும் என்ற எதிர்பார்ப்பு ஏற்படுகிறது. மூன்றாம் பகுதியில் என்ன நடக்குமோ, மோசமாக எதாவது நடந்து விடுமோ என்ற அச்சம் உண்டாகிறது. இப்படி நாம் உணர்வுகள் மாறிக்கொண்டே இருந்தாலும் எங்குமே முந்தைய பகுதியிலிருந்து துண்டிக்கப்பட்டது போல் தோன்றுவதில்லை. முந்தைய பகுதியின் நீட்சியாகவே இதுவும் இருக்கிறது. ஒரே நாவலில் பல கலவையான வகைமைகளை ஆசிரியர் அனாயாசமாக எழுதிச் செல்கிறார்.

பெஞ்சமின் ஓராண்டுக்கு மேல் வரைந்து முடிக்கும் "இறப்பின் பிறப்பு" (birth of death) என்ற ஓவியத்தால்தான் கதைசொல்லியின் வீழ்ச்சி ஆரம்பிக்கிறது. நண்பர்கள் மூவரில் பெஞ்சமின் மட்டுமே ஓவியங்கள் அதிகம் விற்காமல் பணத் தட்டுப்பாட்டில் இருக்கிறான். ஒரு கட்டத்தில் சாலைகளில் செல்வர்கள் தவற விட்ட பணம் ஏதாவது கிடைக்குமா என்று தேடுவதை தன் வாழ்க்கையில் ஒரு அங்கமாக்கி விடுகிறான், அதற்காக தெருத் தெருவாக அலைகிறான், நண்பர்களின் உதவியை மறுக்கிறான். அவர்கள், அவன் அப்படி அலைவதால் ஓவியத்தை முடிக்க இன்னும் அதிக நாளாகும் என்று சொல்லும் போது "உலகிற்காக நான் காத்திருந்திருக்கிறேன், அது எனக்காகக் கொஞ்சம் காத்திருக்கட்டும்" என்று அளிக்கும் பதில் அவனின் புறக்கணிப்பின் பின்னே உள்ள மனவலியையும், அதே நேரம் கலை கர்வத்தையும் காட்டுகிறது.

மிகுந்த பணமுடைய, ஆனால் கலைஞர்களை உண்மையாக மதிக்கத்தெரியாத ஒரு பணக்காரனின் செய்கையால் நடக்கும் சம்பவங்கள் கதைசொல்லியை முற்றிலும் மாற்றி விடுகின்றன. இப்போது அவருடைய குறிக்கோள் கடவுளை நேரில் சந்தித்து, கொலை செய்து, அவர் இடத்தைக் கைப்பற்றுவது. இது ஒரு வலுப்பிடிவாதமாக மாற அவருடைய ஓவியம் வரைவது, குடும்ப வாழ்க்கை அனைத்தும் பாதிக்கப்படுகிறது.

கடவுள் மேல் அவருக்கு வரும் கோபம், தனிநபர் சார்ந்த கோபம் மட்டுமல்ல, தன் படைப்புக்கள் என்ன புகழப்பட்டாலும், பாதுகாக்கப்பட்டாலும் அவை முடிவில் என்றோ ஒரு நாள் (நூறாண்டுகள் கழித்தோ அல்லது ஆயிரம் ஆண்டுகள் கழித்தோ) அழிந்துவிடும் என்ற உண்மையால், அந்த அ-நித்தியத்தால் ஏற்பட்ட கர்வ பங்கமே அதற்கு காரணம். படைப்பாளி என்று சொல்பவன் தன் படைப்பு அழிவதை எப்படி ஏற்றுக்கொள்வான் (அது அழிவது பல நூற்றாண்டுகள் கழித்துத்தான் என்றாலும்). எனவே இப்படிப்பட்ட நிலையில்லா உலகைப் படைத்த கடவுளை கொல்ல நினைக்கிறான்.

இறுதியில் வரும் காட்சிகளில் அவன் மீட்சி அடைந்தானா இல்லையா என முடிவு செய்வது நம் கையில் உள்ளது. கதைசொல்லி ஒரு நம்பத்தகாத ஆசாமியாக இருப்பதால் (unreliable narrator), நாவலில் எது உண்மையில் நடந்தது, எது கற்பனை என்று நமக்குத் தெரிவதில்லை.


ஓவியம் வரைதல், சிற்பங்கள் செய்தல் பற்றிய விவரணைகள் மிக நுணுக்கமாக உள்ளன. நாம் பார்த்து வியக்கும் ஒரு ஓவியத்தின் பின்னால் எத்தனை விவரமானவேலைகளும், தொழில் நுட்பமும் உள்ளன என்பது இவற்றில் தெரிகிறது., நீடித்திருக்கும் வண்ணங்களைத் தேர்வு செய்வது எப்படி, தயாராக உள்ள வர்ணங்களைப் பயன் படுத்தாமல், பழைய கால ஓவியத்தைப் போல ஒன்றைத் தீட்ட முயல்கையில், அதற்கான வர்ணங்களை ஓவியரே எப்படி உருவாக்குவது, அப்படி உருவாக்க நவீன இரசாயனப் பொருட்களின் கலப்பில்லாத இயற்கையான மூலப்பொருட்களை எப்படி தேர்வு செய்வது, ஓவியத்தின் சட்டகத்தை செய்ய ஏற்ற மரப்பலகையைத் தேர்வு செய்வது எனப் பல விஷயங்களை விளக்கிச் செல்கிறார் க்ரீனன். விளக்குகிறார் என்று சொல்வதும் தவறாக இருக்கும், அவை பாடபோதனை போல எழுதப்படவில்லை.

ஒரு விஷயத்தை மிக ஆழமாக நேசிக்கும் போது, அதைப் பற்றிப் பேசும் போது குரலில் ஒரு மாற்றம் வரும் இல்லையா, ஆசை, உற்சாகம் கொப்பளிக்கும் குரல், அதைத் தான் நாவலில் இந்தப் பகுதிகளை படிக்கும் போது நாம் கேட்கிறோம். நாம் வரைகின்றோமோ இல்லையோ, ஓவியங்களை நாம் பார்க்கும் முறை மீது குறிப்பிடத் தக்க மாற்றத்தை இந்த நாவலைப் படித்த அனுபவம் கொண்டு வரும்.

நாவலின் முக்கியச் சரடாக ஒன்றைக் கூற முடியும். மூன்று நண்பர்களில், ஃபேபர் இருவரை விடக் குறைந்த திறமை உடையவன், சமூகத்தின் தேவைக்கேற்ப ஓவியங்கள் வரைவதை ஏற்றுக்கொண்டுள்ள, தன் கலை மீது உன்மத்தம் இல்லாத ஒருவன். அதனால் தான் அவன் மட்டும் எந்த மனரீதியான பாதிப்புக்கும் உள்ளாவதில்லை. ஒரு வேளை மற்ற இருவரும் தங்கள் படைப்பிலிருந்து கொஞ்சம் விலகி நிதர்சனத்தை ஏற்றுக்கொண்டிருந்தால்?... எனவே தன்னை உபாசிப்பவனையே எரித்துவிடும் கலையின் ஆற்றல் குறித்த ஒரு உருவகமாகவும் இதை வாசிக்கலாம். கடவுளைக் கொன்று அழிவில்லாத படைப்பை உருவாக்க முடியாவிட்டாலும், அதன் பயணத்தை நீட்டிப்பது வாசகர்களாகிய நம் கையில் தான் உள்ளது. அந்த வகையில் பத்தாண்டுகளுக்கு முன் மறுகண்டுபிடிப்பு வரிசையில் "Modern Library" ஆல் வெளியிடப்பட்ட நாவலின் புதிய பதிப்பு இன்னும் தனக்கான வாசகர்களுக்காக காத்திருக்கிறது. ●

# வீதி அபிவிருத்திப் பணிகள் வேகமாக முன்னெடுக்கப்படும்

## நெடுஞ்சாலைகள் அமைச்சின் மேலதிக செயலாளர்



(கொழும்பு)


நாட்டின் நெடுஞ்சாலைகளையும் வீதிகளையும் அபிவிருத்தி செய்யும் பணிகள் கைவிடப்படாது அவை தொடர்ந்தும் அதே வேகத்தில் மேற்கொள்ளப்படும் என்று துறைமுக மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் மேலதிக செயலாளர் எம்.சி.லால் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அடுத்தாண்டில் நெடுஞ்சாலைகளை நிர்மாணித்தல் மற்றும் வீதியமைப்புப் பணிகள் இப்போது இருப்பதை விட விரிவான அடிப்படையில் மேற்கொளளப்படும் பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாடு இங்கு நடைபெறுவதற்கு எவ்வளவோ காலத்திற்கு முன்னர் அரசாங்கம் வீதியமைப்பு, நெடுஞ்சாலைகளை அமைக்கும் திட்டங்களை சிறப்பாக ஆரம்பித்தது.

அரசாங்கம் எக்காரணம் கொண்டும் அபிவிருத்திப் பணிகளை கைவிடப்போவதில்லை என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அறிவித்திருப்பதனால் அப்பணிகள் முன்பிருந்ததை விட வேகமாக 2014ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் துறைமுக மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சுக்கு மற்ற அமைச்சுக்களை விட ஆகக் கூடுதலான தொகை அதாவது 141 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இதனால் அபிவிருத்திப் பணிகள் தொடரும்.

நெடுஞ்சாலைகள் அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன கிராமங்களை நகரங்களுடன் இணைக்கும் வீதிகளை அபிவிருத்தி செயவதற்காக 7,000 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார்.இரண்டாவது புதிய களனி பாலத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கென ஜப்பானிய சர்வதேச நிறுவனம் இலங்கைக்கு ஒரு இலட்சம் மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த வீதி விரைவில் தற்போதைய கொழும்பு கட்டுநாயக்க அதிவேகப் பாதையுடன் இணைக்கப்படவுள்ளது என்றார்.

# மும்மொழிக்கொள்கை அடிப்படையில் போக்குவரத்துசபைக்கு எதிராக வழக்கு



இலங்கை போக்குவரத்துச் சபைக்கு எதிராக மும்மொழிக் கொள்கையின் அடிப்படையில் வழக்குத்தாக்கல் செய்யவுள்ளதாக தேசிய மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அரச பேருந்துகளில் பயண முடிவுக்கான பெயர்ப் பலகைகளில் முறையாக மூன்று மொழிகளிலும் பெயர்கள் பொறிக்கப்படுவதில்லை என்று அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

அரசமொழிகள் கொள்கைக்கு அமைய இலங்கை போக்குவரத்துச் சபைக்கு முதலில் அழைப்பாணை விடுக்கப்படவுள்ளது.

அதுகுறித்து கவனம் செலுத்தப்படாத பட்சத்தில் அடுத்த கட்ட சட்ட நடவடிக்கைகள் குறித்து அறிவிக்கப்படும் மும்மொழிக் கொள்கை தொடர்பில் சில அரச நிறுவனங்கள் ஆர்வம் செலுத்துவதில்லை என்றும் அவர்மேலும் தெரிவித்துள்ளார்.

# பல்கலைக்கழக மாணவர்களுக்கு தலைமைத்துவப் பயிற்சி



பட்டதாரி பயிலுனர்களுக்கான திறன் அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் பல்கலைக்கழகங்களுக்கு இம்முறை தெரிவாகியுள்ள புதிய மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி நேற்று முன்தினம் ஆரம்பமானது.மின்னேரியா இராணுவ காலாற்படை பயிற்சி நிலையத்தில் ஆரம்பமான இந்த நிகழ்வில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

உயர் கல்வி அமைச்சர் எஸ்.பீ.திசநாயக்கா பிரதி அமைச்சர்களான நந்த மித்ர ஏக்கநாயக்க சிறிபால கம்லத்சந்திரசிறி சூரியாராச்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் ரணசிங்க உயர் கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் ஜயந்த நவரத்ன பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர் ஷானிகா ஹிம்புரேகம இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் தயா ரத்நாயக்க ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# கொழும்பில் ரஷ்யக் கப்பல்கள்



ரஷ்யாவின் 5 கடற்படை கப்பல்கள் நேற்றுமுன்தினம் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளன. இந்தக் கப்பல்களை இலங்கை கடற்படையினர் வரவேற்றுள்ளனர்.

அட்மிரல் பான்ரெலியவ், பேரேஸ்வட், அட்மிரல் நெவில்ஸ்கி, போட்ரி க்ரிலோப்பெஷிங்க ஆகிய ரஷ்ய கப்பல்களே கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளன. இந்தக் கப்பல்கள் ரஷ்யாவின் விளாடிவோஸ்ரொக் துறைமுகத்துக்குச் செல்லும் வழியில் ஓய்வெடுப்பதற்காக கொழும்புத் துறைமுகத்திற்கு வந்துள்ளது.

# விலை அதிகரிப்புக்கு அனுமதிக்குமாறு பால்மா நிறுவனங்கள் கோரிக்கை



நான்கு பால்மா உற்பத்தி நிறுவனங்கள் தமது உற்பத்திகளின் விலைகளை அதிகரிப்பதற்கு நுகர்வோர் விவகார அதிகார சபையிடம் அனுமதி கோரியுள்ளன.

இந்த வேண்டுகோள் தொடர்பில் விலைக் கட்டுப்பாட்டுக் குழுக் கூட்டத்தில் ஆராயவுள்ளதாக அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் ஜே.எம்.ஏ.டக்லஸ் தெரிவித்துள்ளார்.

அடுத்த வாரம் இந்தக் குழு கூடவுள்ளது. உலக சந்தையில் பால்மா விலைகளில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை கருத்திற்கொண்டு இலங்கையில் பால்மா விலைகள் தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்றார்.

# பராக்கிரமபாகு மன்னன் போன்று மக்களுக்காக உழைப்பேன்

## அமைச்சர் மேர்வின் சில்வா



(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பல்வேறு தடைகளையும் பிரச்சினைகளையும் தாண்டி நாட்டுக்காக உழைக்கின்றார். நானும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைப்போன்றவன். எனது எதிராளிகள், போட்டியாளர்களை நினைத்து நான் ஒருபோதும் பயப்படவில்லை.என்னைத்தேர்வு செய்த மக்களுக்காக எனது பணிகளை பராக்கிரமபாகு மன்னனை போன்று முன்னெடுப்பேன் என பொது மக்கள் உறவுகள் அமைச்சர் மேர்வின் தெரிவித்துள்ளார்.

களனி பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

நான் மக்களுக்காக செயலாற்றாமல் அமைதியாக இருப்பதாக ஒருவரும் என்னைப் பார்த்து கூறமுடியாது. நான் சுறுசுறுப்பானவன். நான் களனி பிரதேச மக்களுக்காக மட்டும் செயலாற்றவில்லை. கம்பஹா மாவட்ட மக்களுக்காகவும் செயலாற்றுகின்றேன். என்னை தேர்ந்தெடுத்த மக்களுக்காக பணிபுரிவது எனது கடமையாகும். களனி பிரதேச சபையில் இலஞ்ச ஊழல்கள் மோசடிகள் இடம்பெறுவதாக நம்பிக்கைக்குரிய ஐந்து பேர் தகவல்களை வழங்கி வருகின்றனர். இத்தகைய செயற்பாடுகளுக்கு எதிராக நான் சரியான நேரத்தில் நடவடிக்கை எடுப்பேன் என்றார்.

# எதிர்காலத்திற்கு பொருத்தமான வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிப்பு

## இலங்கை வணிகசபை பிரதித்தலைவர் திருப்தி

(கொழும்பு)

எதிர்காலத்திற்கு பொருத்தமானதொரு வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதை முன்னிட்டு மகிழ்ச்சியடைவதாக இலங்கை வணிக சபையின் பிரதித் தலைவர் சுஜீவ சமரவீர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய வணிக சபையின் பிரதித் தலைவர் இந்தக் கருத்தினை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

நாட்டின் எதிர்காலத்திற்கு பொருத்தமானதொரு வரவு-செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதை முன்னிட்டு, இலங்கை வணிக சபை மகிழ்ச்சியடைகின்றது.

அனைத்து யோசனைகளும் அரசாங்கத்தினால் முறையாக நடைமுறைப்படுத்தப்படுமா என்பது குறித்து நாம் அவதானம் செலுத்தியுள்ளோம்.

அரசாங்கம் என்ற வகையில் வழங்கியுள்ள இந்த நிவாரணங்கள் முறையாக நடைமுறைப் படுத்தப்படுகின்றனவா என்பதை ஆராய வேண்டியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# 10இந்தியப் பொருட்களுக்கு இறக்குமதி வரி விலக்கு

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் 10 பொருட்களுக்கு அரசாங்கம் வரி விலக்கு அளித்துள்ளது. இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் அனுமதிக்கப்படாத பொருட்களுக்கே இந்த வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.இந்தப் பொருட்களுக்கு வரி விலக்கு அளிக்குமாறு இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வந்த நிலையில், அரசாங்கம் கடந்த 22ஆம் திகதி சமர்ப்பித்த 2014ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தினூடாக அப்பொருட்களுக்கு வரி விலக்களிதுள்ளது.

# 3 மாகாண சபைகளுக்கு அடுத்த ஆண்டில் தேர்தல்

## சுகாதார அமைச்சர்



(கொழும்பு)

ஊவா, தெற்கு மற்றும் மேல் மாகாணங்களுக்கான தேர்தலை அடுத்த வருடம் நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக சுகாதார அமைச்சரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

களுத்துறை மாவட்டத்தின் தல்பிட்டிய மற்றும் வாத்துவ ஆகிய பிரதேசங்களில் அமைக்கப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அலுவலகங்களை அமைச்சர் நேற்று முன்தினம் திறந்துவைத்து உரையாற்றிய போதே இதனைத் தெரிவித்துள்ளார். இதேவேளை, எதிர்காலத்தில் நடைபெறவுள்ள தேர்தலை இலக்காகக் கொண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மறுசீரமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதன் முதற்கட்டமாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொழிற்சங்கங்கள் மறுசீரமைக்கப்படுவதுடன், அச்சங்கங்களின் முக்கிய பதவிகளில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது





பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் நூல் கண்காட்சி அண்மையில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் பிரதிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.இரவீந்திரன் மங்களவிளக்கேற்றி நிகழ்வை ஆரம்பிப்பதையும், விருந்தினர்கள் கண்காட்சியைப் பார்வையிடுவதையும் காணலாம். (01)

# ஒரு வைத்தியரே சேவையில் சிரமத்தில் சிகிச்சை பெறும் நிலை

## வேலணை பிரதேச மக்கள்

(வேலணை)

தீவகத்திலுள்ள வேலணை பிரதேச வைத்தியசாலையில் ஒரு வைத்தியர் மட்டுமே நிரந்தர மாக கடமையாற்றுவதால் சிகிச்சை பெற வரும் நோயாளர்கள் சிகிச்சையை பெறமுடியாத நிலை காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்பிரதேசத்தில் 1500 குடும்பங்கள் வசித்து வருகின்ற நிலையில் இம்மக்கள் இவ்வைத்தியசாலையிலேயே நோய்களுக்கான சிகிச்சையை பெற்றுவருகின்றனர். வைத்தியர் பற்றாக்குறையால் கிளினிக் சிகிச்சைகள் இடம் பெறும் நாட்களில் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறவரும் நோயாளர்கள் நீண்ட நேரம் காத்திருக்கும் அவலநிலை காணப்படுவதாக நோயாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இதனை விட சுகாதார பணிமனையின் கூட்டங்களுக்கு வைத்தியசாலையிலிருந்து ஒரு வைத்தியர் செல்லவேண்டியது அவசியமானதாக உள்ளநிலையில் இவ் வைத்தியசாலையிலிருந்து குறித்த வைத்தியர் கூட்டத்திற்கு செல்கின்ற சந்தர்ப்பங்களில் சிகிச்சை பெறவரும் நோயாளர்கள் திரும்பிச் செல்லும் நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பின்தங்கிய நிலையில் வாழும் இப்பிரதேச மக்கள் வைத்திய தேவைகளை பெறுவதற்கு பிரதேச வைத்தியசாலையையே பெரிதும் நம்பியிருக்கும் நிலையில இவ் வைத்தியசாலையில் மேலதிக வைத்தியர் நியமிக்கப்படுவது அவசியமானது என சுட்டிக்காட்டுகின்றனர்.

தற்போது மழைகாலம் ஆரம்பமாகியுள்ள நிலையில் நோய்கள் அதிகரிக்குமென்பதால் வைத்திய சிகிச்சைகளை பெறுவதற்கு ஏதுவாக இவ்வைத்தியசாலைக்கு மேலதிகமாக ஒரு வைத்தியரை நியமிக்க துறைசார்ந்த உயர் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (சி)

# கழிப்பறை வசதியற்ற குடும்பத்திற்கு செஞ்சிலுவைச்சங்கம் உதவி

(யாழ்ப்பாணம்)

உலக கழிப்பறை தினத்தை முன்னிட்டு இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் கழிப்பறை வசதியற்ற குடும்பத்திற்கு கழிப்பறை அமைத்துக் கொடுக்க முன்வந்துள்ளது.

தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள திருமதி சாந்தராசா சுபாஜினி (கலைநகர் அளவெட்டி தெற்கு, அளவெட்டி) என்ற குடும்பத்தினரை தெரிவு செய்துள்ளனர்.

இவர்களுக்கான மலசல கூடம் விரைவில் அமைத்துக் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் இலங்கை செஞ்சிலுவைச் சங்க நிர்வாகக்குழு மேற்கொண்டு வருகின்றது. (பா)

# மண்டான் பிரதேசத்தில் பனம் விதை நடும் திட்டம்

(கரணவாய்)

ஜனாதிபதியின் பிறந்த தினம் மற்றும் பதவியேற்பு தினத்தை முன்னிட்டு மரம் நடுகைச் செயற்றிட்டத்தின் கீழ் கரவெட்டி பிரதேச செயலகத்தினால் கடந்த 18ஆம் திகதி பனம் விதை நடுகை செய்யும் திட்டம் இடம்பெற்றது.

கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சிவஸ்ரீ தலைமையில் மண்டான் பிரதேசத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், மற்றும் கிராம சேவையாளர்கள் மண்டான் பிரதேச பொதுமக்கள் இதில் கலந்து கொண்டு பனம் விதைகளை நாட்டினர் இதில் 500 பனம் விதைகள் நாட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (18)

# சந்தைக்குள் வெள்ள நீர் சிரமத்தில் வியாபாரிகள்

(கொடிகாமம்)

சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட கொடிகாமம் சந்தையானது மழை காரணமாக நீர் தேங்கி நிற்கின்றது. சந்தைக்குள்ளே செல்லும் இரண்டு பாதைகளிலும் நீர்தேங்கி நிற்பதனால் வியாபாரிகள், பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் போன்ற பகுதிகளில் இருந்து தினமும் பெருமளவான வர்த்தகர்கள் வியாபார நிமிர்த்தம் சந்தைக்கு வந்து செல்வதுடன் பெருமளவான பொது மக்கள் சந்தைக்கு பொருட்களை கொள்வனவு செய்யவருவது வழமை.

பெருமளவானவர்கள் வந்து செல்லும் சந்தையின் உட்பகுதியில் நீரானது பாய்ந்து செல்லாமல் தேங்கி நிற்கின்றது. இந்த நீரினை சந்தைப் பகுதியிலிருந்து வெளியேற்ற, இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லையென சந்தை வியாபாரிகள் விசனம் தெரிவிக்கின்றனர். (130)

# பகிரங்க ஏலவிற்பனை

யாழ்.நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட மணல்களின் பகிரங்க ஏலவிற்பனை எதிர்வரும் 30ஆம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ்.நீதிமன்ற வளாகத்தில் நடைபெறும்.

குறித்த பகிரங்க ஏலவிற்பனையில் மணலினைப் பெற்றுக் கொள்பவர்கள் கொடுப்பனவுகளை காசாகவே வழங்கவேண்டும். அத்துடன் பெற்றுக்கொள்ளும் மணல்களை அன்றைய தினம் மாலை 6 மணிக்கு முன்பாக நீதிமன்ற வளாகத்திலிருந்து அகற்றவேண்டும் என நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார்.

# க.பொ.த(சா/த) மாணவர்களுக்கு இலவச கல்விக் கருத்தரங்கு

நடைபெறவுள்ள க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களை தயார்படுத்தும் முகமாக சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினரும் சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள தொடர் இலவச கல்விக் கருத்தரங்கு இடம்பெற்று வருகின்றது.

இதில் 6ஆவது கருத்தரங்கு தேசியப் பாடசாலைகளில் ஒன்றான மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இன்று செவ்வாய்க்கிழமை. நாளை புதன்கிழமை காலை 8.30 மணி முதல் இடம் பெறவுள்ளது. இக் கருத்தரங்கின் ஆரம்ப நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்து கொள்வார்

சிறப்பு விருந்தினராக நல்லூர் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத் தலைவரும், முன்னாள் தேசிய சம்மேளனப் பிரதிநிதியுமான ஆர்.ரவீந்திரன் கலந்து கொள்வார். இன்று விஞ்ஞான பாடத்திற்கான செயலமர்வும் நாளை கணித பாடத்திற்கான செயலமர்வும் இடம் பெறவுள்ளது. (48)

# ஆலயங்களில் ஒலிபெருக்கி மாணவர்களின் கல்வி பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

திருவெம்பாவைக் காலத்தில் அதிகாலையில் ஒலிக்கும் ஆலய ஒலிபெருக்கிகளினால் மாணவர்களின் கற்றலுக்கு இடையூறுகள் ஏற்படுவதாக பலரும் கவலைதெரிவிக்கின்றனர்.

திருவெம்பாவைக் காலத்தில் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைகள் நடைபெறும் காலமாகும். அதனால் அதிகாலையில் எல்லா ஆலயங்களிலும் ஒலிபெருக்கிகள் ஒலிக்கத் தொடங்கிவிடும் எனவே பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் கற்றலில் பெரிதும் பாதிப்பு ஏற்படும் என பெற்றோர் கவலை வெளியிட்டுள்ளனர். எனவே ஆலய தர்மகர்த்தாக்களோ, நிர்வாகசபையினரோ தத்தமது ஆலய ஒலிபெருக்கியின் சத்தத்தை கட்டுப்படுத்தி மாணவர்களின் எதிர்காலத்திற்கு உறுதுணையாக இருக்க நடவடிக்கை எடுக்குமாறு பல பெற்றோர்கள் தமது கருத்துக்களை தெரிவித்துள்ளனர். (இ)

# முரசின் இன்றைய பலன்




(26.11.2013 செவ்வாய்க்கிழமை)

விஜய வருஷம் கார்த்திகை மாதம் 10 ஆம் திகதி.
பூரநட்சத்திரம் முழுநாளும்.
அட்டமி/சித்தம்/கரிநாள்.
இராகுகாலம 03.42 - 04.42 வரை. சுபநேரம 10.42 - 12.12 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | மனச்சோர்வை ஒரு பொருட்டாக மதிக்காததால் ஈடுபட்ட முயற்சியில் காரிய ஜெயம் காணுதல், செலவினங்களைச் சமாளிக்க கடன்படும் நிலைக்கு உள்ளாதல். |
| ரிஷபம் | விஷ ஜந்துக்களின் கடியை குணமாக்க கரிசனை எடுக்காமையினால் அபாய நிலை உருவாதல், வரிமதிப்புப் பதிவேடுகளில் பெயர்களை உட்புகுத் தும் கடிதம் வந்ததால் மனை சொந்தமாதல். |
| மிதுனம் | ‘கொண்டிஷன்’ அறுதியில் வைத்த வீடு பறிபோகக் கூடிய நிலை கண்டு வருந்துதல், பிறரிடம் வசூலித்த பணத்தைக் கொண்டு நிகழ்ச்சியில் பெயரெடுக்க முனைதல். |
| கடகம் | திருமணமாகா திருக்கும் முதிர் கன்னிகளை நினைத்து துக்க சாகரத்தில் மூழ்கியிருத்தல், உரிய நேரத்தில் மனைக்கு விரைந்து வந்ததால் திருட்டு முயற்சியினின்றும் தப்பி விடல். |
| சிம்மம் | வெளியூர்பயணத்தை முன்னிட்டு மனைப் பொருட்களை விற்பனை செய்ய முயல்தல், விற்பனை செய்ய மனைக்கு வந்தவரின் மயக்குமொழிகளால் கூடிய விலைக்குப் பொருளை வாங்கி மனக்கிலேசமடைதல். |
| கன்னி | நீரிழிவு காரணமாக புண்கள் மாறாது வேதனைப்படும் நிலையைத் தக்க வைத்தல், புனித தலங்களில் கும்மாளம் போடுபவர்களைத் தட்டிக்கேட்க வெளிக்கிட்டதால் ரகளை ஏற்படல். |
| துலாம் | வெளிச்சமின்றி பயணம் செய்ய முயல்கையில் விபத்து ஏற்படும் அபாய நிலைதோன்றல், நம்பி இருந்த அனுமதி கிடைக்காமையையிட்டு அதிகாரிகளைச் சந்தித்து முறையிடச் செல்லல். |
| விருச்சிகம் | வெளியூர் உறவினர் வருகை தந்ததால் குடும்பத்தில் மகிழ்வு தாண்டவமாடல், வெளியீட்டு நிகழ்வுகளில் பங்கு பற்றிச் சிறப்பிக்க அழைப்பிதழ் கைக்கு வரல். |
| தனுசு | ஆவணக்குறைபாட்டினால் வரவிருந்த வேலை வாய்ப்பில் காலதாமதமேற்படல், வெளிநாட்டு வேலை வாய்ப்பை முன்னிட்டு வாகன உரிமைப்பத்திரம் பெற முஸ்தீபு. |
| மகரம் | தேக நிலையைக்கருதாது வேலைப்பளு கூடியதால் நோய் வாய்ப்படுதல், இலஞ்ச வலையில் சிக்கவைப்பதற்கு தருணம் பார்த்திருப்பதை எண்ணி எச்சரிக்கையாக செயற்படுக. |
| கும்பம் | மாறாத நோய்க்கு ‘மருத்தீடு’ காரணமென எண்ணி அச்ச உணர்வு மேலோங்குதல், அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகருமாப்போல் தொடர்ந்து நச்சரித்ததால் கடன் பணம் கைக்குவரல். |
| மீனம் | பெற்றோரின் புத்திமதியைக் கேட்டுச் செயற்பட்டதனால் விபரீத விளைவினின்றும் தப்புதல், மனையாளின் அட்டகாசத்தினின்றும் விடுபடுவதற்கு மௌன விரதத்தைக் கடைப்பிடித்தல். |

# மீண்டும் சகீர்கான்



(புதுடில்லி)

தென்னாபிரிக்க டெஸ்ட் மற்றும் ஒரு நாள் தொடருக்கான இந்திய அணியில் வேகப்பந்து வீச்சாளர் சகீர்கான் மீண்டும் இந்திய அணியில் இடம்பிடித்துள்ளார். மீண்டும் அணியில் இடம்பிடிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட கௌதம் கம்பீர் மீண்டும் புறக்கணிக்கப்பட்டுள்ளார்.

தென்னாபிரிக்காவுக்கு கிரிக்கெட் சுற்றுலாவை மேற்கொள்ளவுள்ள இந்திய அணி இரண்டு டெஸ்ட், மூன்று ஒரு நாள் போட்டிகளைக் கொண்ட தொடரில் பங்குபற்றவுள்ளது. இதில் ஒரு நாள் தொடர் எதிர்வரும் 5, 8, 11ஆம் திகதிகளிலும், டெஸ்ட் போட்டி எதிர்வரும் 18 – 22, 26 –30 ஆம் திகதிகளிலும் இடம்பெறவுள்ளது. இப்போட்டித் தொடருக்கான இந்திய அணி நேற்று தெரிவானது.

இதில் உள்ளூர் போட்டியில் சிறப்பாக பந்து வீசி வந்த சகீர்கான் அணியில் இடம்பிடித்துள்ளார். மற்றும் மும்பையைச் சேர்ந்த அம்பதி ராயுடு அணியில் இடம்பிடித்துள்ளார். இதேவேளை, மீண்டும் அணியில் இடம்பிடிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட கௌதம் கம்பீருக்கு அணியில் இடம் வழங்கப்பட்டவில்லை. அத்துடன் அதிரடி வீரர் சேவாக், ஹர்பஜன்சிங் ஆகியோரும் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

அறிவிக்கப்பட்டுள்ள குழாம் வருமாறு:

டெஸ்ட் : டோனி (கப்டன்), முரளி விஜய், சிகர் தவான், புஜாரா, விராத் ஹோலி, ரோகித் சர்மா, ரகானே, அஸ்வின், புவனேஸ்வர்குமார், உமேஷ் யாதவ், மொகமட் சமி, ரவீந்திர ஜடேஜா, சகீர்கான், அம்பதி ராயுடு, சாகா (விக்கெட் காப்பாளர்), இஷாந்த் சர்மா, பிரக்யன் ஓஜா.

ஒரு நாள் அணி : டோனி (கப்டன்), தவான், ரெய்னா, ஹோலி, ரோகித் சர்மா, ரகானே், யுவராஜ்சிங், அஸ்வின், புவனேஸ்வர்குமார், மொகமட் சமி, சகீர்கான், அம்பதி ராயுடு, உமேஷ் யாதவ், இஷாந்த் சர்மா, மோகித் சர்மா, ஜடேஜா, அமித் மிஸ்ரா.

# தென்னாபிரிக்காவை வீழ்த்திய பாகிஸ்தான்

(கேப்டவுன்)

தென்னாபிரிக்க அணிக்கெதிரான முதலாவது ஒரு நாள் போட்டியில் பாகிஸ்தான் அணி 23 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

தென்னாபிரிக்க, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் முதல் போட்டி நேற்று முன்தினம் தென்னாபிரிக்காவின் கேப்டவுனில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய பாகிஸ்தான் அணி ஆரம்பம் முதலே விரைவாக விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. ஒரு கட்டத்தில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 131 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இந்நிலையில் எட்டாவது விக்கெட்டுக்காக இணைந்த அறிமுக வீரர்கள் பிலாவல் பாத்தி, அன்வர் அலி இணை மிகச் சிறப்பாக ஆடியது. இந்த ஜோடி எட்டாவது விக்கெட்டுககாக 74 ஓட்டங்களைப்பெற்றது. இறுதியில்பாகிஸ்தான் அணி 50 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 218 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அறிமுக வீர் பிலாவல் பாத்தி 39, அன்வர் அலி 43, மசூட் 22, நசீர் ஜெம்ஷெட் 24 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஸ்ரெய்ன், மோர்கல் ஆகியோர் தலா மூன்று, கலிஸ் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 219 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி 48.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 195 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் கலிஸ் 50, டுமினி 49 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பிலாவல் பாத்தி மூன்று, அன்வர் அலி,



சயீட் அஜ்மல் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக சலகதுறையிலும் ஜொலித்த அன்வர் அலி தெரிவு செய்யப்பட்டார். இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது ஒரு நாள் போட்டி நாளை போர்ட் எலிசபெத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ரொனால்டோ காயம்




போர்த்துக்கலின் கால்பந்து வீரர் கிறிஸ்டினோ றொனால்டோ, அல் மேரியாவுடன் இடம்பெற்ற கால்பந்துப் போட்டியில் காயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இந்தப் போட்டியில், ரியல் மட்ரிட் அணியை பிரதிநிதித்துவப்படுத்திய றொனால்டோ, இவ்வாறு காயத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்படுகிறது.

நாளை ரியல் மட்ரிட் அணி முக்கிய போட்டிகளில் விளையாடவுள்ள நிலையில், றொனால்டோவின் வருகை அதிகமாக எதிர்பார்க்கப்படுகிறது.

# உலகக் கிண்ண ருவென்ரி–20 ஆப்கான், அயர்லாந்து தகுதி

(டுபாய்)

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ருவென்ரி-20 உலக கோப்பை தொடருக்கு அயர்லாந்து மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகள் தகுதி பெற்றன.

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.,) சார்பில், 5ஆவது ருவென்ரி-20 உலக கோப்பை கிரிக்கெட் தொடர், அடுத்த ஆண்டு (16 மார்ச் - 6 ஏப்ரல்) பங்களாதேஷில் நடைபெறவுள்ளது.. இத்தொடரில் முதன்முறையாக 16 அணிகள் பங்கேற்கின்றன. இதில் இங்கிலாந்து, நியூசிலாந்து, தென்னாபிரிக்கா, இலங்கை, பாகிஸ்தான், இந்தியா, அவுஸ்ரேலியா, மேற்கிந்தியத்தீவுகள், சிம்பாப்வே, பங்களாதேஷ் உட்பட 10 அணிகள் நேரடியாக தகுதி பெற்றன. மீதமுள்ள 6 அணிகள் தகுதிச் சுற்றின் மூலம் தேர்வு செய்யப்படும்.

இம்முறை தகுதிச் சுற்றுப் போட்டிகள் ஐக்கிய அரபு எமிரேட்சில் (யு. ஏ. இ.,) நடைபெற்று வருகின்றது. இதில் மொத்தமுள்ள 16 அணிகள், இரண்டு பிரிவுகளாக லீக் சுற்றில் மோதின. “ஏ” பிரிவில் நடந்த லீக் சுற்றின் முடிவில், 7 போட்டியில் 6 வெற்றி, ஒரு போட்டி மழையால் இரத்து உட்பட 13 புள்ளிகளுடன் அயர்லாந்து அணி முதலிடம் பிடித்தது. பி பிரிவில் நடந்த லீக்சுற்றின் முடிவில், 6 வெற்றி, ஒரு தோல்வி உட்பட 12 புள்ளிகளுடன் ஆப்கானிஸ்தான் அணி முதலிடம் பிடித்தது. இதனையடுத்து இவ்விரு அணிகள் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ருவென்ரி-20 உலக கோப்பை தொடருக்கு தகுதி பெற்றன. மீதமுள்ள நான்கு அணிகள் பிளே-ஓப் சுற்றின் மூலம் தேர்வு செய்யப்படும்.

# பாரத ரத்னா; தகுதியானவரா சச்சின்



சச்சின் டெண்டுல்கர் பாரத ரத்னா விருதை பெற்றுக்கொள்ளத் தகுதி வாய்ந்தவரா என்ற கேள்வி இந்தியாவில் தற்போது பெரும் சர்ச்சையாக மாறியுள்ளது. அவரது இந்திய தேச பக்தி, நாட்டுப்பற்று இவையெல்லாம் குறை கூற இடமில்லை என்றாலும், பாரத ரத்னாவுக்கு அவர் எந்த அடிப்படையில் தகுதியற்றவர் என்பதைப் பார்ப்போம்.

சச்சின் டெண்டுல்கர் இந்தியாவுக்காக கடந்த 24 ஆண்டுகள் விளையாடியுள்ளார். சரிதானேயூ ஆனால் இது தவறு. டெக்னிக்கலாக அவர் பி.சி.சி.ஐ. – இற்குத்தான் விளையாடியுள்ளார். பிசிசிஐ – யைத்தான் பிரதிநிதித்துவம் செய்துள்ளார். இந்திய கிரிக்கெட் சபை தன்னை பல முறை தனியார் அமைப்பு என்றே அங்கீகரித்துள்ளது.

பிசிசிஐ தமிழ்நாடு சொசைட்டீஸ் ரெஜிஸ்ட்ரேஷன் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. பிசிசிஐ தகவலறியும் உரிமை சட்டத்தின் கீழ் வருவதல்ல. இதனால் அதன் செயற்பாடுகளுக்கு பொதுமக்களிடத்தில் பதில் கூற வேண்டிய தேவையில்லை. எனவே சச்சின் டெண்டுல்கர் இந்தியாவுக்காக விளையாடினாலும், டெக்னிக்கலாக கூறவேண்டுமெனில் அவர் இந்தியாவுக்கு விளையாடவில்லை என்றே கூறவேண்டும்.


சில ஆண்டுகளுக்கு முன்பு அவர் 2 கோடி வருமான வரியை தவிர்க்க அவர் தனது தொழில் விளம்பரத்தில் நடிப்பதே என்று வெளிப்படையாக கூறினார். இ.எஸ்.பி.என். ஸ்ரார் ஸ்போர்ட்ஸ், பெப்சி அன்ட் கோ ஆகியவற்றின் மூலம் ரூபாய் 5 கோடியே, 92 இலட்சத்து 31 ஆயிரத்து 211 சம்பாதித்தார். அதற்காக அவருக்கு ரூ.2,08,59,707 வருமான வரி விதிக்கப்பட்டது.

இந்த வருமான வரி கட்ட வேண்டிய உத்தரவை சச்சின் சலஞ்ச் செய்தார். அப்போது அதை விசாரித்த நீதிபதிகள் குழு சச்சின் ஒரு கலைஞர் மொடலிங் அவரது தொழில் எனவே அவர் வருவாய்களில் விலக்குகள் கொடுக்கப்படவேண்டும் என்று தீர்ப்பளித்தது. வருமானவரிச் சட்டம் 80சுசு – இன் படி கலைஞர்களுக்கு வருமான வரியில் சலுகைகள் உண்டு. சச்சின் அந்த அடிப்படையில் 2 கோடி வரிவிதிப்பில் சலுகைகளைப் பெற்றார். வருமான வரி மதிப்பீட்டு அதிகாரி சச்சினிடம் உங்கள் தொழில் என்ன என்று கேட்டதற்கு அவர் நான் ஒரு பிரபல மொடல், பல்வேறு நிறுவனங்களின் வர்த்தகப் பொருட்களுக்கு விளம்பரம் செய்கிறேன் என்று எழுதிக் கொடுத்துள்ளார்.

இதுபோன்ற விளம்பர வருவாயை சச்சின் வர்த்தகம் மற்றும் தொழில் மூலம் வந்த வருவாயாகவும், கிரிக்கெட் ஆடி சம்பாதித்த பணத்தை பிற ஆதாரங்களிலிருந்து வந்த வருவாய் என்றும் பிரித்துக் காட்டினார். அதாவது தான் தொழில் புஷர்வமாக கிரிக்கெட் வீரர் அல்ல. ஒரு மொடல் என்று சச்சினே ஒப்புக் கொண்டுள்ளார்.

சச்சினின் கனவுக் கார் பெராரி பியாஸ்கோ கதை எல்லோரும் அறிந்ததே. இறக்குமதித் தீர்வையில் அவருக்கு விலக்கு அளிக்கப்பட்டது பெரும் சர்ச்சைகளை அப்போது கிளப்பியது. ஆனால் விடயம் இப்போது அதுவல்ல, அவ்வாறு விலக்கு அளிக்கப்பட்ட அதே காரை சச்சின் டெண்டுல்கர் சு'ரத்தை சேர்ந்த வியாபாரி ஒருவருக்கு விற்றுள்ளார். தனக்கு பரிசாக வந்த காரை விற்று சம்பாதித்த வருவாயும் வரியிலிருந்து தப்பித்ததுதான் விடயம். தேர்தல் வருவதால் சச்சின் டெண்டுல்கருக்கு பாரத ரத்னா வழங்குவதாக நடப்பு ஆட்சி ஒரு ஸ்டண்ட் முடிவெடுத்தது அவ்வளவே. ஏற்கனவே உள்துறை அமைச்சகமும், விளையாட்டுத் துறை அமைச்சகமும், ஹொக்கி வீரர் மேஜர் தயான் சந்திற்கு பாரத ரத்னா வழங்கவேண்டும் என்று பரிந்துரை செய்திருந்தது தற்போது பின்னுக்குத்தள்ளப்பட்டுள்ளது. சதுரங்க் மேதை விஸ்வநாதன் ஆனந்த் அனைத்து உலக சதுரங்க சம்பியன்ஷிப் போட்டிகளிலும் பட்டம் வென்றுள்ளார். அவருக்கு ஏன் கொடுக்கக்கூடாது என்று கேள்விகள் தற்போது எழுந்து வருகின்றன. சச்சின் ஓய்வை வைத்து பிசிசிஐ – யும் ஸ்ரார் ஸ்போர்ட்ஸவும் கல்லா கட்டியதையடுத்து ஆளும் ஐக்கிய முற்போக்கு கூட்டணி சச்சின் பார்த ரத்னாவை அறிவித்து வாக்கு வங்கியாக மாற்றியுள்ளது அவ்வளவே.

# கனவு நனவாகுமா?



இந்தியாவில் உள்ள ஒவ்வொரு பள்ளியிலும் சதுரங்கம் விளையாடப்பட வேண்டும் என்பதே என் கனவு என, விஸ்வநாதன் ஆனந்த் தெரிவித்தார். இந்திய சதுரங்க ஜாம்பவான் ஆனந்த். தமிழகத்தைச் சேர்ந்த இவர், ஐந்து முறை உலக சம்பியன் பட்டம் வென்றவர். சமீபத்தில் சென்னையில் நடந்த உலக சதுரங்க சம்பியன்ஷிப் போட்டியில் நோர்வேயின் கார்ல்சனிடம் பட்டத்தை பறிகொடுத்தார். இந்தியா தொடர்பான ஒரு புத்தகத்தில் ஆனந்த் எழுதிய சிறப்புக் கட்டுரையில் கூறியிருப்பதாவது: இந்தியாவில் உள்ள ஒவ்வொரு பள்ளியிலும் சதுரங்கம் விளையாடப்பட வேண்டும். இதுதான் என் கனவு. ரஷ்யாவைப் பொறுத்தவரை அவர்களின் மரபணுவில், சதுரங்க விளையாட்டு கலந்துள்ளது. அந்நாட்டு பெண்கள் திருமணம் முடித்து கணவன் வீட்டிற்கு செல்லும் போது, அவர்களுடன் ஒரு சதுரங்கப் பெட்டியைக் கொடுத்து அனுப்புவர். மொஸ்கோவுக்கு 1980இல் சென்றேன். அங்குள்ள கார் சாரதி கூட சதுரங்க நுணுக்கங்களை நன்கு அறிந்திருந்தார். இதனால்தான் இந்த விளையாட்டில் ரஷ்யா ஆதிக்கம் செலுத்தியது. நான் விளையாட ஆரம்பித்தபோது, இந்தியர்களுக்கு இதில் ஆர்வம் இல்லை. தற்போது, சதுரங்க விளையாட்டு நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. தினமும் சதுரங்கப் பயிற்சி அக்கடமி ஒன்றை ஆரம்பிக்கின்றனர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# வடமாகாண வர்ண இரவு

## லிவிங்டன் உட்பட 10 பேருக்கு அதிசிறந்த ஆற்றல் வெளிப்பாட்டாளர் விருது

(யாழ்ப்பாணம்)

சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிப் பதக்கங்கள் வென்ற தேசிய கனிஷ்ட வீரர்களாக வேனுஜா மற்றும் லிவிங்டன் ஆகியோர் உட்பட பத்து வீரர்களுக்கு வடக்கு மாகாண அதி சிறந்த ஆற்றல் வெளிப்பாட்டாளர் விருது வழங்கப்படவுள்ளது.

வடமாகாண நான்காவது வர்ண இரவு விழாவின்போது இவர்கள் உட்பட 150 இற்கும் மேற்பட்ட வீரர்கள், பயிற்றுநர்கள் ஆகியோருக்கு இந்த விருதுகள் வழங்கப்படவுள்ளன.

அகில இலங்கை பாடசாலைகள் விளையாட்டு விழா 2013, கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட மெய்வல்லுநர் போட்டிகள் ஆகியவற்றில் பதக்கம் வென்ற மற்றும் அடைவு மட்டத்தை எட்டிய வீரர்களுக்கும் தேசிய விளையாட்டு விழாவில் பதக்கங்கள் வென்றவர்களுக்கும் வர்ண விருதுகள் வழங்கப்படவுள்ளன.


வடமாகாணசபை நிறுவப்பட்ட பின்னர் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சினால் முதல் தடவையாக நடாத்தப்படும் இவ்விழா யாழ். கல்வியியற்கல்லூரி மண்டபத்தில் நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 5.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இவ்விழாவின்போது மேற்குறிப்பிட்ட இருவரைவிட உடுபிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் ஆர். விமலேந்திரா, வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தின் ஆர். தர்ஷிகா, வவுனியா வைவப்பிரகாச மகளிர் கல்லூரியின் கே. லேகாஜினி, தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியின் ஜே. அனிதா, கடற்படையின் ஆர். காவேரி, யாழ். சென். ஜோண்ஸ் கல்லூரியின் யூ. வினோத்குமார், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த ஏ. ரஞ்சன், வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த ஜீ. வசன்குமார ஆகியோர் அதி சிறந்த ஆற்றல் வெளிப்பாட்டாளர்கள் விருதுகளை வென்றெடுக்கவுள்ளனர்.

பூட்டானில் இவ்வருட மத்தியில் நடைபெற்ற எட்டாவது ஆசிய கனிஷ்ட வலைப்பந்தாட்டப் போட்டிகளில் வெள்ளிப் பதக்கம் வென்ற இலங்கை கனிஷ்ட அணியில் வேனுஜா பரமலிங்கம் இடம் பிடித்திருந்தார்.

இதேவேளை, இந்தியாவின் ரஞ்சி நகரில் நடைபெற்ற இரண்டாவது தெற்காசிய கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டிகளில் ஆண்களுக்கான ஈட்டி எறிதலில் 61.07 மீற்றர் தூரத்தைப் பதிவு செய்த லிவிங்டன் வெள்ளிப் பதக்கம் வென்றிருந்தார்.

இவர்களைவிட சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றிய இலங்கை அணியில் இடம்பிடித்தமைக்காக தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியின் பி. ஷானு (14இன் கீழ் ஆசிய கால்பந்தாட்டம்), மன்னார் புனித சவேரியார் கல்லூரியின் பி. ஜோன்சன், ஆர். சிஷோர் (19 வயதின் கீழ் ஆசிய கிண்ண தகுதி கால்பந்து போட்டி) ஆகியோரும் வர்ண விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.



போரினால் மிகவும் பாதிக்கப்பட்டு தற்போது சிறுகச் சிறுக மீண்டு வரும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலும் இவ்வருடம் பலர் பதக்கங்களை வென்று வர்ண விருதுகளை வெல்லவிருப்பது சிறப்புக்குரியதாகும். அத்துடன் மன்னார் மாவட்டத்திலிருந்து மிகவும் பின்தங்கிய பிரதேசத்தைச் சேர்ந்த வீரர்கள் வர்ண விருதுகளைப் பெறவுள்ளனர்.

# கோட்ட மட்ட கால்பந்தாட்டம்

## யாழ்.இந்து, கொக்குவில் இந்து சம்பியன்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான கோட்ட மட்டக் கால்பந்துப் போட்டியில் கொக்குவில் இந்து, யாழ். இந்துக் கல்லூரிகள் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டன.

நல்லூர் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான கோட்ட மட்ட கால்பந்துப் போட்டி கடந்த வாரம் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் 14, 16, 18 வயதுப்பிரிவு அணிகளுக்கிடையில் போட்டிகள் நடைபெற்றன. 14 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும், யாழ். இந்துக் கல்லூரி அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது.

16 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி அணியும் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் மோதின. இதில் இரு அணிகளுமே ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் ஆடின. இருப்பினும் அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தும் விதத்தில் சிறப்பானதொரு கோலைப் போட்டுக் கொண்ட யாழ். இந்துக் கல்லூரி முன்னிலை பெற்றது. இரு அணிகளும் தொடர்ந்து கோலைப் பெற்றுக்கொள்ள போராடியபோதும், இறுதி வரை அது முடியவில்லை. நிறைவில் யாழ். இந்துக் கல்லூரி அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கோட்ட மட்ட சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

18 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி அணியும், திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலய அணியும் மோதின. இதில் யாழ். இந்துக் கல்லூரி ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்தியது. இறுதியில் யாழ். இந்துக் கல்லூரி அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கோட்ட மட்ட சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக்கொண்டது.

யாழ். கோட்ட உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வில் அதிபர்கள், ஆசிரியர்கள், பொறுப்பாசிரியர்கள், பயிற்றுநர்கள், வீரர்கள் எனப் பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (93)




## மகாஜன போராடித் தோல்வி

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணிக்கெதிரான இனிங்ஸ் கிரிக்கெட் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி அணி மூன்று விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 13 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான ஒரு நாள் இனிங்ஸ் போட்டி தற்போது நடைபெற்று வருகின்றது. இதில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணிக்கும், யாழ். இந்துக் கல்லூரி அணிக்குமிடையிலான போட்டி ஒன்று கடந்த வாரம் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதல் இனிங்ஸிற்காக ஆடிய தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 67 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜம்ஷன் 19, ரேணுஜன் 9 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் தனுஷன், சானுஜன் ஆகியோர் தலா மூன்று, சைலரூபன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிய யாழ். இந்துக் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 99 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சைலரூபன் 34, சானுஜன் 25 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ரேணுஜன் நான்கு, விணுஜன் மூன்று, பங்கஜன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

33ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 129 ஓட்டங்களைப் பெற்றது. இதில் நீல்ஜோன்சன் 32, எம். பகீரதன் 21, ரேசாத் 18 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சாலுஜன் நான்கு, சந்துரு மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 99 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய யாழ். இந்துக் கல்லூரி அணி ஏழு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் கிருத்திஜன் 25, கீர்த்திஜன் 10 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ரேணுஜன் மூன்று, பகீரதன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இதன் மூலம் மூன்று விக்கெட்டுக்களால்

## தற்காலிக நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

நியூஸ்ரார் விளையாட்டுக் கழகத்தினால் நடாத்தப்பட்டு வந்த நியூஸ்ரார் பிறிமியர் லீக் ருவென்ரி-20 போட்டித் தொடர் சீரற்ற கால நிலை காரணமாக தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாகப் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் அனுசரணையுடன் நடைபெற்று வந்த இப்போட்டித் தொடரில் யாழ். மாவட்ட முன்னணி அணிகள் பல பங்கு கொண்டன.

யாழ். இந்துக்கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி போன்ற மைதானங்களில் நடைபெற்று வந்த இப்போட்டிகள் சீரற்ற கால நிலை காரணமாக நிறுத்தப்பட்டிருப்பதாகவும், போட்டி மீண்டும் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(எஸ்.பி.)



கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் வைரவிழாவை முன்னிட்டு தென்மராட்சிக் கோட்டப் பாடசாலை வீரர்களுக்கிடையிலான மரதன் ஓட்டப் போட்டி கடந்த 16ஆம் திகதி நடைபெற்றது. வித்தியாலய முன்றலில் ஆரம்பமான வேளை போட்டியாளர்கள் ஓடுவதைக் காணலாம். இப்போட்டி வித்தியாலய அதிபரினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதேவேளை, தென்மராட்சி ரீதியான திறந்த மரதன் போட்டியும் நடாத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (51)

# திரைப்படமும் தத்துவமும்

- ச.அனுக்ரஹா -



தீஸியஸ் முரண்பாடு என்பது இதுதான். பழுதடைந்த ஒரு கப்பலின் பாகங்கள் ஒவ்வொன்றாக மாற்றப்பட்டு, இறுதியில் அனைத்து பாகங்களும் மாற்றப்பட்டால், அது அப்பழைய கப்பலேதானா? அப்படி பழைய கப்பலிலிருந்து அகற்றப்பட்ட பாகங்களைக் கொண்டு இன்னொரு கப்பல் உருவாக்கினால், அது புதிய கப்பலாகுமா? இல்லை, அது முதல் கப்பலேதானா?

இந்த முரண்பாட்டு வாக்கியங்களுடன் தொடங்குகிறது தீஸியஸின் கப்பல் (Ship of Theseus) படம். மூன்று கதைகளாக மூன்று மனிதர்களின் உலகில் பயணிக்கிறது.

மைத்திரேயா, ஒரு துறவி, குரு. அஹிம்சை எனும் மத கொள்கையைத் தன் வாழ்வின் கொள்கையாக கொண்டவர். அழகுப்பொருட்கள் தயாரிப்பில், விலங்குகள் துன்புறுத்தப்படுவதை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருக்கிறார். எங்கும் நடந்தே செல்வது, பிச்சை எடுத்தே உண்பது, எல்லா உயிர்களிடமும் அஹிம்சை என்பன அவரது வாழ்வின் கொள்கைகள். தனது வழக்கறிஞரின் உதவியாளரான சார்வாகனுடன் அவருக்கு ஒரு அழகிய நட்பு வளர்கிறது. மிகுந்த வயிற்று நோவால் அவதிப்படுகிறார். அவரது ஈரல் பழுதடைந்துவிட்டதாகவும், புதிய ஈரலைப் பொருத்த வேண்டுமென்றும் டாக்டர் சொல்கிறார். மருந்துகளை ஏற்க மறுக்கும் மைத்திரேயா, உண்ணாவிரதமிருந்து தனது இறப்பை ஏற்க தயாராகிறார். அவரது முடிவை மாற்ற சார்வாகன் தன் தர்க்கங்களை உருவாக்குகிறான். ஒரு எறும்பின் உடலை ஆக்கிரமித்து, அதைத் தன் இருப்பிடமாக கொண்டு, பின் அவ்வெறும்பையே அழித்து, தன் வம்ச விருத்தி செய்யும் காளானைப் பற்றி கூறுகிறான். இயற்கை மீண்டும் மீண்டும் உயிர்களை மறுசுழற்சி செய்வதுபற்றி கூறுகிறான். கோர்ட்டில் அவரது வழக்கு விவாதிக்கப்படும்போதும், பத்திற்கு பத்து என்ற சிறிய கூண்டுகளில் பத்து முயல்களை அடைத்து அவர்கள் மீது நடத்தப்படும் வன்முறையைப் பற்றி வழக்கறிஞர் கூற, எதிர்த்தரப்பில், அதைவிட மோசமான நிலையில்தான் மும்பை மின்சார ரயில்களில் மனிதர்கள் செல்கிறார்கள் என்று கூறுகிறார். இத்தனை சிக்கலாக மாறிவிட்ட உலகில் எந்தவொரு கொள்கையும் ஒரு தரப்பு அறிவுஜீவித்தனம்தான் என்று சார்வாகன் அவரிடம் வாதிடுகிறான். இறுதியில், சாவிற்கு மிக அருகில் செல்லும் மைத்திரேயா, சிகிச்சைக்கு ஒப்புக்கொள்கிறார்.

மனிதர்களின் இலட்சியவாதங்கள் எங்கு முடிந்து எங்கு தொடங்குகின்றன?

நவீன் எனும் பங்குச் சந்தைத் தரகன். சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை பெற்று குணமாகி வரும் இளம் நவீன், அதே ஆஸ்பத்திரியில் தனது பாட்டியை எலும்பு முறிவிற்காக அனுமதிக்க நேர்கிறது. சமூக ஆர்வலரான அவனது பாட்டிக்கும் அவனுக்கும் கருத்து மோதல் ஏற்படுகிறது. வெறும் பணமும் அந்தஸ்தும் மட்டும் ஒருவனை முழுமையாக்காது என்ற அவனது பாட்டியின் குற்றச்சாட்டு அவனை சீண்டுகிறது. தற்செயலாக அதே ஆஸ்பத்திரியில், சிறுநீரகத்தை திருட்டுக்கொடுத்த ஒரு அப்பாவி தினக்கூலியாளைப் பற்றி தெரிய வருகிறது. முதலில் தனக்கே அந்த ஏழையினுடைய சிறுநீரகம் பொருத்தப்படவில்லை என்று உறுதிப்படுத்திக்கொண்டு, அது சென்ற சேர்ந்த இடத்தை பின்தொடர்கிறான்.

ஏழைகளிடமிருந்து அவர்களுக்கு தெரியாமல் திருடி எடுத்து சிறுநீரகங்கள், அதிக பணம் தரும் வெளி நாட்டவர்க்கு விற்கப்படும் நிதர்சனம் காட்டப்படுகிறது. ஸ்ரொக்ஹோம் வரை சென்று அச்சிறுநீரகம் பொருத்தப்பட்ட நபரை சந்திக்கிறான். அத்தனை எளிமையாக தீர்த்துவிடக்கூடிய தார்மீக சிக்கல் இல்லை அது என உணர்கிறான். குற்றவுணர்வால் பீடிக்கப்படுகிறார் அம்மனிதர். ஆனால், பெற்ற சிறுநீரகத்தைத் திருப்பித் தர யாரால்தான் முடியும். பாதிக்கப்பட்ட அந்த ஏழைக்கு அவர் பண உதவி செய்ய ஒப்புக்கொள்கிறார். அதுவரை நடந்ததே அவனது வாழ்க்கைப் பார்வையை மாற்றிவிடுகிறது.

மனிதனின் தார்மீகம் அவனது மனதின் எல்லைக்குள் இருப்பதுதானே?

இப்படத்தின் மூன்று பாத்திரங்களும் தங்களது அழுத்தமான நம்பிக்கைகள் இன்னொருவரது பாதிப்பால் உடைபடுவதை உணர்கிறார்கள். மூவரின் சிந்தனைகளும் பாகம் பாகமாக மாற்றப்படுகின்றன, தீஸியஸின் கப்பலைப் போல. கப்பல் எனும் முழுமையில், எது யாருடைய பாகமாக இருந்தால் என்ன?

# பிழையின்றித் தமிழ் 58

**கொஞ்சம் (கொஞ்சும்) இலக்கணம்:**

காளி கோவில் தெரு காளிக் கோவில் தெரு - எது சரி? கோ.சு.மணி தெரு; கோ.சு.மணித் தெரு - எது சரி? இரண்டு எடுத்துக்காட்டுகளிலும் முதலில் வருவதே (க் - மிகாமல், த் - மிகாமல்) வருவதே சரி.

ஆறாம் வேற்றுமைத் தொகையில் நிலை மொழி உயர்திணையாய் இருப்பின் வல்லெழுத்து மிகாது.

காளியது கோவில், மணியது (பெயர் கொண்ட) தெரு என்று விரியும் இவை. அது எனும் உருபு, காளி கோவில், மணி தெரு என்பனவற்றுள் மறைந்திருப்பதால் இவை ஆறாம் வேற்றுமைத் தொகைகள். காளி, மணி ஆகிய நிலைமொழிகள் உயர்திணை எனக் காண்க. நிலை மொழி முதலில் வருவது; கோவில், தெரு என்பன வருமொழிகள் (பின்னர் வந்து சேர்வன).

தெருப் பெயராதலின் மணி தெரு என்று விட்டிசைத்தல் சரியே. மணித் தெரு எனில் மணியான (சிறந்த) தெரு என்று வேறு பொருள் உண்டாகக் கூடும்.

நம்பி என்பது ஒருவர் பெயர். அவரது கையை எப்படி நம்பி கை (நம்பியது கை) என்று எழுதிட வேண்டும். நம்பிக்கை என்று எழுதினால் பொருளே மாறுபட்டுப் பிழையாகிவிடும். இவ்வாறே தம்பி தோள் எனில் தம்பியது தோ: எனப் பொருள்படும். தம்பித் தோள் என்றால் பிழை. தம்பித்துரையில் - "த்" வருகிறதே! வலி மிகல்தானே இது? ஆம். வல்லெழுத்து மிகுதல்தான். ஆனால் தம்பி எனும் பெயரும், துரை என்னும் பெயரும் ஒன்றோடொன்று ஒட்டி நிற்பவை. அ..தாவது தம்பியாகிய துரை என்று பொருள். இதனை இருபெயரொட்டுப் பண்புத் தொகை என்பர். இவ்விடத்து வல்லொற்று மிகும் என்பது இலக்கண விதி.

**வல்லொற்றின் பின் மெய்யெழுத்து வராது**

இதுபற்றித் தொடக்கப்பள்ளியிலேயே ஆசிரியர் சொல்லித் தந்திருப்பார். வல்லினப்புள்ளி எழுத்துக்கள் (எ-டு: ட்,ற்) பின்னே மற்றொரு ஒற்று வராது எனக்கூறி கற்க்கண்டு என எழுதக்கூடாது. கற்கண்டு என்று எழுதுக எனச்சொல்லியிருப்பார்.

ஆயினும் இன்னும் பலர் பயிற்ச்சி என்று எழுதுகிறார்கள். "ற்" ஓசையே அழுத்தமாக இருப்பதால் "ச்" அழுத்தம் தனியே வேண்டாம் என்றே இல்க்கண நூலார் "ற்" றோடு "ச்" சேராது என்றனர். சொல்லாக உச்சரிக்கும்போது அந்தச் ஒலி இருக்கிறது என்பதை உணர்க. அதனால் தாம் சிலர் தம்மையறியாமலேயே பயிற்ச்சி என்று எழுதிவிடுகிறார்கள்.



பற்பசை என்பதும் அத்தகைய ஒரு சொல். பற்பசை என்றே எழுத வேண்டும். இவ்வாறே உட்கார் என்பதை உட்க்கார் என்றெழுதுவதும் பிழை. இனி நீங்கள் எழுதும்போது கவனமாக உட்காருங்கள், பற்பசை கொடுங்கள், கற்கண்டு எடுத்துக்கொள்ளுங்கள், நாளும் பயிற்சி செய்யுங்கள் என்று தவறின்றி எழுதுவீர்களாக.

வல்லொற்று இரட்டித்தல் உண்டு; இது வேறு. எந்த வல்லொற்று வந்ததோ அதே எழுத்து - இன்னொரு சொல்லோடு சேர்கிறபோது இரட்டித்தல் அது. (எ-டு) காட்டரண் (காடு+அரண்) ட் இரட்டித்தது, சோற்றுப்பானை (சோறு+பானை) ற் இரட்டித்தது.

**அமெரிக்காவில் மணியடித்தான்!**

எதற்கு என்று வினவுகிறீர்களா? எதற்குமில்லை. அமெரிக்காவில் என்பது தனி; மணியடித்தான் என்பது தனி. இரண்டையும் ஏன் இங்கே காட்டினோம் என்பது பற்றிப் பார்ப்போம்.

அமெரிக்கா, ஒரு நாட்டின் பெயர். அ..தென்ன "வில்"? அது "வில்" அன்று "இல்" எனும் உருபு "வில்"லாக மாறியது. எப்படி? அமெரிக்கா (க்+ஆ=கா) எனும் சொல்லில் இறுதி, "ஆ" என்று உயிரெழுத்து ஓசையில் முடிகிறது. இல் என்னும் உருபுவில் "இ" என்னும் உயிரெழுத்து இருக்கிறது. இரண்டு உயிர்களையும் ஒன்றிணைக்க ஈண்டு "வ்" எனும் மெய்யெழுத்து பயன்பட்டது. இதற்கு உடன்படு மெய் என்று பெயர். இரண்டு உயிர் எழுத்துகள் ஒன்றொடொன்று சந்திக்கும்போது அவற்றை உடம்படுத்த (சேர்க்க) பயன்படும் மெய். அமெரிக்கா + இல், அமெரிக்கா+வ்+இல் = அமெரிக்காவில்.

மணியடித்தான் என்பதைப் பிரித்தால் மணி + அடித்தான் என்றாகும். இவற்றுக்கு இடையில் "ய்" என்னும் மெய்யெழுத்து வந்து இரண்டையும் இணைக்கிறது. மணி (ண்+இ)+ய்+அடித்தான் (ய்+அ=ய) மணியடித்தான்.

ஆக, வ்,ய் எனும் இரண்டும் உடம்படு மெய்கள் என்று இலக்கணம் சுட்டுகிறது. நாம் இந்த இலக்கணத்தைப் பார்த்தா பேசுகிறோம்? நாம் பேசுவதில் இந்த இலக்கணம் அமைந்து கிடக்கிறது. அமெரிக்காவில் (வ்), இந்தியாவில் (வ்), கராச்சியில் (ய்) இங்கு ஏன் "ய்" வர வேண்டும்?

நிலைமொழியில் இ, ஈ, ஐ, இருந்தால் "ய்" யும், ஏனைய உயிர்கள் இருந்தால் "வ்" வும் "ஏ" இருந்தால் இரண்டும் (ஏதாவது ஒன்று) உடம்படு மெய்யாக வரும். தே (த்+ஏ)+வ்+ஆரம்= தேவாரம். அவனே (ஏ)+ய்+அழகன் = அவனேயழகன்.

அமெரிக்காவில் "ஆ" இருப்பதால் "வ்" வந்தது. கராச்சியில் "இ" இருப்பதால் "ய்" வந்தது. தேவாரத்தில் "ஏ" காரம் உள்ளது. இதில் "வ்" வந்தது. அவனே - இலும் "ஏ" காரம் இருக்கிறது. இதில் "ய்" வந்தது. (இரண்டும் வரும்) ஆனால் கோவில், கோயில் என இரண்டு வகையாய் எழுதுதல் சரியன்று. கோவில் என்பதில் "ஓ" உள்ளது. "ஓ" இருந்தால் "வ்" தான் உடம்படு மெய். ஆதலின் கோவில் மட்டுமே சரி. கோ+இல் = கோ (க்+ஓ)வ் +இல் (வ்+இ=வி) கோவில்.

# உடையினுள் நுழைந்து பறக்கலாம்!




நியூசிலாந்தைச் சேர்ந்த ஒருவர் ஓர் உடையை வடிவமைத்திருக்கிறார். இந்த உடையில் இரண்டு சிலிண்டர்கள் உள்ளன. அவற்றில் முன்னோக்கித் தள்ளக்கூடிய காற்றாடிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த உடையை முதுகில் மாட்டிக் கொண்டு - மிகவும் இறுக்கமாகக் கட்டிக் கொண்டு - இயக்க வேண்டும். “சர்”ரென்று மேல் நோக்கிப் பறந்து செல்வீர்கள். இந்த உடையில் பொருத்தப்பட்டுள்ள கைப்பிடிகளைப் பயன்படுத்தி, எந்தத் திசையை நோக்கிச் செல்ல வேண்டுமோ, அந்தத் திசையை நோக்கிப் பறக்க முடியும்.

அதிகபட்ச வேகம் மணிக்கு 74 கி.மீ. உங்கள் எடையையும் சேர்த்து 330 கிலோ எடையைச் சுமந்து செல்லும் வல்லமை இந்தப் பறக்கும் உடைக்கு உண்டு.

இதைக் கண்டுபிடித்தவர் நியூசிலாந்தின் கிரைஸ்ட் சேர்ச் நகரைச் சேர்ந்த கிளன் மார்ட்டின். 30 ஆண்டுகள் முயற்சி செய்து கண்டு பிடித்திருக்கிறார்.

சாதாரண மோட்டார் பைக்கையே நம் நாட்டில் “ஓடாது... பறக்கும்” என்கிறார்கள். இந்தப் பறக்கும் உடை கிடைத்தால் என்ன சொல்வார்களோ?

# தலைவர் - காவலர்



இலக்கிய கூட்டமொன்றிற்கு தலைமை தாங்கும்படி, கி.வா. ஜ.,வை அழைத்தார், ஒரு அன்பர்.

“நான் சும்மா வந்து பேசிவிட்டுப் போகிறேன்...“

“ஏன் அப்படி சொல்கிறீர்கள்?“

“தலைமை தாங்குவதும், வாயிற்காவலர் வேலையும் ஒன்று தான்...“

“என்ன அப்படி சொல்லி விட்டீர்கள்!“

“வாயிற்காவலன் எல்லாருக்கும் முன் வந்து, வாயிலை திறந்து, உட்கார்ந்து கொள்ள வேண்டும். எல்லாரும் வந்து, செய்ய வேண்டியதை யெல்லாம் செய்யும் வரையில், பொறுமையாக காத்துக் கொண்டிருக்க வேண்டும். அனைவரும் புறப்பட்டுப் போன பின், வாயிலை மூட வேண்டும். தலைவன் வேலையும் இது தான். எல்லாருக்கும் முன்பாக, முதன் முதலில் வாயைத் திறந்து பேச வேண்டும். பேசுகிறவர்கள் ஒவ்வொருவராக வருவர் பேசுவர். எல்லாவற்றையும், பொறுமையாக கேட்க வேண்டும். எல்லோரும் பேசிய பின், சபையினரும் எழுந்து விடுவர். அப்போது கடைசியாக வாய் திறந்து, பின்னுரை பேச வேண்டும்...“ என்றார்.

- ‘அறிஞர் கி.வா.ஜ.’ நூலிலிருந்து...



## சிறுவர் கதை:

# கொடியவருக்கு உதவலாமா?

அந்தக் காட்டில் யாரோ ஒரு வேட்டைக்காரன் வைத்து விட்டுப் போன கூண்டில் ஒரு புலி மாட்டிக் கொண்டது.

கூண்டில் அகப்பட்ட புலி உறுமிக் கொண்டே நடை பயின்று கொண்டிருந்தது.

அப்போது அந்தக் காட்டு வழியே ஒரு வழிப்போக்கன் சென்று கொண்டிருந்தான்.

அவனைப் பார்த்து அந்தப் புலி, “ஐயா, தயவு செய்து என் பக்கம் வாருங்கள்” என்று அழைத்தது.

புலியைக் கண்டு பயந்து தூர விலகிச் சென்றவன் அதன் அழைப்பைக் கேட்டு கூண்டின் அருகே வந்தான்.

“ஐயா, எனக்கு மிகவும் வயதாகிவிட்டது. எனக்குக் கண்ணும் தெரியவில்லை. இந்த வேட்டைக்காரன் என்னைப் பிடித்துப் போய் துன்புறுத்துவான். தயவு செய்து என்னை விடுவித்து விட்டுப் போனால் உங்களுக்கு அந்தப் புண்ணியம் கிடைக்கும்” என்று பரிதாபத்துடன் உதவி கோரியது புலி.

உடனே வழிப்போக்கன், “உனக்கு உதவலாம். ஆனால், நீயோ கொடிய மிருகம். உன்னைக் கூண்டிலிருந்து வெளியேற்றி விட்டால் என்னைக் கொன்று தின்று விடுவாய்.” என்று [illegible]ந்தான்.

அந்தப் புலி, “ஐயா, நான் சைவமாக மாறி ரொம்ப காலமாயிற்று. இப்போதெல்லாம் நான் மனிதர்களைத் தின்பதில்லை. என்னை வெளியே விட்டுப் பாருங்கள் ஐயா. அப்போதுதான் தெரியும் நான் எவ்வளவு நல்லவன் என்று உங்களுக்குத் தெரியும்” எனக் கெஞ்சியது.

தயங்கி நின்ற வழிப்போக்கனிடம் அது கெஞ்சியது. பின்னர், “உன்னைத் தின்னமாட்டேன்” என்று சத்தியம் செய்தது.

அதன் தவிப்பைப் பார்த்த அந்த வழிப்போக்கன் பாவமாயிருக்கிறதே என்று எண்ணியபடி புலியின் சத்தியத்தை நம்பி அந்தக் கூண்டிலிருந்து அதை விடுவித்தான்.

வெளியே வந்த புலி, ஒரே பாய்ச்சலில் பாய்ந்து அந்த வழிப்போக்கனைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டது.

அவன் பயந்து அலறினான்.

“புலியே, என்னைத் தின்னமாட்டேன் என்று நீ சத்தியம் செய்ததை நம்பித்தானே உன்னை விடுவித்தேன். ஆனால், இப்போது என்னையே கொல்ல வருகிறாயே...” என்றான் அவன்.

“அப்பாவி மனிதனே, பட்டினியாய் இருப்பவர் முன் உணவு இருக்கும் போது, அதை உண்ணாமல் இருப்பது முட்டாள்தனம் அல்லவா? இது கூட உனக்குத் தெரியவில்லையே?” என்றது புலி.

“புலியே, நீ செய்வது நியாயம் என்று யாராவது சொன்னால் நான் உனக்கு உணவாகிறேன்.” என்று நடுங்கியவாறே அவன் சொன்னான்.

அப்போது ஒரு நரி அந்த இடத்துக்கு வந்தது.

நரியைப் பார்த்த வழிப்போக்கன் புலியிடம், ”இந்த நரியிடம் நியாயம் கேட்போம்” என்றான்.

புலி “நரி நம் இனத்தைச் சேர்ந்ததுதானே. இது நமக்குச் சாதகமாகத்தான் சொல்லும்” என எண்ணிக் கொண்டு நரியிடம் நியாயம் கேட்க சம்மதித்தது.

அருகே வந்த நரியைப் பார்த்த புலி அதிகாரத்துடன், “நரியாரே, நீங்களே எனக்குச் சரி யான நியாயம் சொல்லுங்கள். நான் கூண்டுக்குள் இருந்தேன், இந்த மனிதன் வெளியே போய்க் கொண்டு இருந்தார். இவரிடம் என்னை விடுவிக்கும்படி கேட்டுக் கொண்டேன். அவர் என்னை வெளியில் வந்து கொன்று விடக் கூடாது என்று கேட்டார். நானும் அதற்குச் சம்மதித்துச் சத்தியம் செய்து கொடுத்தேன். அவர் என்னை விடுவித்தார். என் கண் எதிரே நல்ல உணவாக இவர் இருக்கும் போது, அதை விடலாமா? அதனால்தான் இவரைப் பிடித்து வைத்திருக்கிறேன். இவரை நான் உணவாக்கிக் கொள்வது சரிதானே..?” என்றது.

நரி வழிப்போக்கனைப் பார்த்தது. அவன் பயத்தில் இருந்தான்.

நரி புலியைப் பார்த்து, “புலியாரே, நீங்கள் சொல்வது எனக்கு ஒன்றும் புரியவில்லை. இங்கு யார் கூண்டில் இருந்தது? யார் வெளியில் இருந்தது? எனக்கு ஒன்றுமே புரியவில்லை. எனக்கு வயதாகிவிட்டதால் சரிவர புரியமாட்டேங்குது” என்றது.

புலி பொறுமையிழந்து உறுமியது.

அதைக்கண்டு பயப்படுவது போல் பாசாங்கு செய்த நரி, “புலியாரே, என்னை மன்னியுங்கள் எனக்கு வயதாகி விட்டதால் எனக்கு மறதியும் அதிகமாக இருக்கிறது. புலியாரே தாங்கள் எங்கு இருந்தீர்களோ அங்கு சென்று நின்று சொல்லுங்கள்” என்றது.

புலி உடனே கூண்டுக்குள் சென்று நின்று கொண்டு, “இதோ பார், நான் இங்குதான் இருந்தேன். இந்த மனிதன்...” என்று நரிக்கு தன்னுடைய தரப்பை விளக்கமாகச் சொன்னது.

நரி அந்த வழிப்போக்கனிடம், “புலியார் உள்ளே இருக்கும் போது கூண்டுக் கதவு திறந்திருந்ததா? மூடியிருந்ததா?” என்று கேட்டது.

வழிப்போக்கன், “நரியாரே, கூண்டின் கதவு மூடியிருந்தது” என்றான்.

உடனே நரி, “அப்படியானால், கூண்டை மூடி வையுங்கள்” என்றது.

வழிப்போக்கனும் கூண்டை மூடினான்.


நரி, “அய்யா, கொடியவர்களைக் கண்டால் ஒதுங்கிக் கொள்ள வேண்டுமென்று உங்களுக்குத் தெரியாதா? உங்களிடம் “துஷ்டரைக் கண்டால் தூர விலகு “என்ற பழமொழி கூட இருக்கிறதே... அப்படியிருக்க இப்படிப் புலியைக் காப்பாற்றுகிறேன் என்று அதனிடம் மாட்டிக் கொண்டீர்களே...! இனியும் இப்படி இருக்காதீர்கள்... நீங்கள் உங்கள் வழியில் போங்கள்...” என்றபடி காட்டுக்குள் ஓடிவிட்டது.

“கொடியவருக்கு உதவி உயிரை இழக்க இருந்தேன். நல்லவேளை நரியின் உதவியால் தப்பித்தேன்” என்று எண்ணியபடி அங்கிருந்து சென்றான் அந்த வழிப்போக்கன்.

“அறியாமை, அவசரம், ஆணவத்தால் மீண்டும் கூண்டுக்குள் அகப்பட்டுக் கொண்டோமே... நம்மினம்தானே என்று எண்ணி நரியின் பேச்சைக் கேட்டு மாட்டிக் கொண்டோமே” என்று எண்ணியபடி கூண்டுக்குள் வளைய வந்தது அந்தப் புலி.

# பொசுக்கும் சிகையலங்காரம்!

தலை முடி அதிகமாக வளர்ந்து விட்டால், சிகை அலங்கார கடைகளுக்கு சென்று, அவற்றை வெட்டுவது தான், வழக்கமான நடைமுறை. ஆனால், சீனாவில் உள்ள குறிப்பிட்ட பகுதிகளில் வசிக்கும் மக்கள், முடியை வெட்டுவதற்குப் பதில், தீயால் பொசுக்கியும், சிகை அலங்காரம் செய்கின்றனர். சீனாவின், பல இடங்களில், இதற்கான கடைகள் உள்ளன. கத்தரி, கத்தி போன்ற உலோகங்களை, தீயில் சூடாக்கி, பின், முடியை பொசுக்குவது தான், இங்கு பின்பற்றப்படும் நடைமுறை. இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஒரு முதியவர் கூறுகையில், “சில ஆண்டுகளுக்கு முன்வரை, இந்தத் தொழிலுக்கு கிராக்கி இருந்தது. இப்போது குறைந்து விட்டது. வயதானவர்கள் மட்டுமே, இப்போது, கடைக்கு வருகின்றனர் இளைஞர்கள் வருவது இல்லை. இதனால், பாரம்பரியமான இந்தத் தொழில் மெல்ல மெல்ல, அழிந்து கொண்டே வருகிறது...“ என, கவலைப்படுகிறார்.






# 1,28,0 97 அடி உயரத்திலிருந்து குதித்த வீரர் இவர்...

**எப்படிக் குதித்தார் ?....வாங்க வாசித்துப் பார்ப்போம்**

இரண்டு மாடி கட்டிடத்திலிருந்து சாதாரணமாக எட்டிப் பார்த்தாலே நமக்கு தலை சுற்றும். ஆனால், ஒருவர் 1,28,097 அடி உயரத்திலிருந்து குதித்திருக்கிறார். என்ன பொய் சொல்றீங்களா என்று நீங்க கேட்க




லாம். இது உண்மைதான்.

இது நடந்தது 2012 ஒக்ரோபர் 14 ஆம் திகதி ஆஸ்திரிய நாட்டைச் சேர்ந்த பெலிக்ஸ் பம்காட்னர் (Felix Baumgavtner) என்ற 43 வயதுடையவர்தான் இந்த உலக சாதனையை நிகழ்த்தியுள்ளார். இவருக்கு பயம் என்றால் என்னவென்றே தெரியா தாம். இவருக்கு இதேதான் வேலை.

இதற்கு முன்னர் பல உயரமான கட்டிடங்கள், பாலங்கள், மலைகள் என பலவற்றிலும் இருந்து குதித்திருக்கிறார். ஆனால் இவையெல்லாம் இப்போது நிகழ்த்திய சாதனைக்கு சற்றும் ஈடாகாது.அமெரிக்காவில் இருக்கும் நியுமெக்சிகோ மாகாணத்திலிருந்து ஹீலியம் (Helium) நிரப்பிய பலூனில் இணைக்கப்பட்ட கேப்ஸ்யூல் (Capsule) என்ற அறையில் 38.4 கிலோ மீற்றர் உயரத்திற்கு பறந்து சென்றார். அவர் அந்த தூரத்தை அடைய 2.30 மணி நேரம் ஆனது. அந்த கேப்ஸ்யூலில் பூமியில் இருக்கும் கட்டுப்பாட்டு அறைககு தொடர்பு கொள்ள உதவும் சாதனங்கள் மற்றும் பிராணவாயு உள்ளிட்டவை இருந்தன. பெலிக்ஸிக்கு கட்டுப்பாட்டு அறையிலிருந்து தட்பவெப்ப நிலை, காற்றழுத்தம் குறித்த தகவல்கள் அவ்வப்போது கொடுக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

பெலிக்ஸ் முதலில் ஒக்ரோபர் 9, 2012 அன்று குதிப்பதாக திட்டமிட்டிருநதார். ஆனால் அன்றைக்கு வானிலை சரியில்லாத காரணத்தினால் அந்த சாதனை நிகழ்வு அக். 14 இற்கு ஒத்தி வைக்கப்பட்டது. முன்னதாக 1,20,000 அடியில் இருந்து குதிப்பதாகத்தான்




அவர் திட்டமிட்டிருந்தார். ஆனால் அவர் சென்ற ஹீலியம் பலூனின் அதீத ஒத்துழைப்பால் 1,28,097 அடியிலிருந்து குதிப்பதற்கு வாய்ப்பு ஏறபட்டது அவர் அந்த இலககை அடைந்ததும் கட்டுப்பாடு அறையிலிருந்து அவருக்கு குதிப்பதற்காக அனுமதி கிடைத்தது. அதன் பிறகு அவர் அதற்காக 32 பாது காப்பு ஏற்பாடுகளை ஒவ்வொன்றாக நிறைவேற்றி விட்டு, கேப்ஸ்யூலின் வெளியில் வந்து குதித்தார்.

அவர் குதித்ததும் பூமியை நோக்கி 1,342 கி.மீ. வேகத்தில் பாராசூட் இல்லாமல் பறந்து வந்தார். இது ஒலியை (Sound) விட அதிவேகமாகும். இதுவும் ஒரு உலகசாதனையாகும். இதற்கு முன்னர் 1,136 கி.மீ. வேகம் என்பதே சாதனையாக இருந்தது. அவர் குதித்த சில நொடிகளில் அவருக்கு ஒரு சிக்கல் ஏற்பட்டது. குதித்துக்கொண்டிருக்கும்போதே திடீரென அவர் கட்டுப்பாடின்றி சுற்ற ஆரம்பித்தார்.இதனால் அவர் சுயநினைவை இழக்கும் அபாயத்திற்கு தள்ளப்பட்டார். ஆனால் அவர் எபபடியோ சுதாரித்துக் கொண்டு நேராக தன்னை நிலைப்படுத்திக்கொண்டார். இவர் 4 நிமிடங்கள் 19 நொடிகள் பாரசூட் இல்லாமல் கீழ்நோக்கி வந்தார். ஆனால் இதற்கு முந்தைய சாதனை 4 நிமிடங்கள் 30 நொடிகளாகும்.பிறகு அவர் பாரசூட்டை இயக்கி கீழிறங்க மொத்தம் 8:30 நிமிடங்கள் ஆகியது. அவர் பூமியை தொட்டவுடன் இதற்கு முன்னர் 1960 இல் ஜோசப் கிட்டிங்கர் (Josep Kittinger) என்ற அமெரிக்கர் நிகழத்திய சாதனையான 1,02,800 அடி என்ற சாதனையை முறியடித்து புதிய உலக சாதனையை நிகழ்த்தினார் என அறிவிக்கப்பட்டது.

இவருக்கு ரெட் புல் (Red Bull) என்ற நிறுவனம் முழு பண உதவியை அளித்தது. அவர் செய்தியாளர்களிடம், போதிய பயிற்சி மற்றும் தன்னம்பிக்கையினாலேயே இந்தச் சாதனையை நிகழ்த்த முடிந்தது என்றும், இதனை குழந்தைகள் யாரும் சோதித்துப் பார்க்க வேண்டாம் எனவும் கூறினார்.

# உலகின் மிகப் பெரிய பல்கலைக் கழகம் அமெரிக்காவின் ஸ்டான்போர்டு




உலகின் மிகப் பெரிய பல்கலைக்கழகம் அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் உள்ளது. இது 8180 ஏக்கர் நிலப்பரப்பு உடை யது. இதனை 1891 ஆம் ஆனண்டு அன்றைய கலிபோர்னியா ஆளுநர் லேலாண்டு ஸ்டான்போர்டு, இளமையில் மறைந்த தம் மகள் நினைவாக இதைத் தொர்டங்கினார். உலகில் நோபல் பரிசு பெற்றவர்களில் 16 பேர் இங்குதான் பழித்தவர்கள். நம் இந்தியாவில் வாரணாசி (காசி) பல்கலைக்கழகம்தான் பெரிய நிலப்பரப்பு உடையது. இது சுமார் 1350 ஏக்கர் பரப்பு உடையது. உலகில் வேறு உள்ள பல்கலைக் கழகங்கள் ஸ்டான்போர்டை முந்துமா? பரப்பிலும், தரத்திலும்

# ஊர்ந்துசெல்லும் எறும்புகளுக்கு ஊர் போக வழி காட்டலாமா?



# வரைந்து பார்ப்போம்



# ஆங்கில அகராதியின் தந்தை - ஜான்சன்



முதல் ஆங்கில அகராதியைத் தொகுத்தவர் ஜான்சன் என்பது எல்லோருக்கும் தெரியும். இவருக்கு, தலைக்கனம் கொண்டவர் என்ற பெயரும் உண்டு. தனது விருப்பு வெறுப்புகளை அகராதியின் அர்த்தத்தில் புகுத்தியவர்.


ஸ்கொட்லாந்து மக்களைப் பிடிக்காது என்ற வெறுப்பினை அகராதியில் காட்டியவர். ஓட்ஸ் என்ற வார்த்தைக்கு, தானியம் என்று அர்த்தம் சொன்ன ஜான்சன், ஒரு வகைத் தானியம், இந்தத் தானியத்தை இங்கிலாந்தில் குதிரைகளும் ஸ்கொட்லாந்தில் மனிதர்களும் சாப்பிடுவர் என்று கூறியுள்ளார். 10 வருடங்கள் தனியாக உழைத்து, ஆங்கில அகராதியை முடித்தவர் ஜான்சன். பிரெஞ்சுமொழி அகராதி 40 மொழி வல்லுநர்களால் 40 ஆண்டுகள் உழைத்து உருவாகியுள்ளது. உங்களால் எப்படி 10 ஆண்டுகளில் தனியாக முடிக்க முடிந்தது என்று நண்பர் ஒருவர் ஜான்சனிடம் கேட்டுள்ளார்.

40 பிரெஞ்சுக்காரர்கள் 40 ஆண்டுகளில் செய்து முடித்ததை ஓர் ஆங்கிலேயன் 10 வருடங்களில் செய்து முடித்ததிலிருந்து, 10 ஆங்கிலேயர் 1600 பிரெஞ்சுக்காரர்களுக்குச் சமம் என்ற உண்மை தெரிகிறது என்றாராம் ஜான்சன். எதையும் - யாரையும் எடுத்தெறிந்து பேசும் ஜான்சன், தவறுகளைச் சுட்டிக் காட்டும்போது, அடக்கத்தைப் பின்பற்றியுள்ளார். உங்கள் அகராதியில் ஒரு வார்த்தையின் அர்த்தம் தவறாக உள்ளது என்று பெணமணி ஒருவர் சுட்டிக் காட்டியபோது, தவறுக்கு என் அறியாமைதான் காரணம் என ஒப்புக் கொண்டுள்ளார்.

ஜான்சன் ஸ்கொட்லாந்து மக்களைப் பற்றி மோசமான எண்ணம் வைத்திருப்பினும் அவரது ஸ்கொட்லாந்து நண்பர் பாஸ்வெல் பற்றி, பாஸ்வெல் எழுதிய வாழ்க்கை வரலாறு, ஆங்கில இலக்கியத்தில் நிலையான இடத்தினைப் பெற்று விட்டது மேலும், வாழ்க்கை வரலாறு எவ்வாறு எழுதப்பட வேண்டும் என்பதற்கு முன்மாதிரி நூலாகவும் உள்ளது என்று கூறியுள்ளார்.

# யாழ்ப்பாண தமிழ் சங்கத்தினால் சிறப்புற நடாத்தப்பட்ட நாவலர் விழா





(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் நாவலர் விழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நாவலர் வீதியில் உள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் சிறப்புற இடம்பெற்றது. யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் உபதலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கனகசபை அருள்நேசன் மங்கள விளக்கேற்றினார். கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஆசிரிய மாணவி விஜயதர்சினி தயாளனின் தமிழ்த்தெய்வ வணக்கத்தைத் தொடர்ந்து வரவேற்புரையை தமிழ்ச்சங்கப் பொருளாளர் ச.லலீசன், தொடக்கவுரையை தமிழ்ச்சங்கத் தலைவர் பேராசிரியர் தி.வேல்நம்பி ஆகியோர் ஆற்றினர்.

நாவலரும் தமிழ்த்தேசியமும் என்ற பொருளில் கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் ஓய்வு நிலை விரிவுரையாளர் கலாநிதி பண்டிதர் செ.திருநாவுக்கரசு சிறப்புரையாற்றினார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இசைத்துறைத தலைவர் கலாநிதி எஸ். ஸ்ரீதர்ஷனன் நாவலர் இசையரங்கை வழங்கினார். இதற்கு அணிசெய் கலைஞர்களாக வயலின் - விரிவுரையாளர் எஸ்.கோபிதாஸ், மிருதங்கம் - விரிவுரையாளர் ச.விமல்சங்கர், கெஞ்சிரா கலைஞர் எஸ்.செல்வரத்தினம் ஆகியோர் பங்கேற்றனர்.

நாவலரின் கனவை நனவாக்குவதில் பெரும் பங்கு வகிப்பது அவரது சமயப் பணிகளா? அல்லது தமிழ்ப்பணிகளா? என்ற தலைப்பில் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா தலைமையில் பட்டிமண்டபம் இடம்பெற்றது. இதில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்களான தி.செல்வமனோகரன், சி.ரமணன், ஆசிரியர் கு.பாலஷண்முகன், மருததுவபீட உதவிப் பதிவாளர் இ.சர்வேஸ்வரா ஆகியோர் வாதிகளாகவும் பிரதிவாதிகளாகவும் பங்கேற்றனர். நாவலர் நினைத்ததைக் காட்டிலும் தமிழ் வளர்ச்சியடைந்துள்ளது. ஆனால் சமயம் அப்படியல்ல. நாவலர் நினைத்த மாற்றங்கள் சமயத்தில் முழுமையாக நேரவில்லை. ஆதலால் தமிழ்ப்பணியே என நடுவர் தீர்ப்புரைத்தார்.

நிகழ்வைக் கௌரவப்படுத்தும் முகமாக ஆறுமுகநாவலர் என்ற நாவலர் சரிதம் உரைக்கும் நூலை யாழ். கரிகணன் பதிப்பகத்தினர் இலவசமாக வெளியீடு செய்தனர். அத்துடன் நாவலரின் படம் பொறித்த வண்ண நாட்காட்டியை கலந்து கொண்ட யாவருக்கும் இல்வசமாக வழங்கினர். (90,48)

# பொன்விழாவுக்கு பூரண ஒத்துழைப்பு மாநகரசபை உறுப்பினர் நன்றி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். ஒஸ்மானியாக்கல்லூரியின் பொன்விழா டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள நிலையில் இதற்கான உதவியையும் ஒத்துழைப்பையும் வழங்குவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் யாழ். மாநகர முதல்வர் கூறியுள்ளனர்.

இதற்காக அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகளை யாழ். மாநகர சபை உறுப்பினர் பி.ஏ.எஸ். சுபியான் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

எதிர்வரும் மாதம் யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரியின் பொன்விழா நிகழ்விற்கான ஏற்பாடுகளை கல்லூரி நிர்வாகம் மேற்கொண்டு வருகின்றது.

இப்பொன்விழா நிகழ்ச்சிகளை மிகவும் சிறப்பாக நடாத்துவதற்கு பூரணமான ஒத்துழைப்பை வழங்குமாறு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ்தேவானந்தா அவர்களிடமும் யாழ். மாநகரசபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசாவிடமும் நேரடியாக வேண்டுகோளை விடுத்திருந்தேன்.

இதன்போது அமைச்சர் என்ன உதவிகள் செய்ய வேண்டும் என்று என்னிடம் வினவினார். கல்லூரி நிர்வாகம் இது தொடர்பாக தங்களிடம் தொடர்பு கொண்டால், தாங்கள் உதவியைச் செய்யுமாறும் யாழ். மாநகரசபையிடமும் இவ்விழாவை சிறப்பாகச் செய்யவிருக்கும் வேண்டுகோளையும் மேயர் அவர்கள் நிறைவேற்றித்தரவேண்டும் என்றும் கூறினேன். அவர்கள் இதற்குத் தங்களுடைய முழு ஒத்துழைப்பும் பங்களிப்பும்கிடைக்கும் என கூறியமைக்காக அவர்கள் இருவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன் எனத் தெரிவிககப்பட்டுள்ளது.

# ஒழுங்கற்ற செயற்பாடுகளால் விசனமடையும் ஆசிரிய ஆலோசகர்கள்

(வலிகாமம்)

சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களை கோட்டக்கல்வி அலுவலகங்களில் இணைத்த பின்னர், கோட்டக்கல்விப்பணிப்பாளர்கள் சிலர் எல்லாப்பாட ஆசிரிய ஆலோசகர்களையும் ஆரம்பக் கல்வி பாடசாலை மேற்பார்வைக்கு அழைத்துச் செல்கின்றனர்.

அவ்வாறு அழைத்துச் சென்று மேற்பார்வையில் ஈடுபடுத்துவது தவறானது எனவும், ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர்களை மட்டுமே அழைத்துச் சென்று மேற்பார்வைப்பணியில் ஈடுபடுத்தவேண்டும் எனவும் வடமாகாண ஆசிரிய ஆலோசகர் சங்கப் பொதுச்செயலாளர் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பிலும், ஆசிரிய ஆலோசகர்களை கல்வி வலயங்களிலிருந்து கோட்டங்களிற்கு இணைப்பது தொடர்பிலும் வடமாகாணக் கல்வித்திணைக்கள மேலதிக மாகாணப்பணிப்பாளர்களுடனான கலந்துரையாடலின்போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டதாக செயலாளர் தெரிவித்துள்ளார்.

ஆரம்பக் கல்விப் பாடசாலைகளின் மேற்பார்வைக்கு ஏனைய பாடஆசிரிய ஆலோசகர்களை அழைத்துச்செல்வது கடமை ரீதியாக பல இடர்பாடுகளை எதிர்நோக்க வேண்டிவரும் எனவும், ஏனைய பாடசாலை ஆசிரிய ஆலோசகர்கள் வழமை போல் தங்களது பாடசாலைத் தரிசிப்புக்குச் செல்லலாம் எனவும், இது தொடர்பில் கோட்டக்கல்விப் பணிப்பாளர்களிற்கு அறிவுறுத்த உள்ளதாகவும் மேலதிக மாகாணப் பணிப்பாளர்கள் தெரிவித்துள்ளதாக, செயலாளர் அறிவித்துள்ளார். (06)

# புகையிலைச் செய்கை

(யாழ்ப்பாணம்)

தீவகப்பகுதியில் விவசாயிகள் புகையிலை செய்கையை மேற்கொள்வதற்கு தயாராகி வருகின்றனர்.

குறிப்பாக மண்டைதீவு, அல்லைப்பிட்டி வேலணை போன்ற பிரதேசங்களில் உள்ள விவசாயிகள் புகையிலைச் செய்கையை மேற் கொள்ளவுள்ளதுடன் தமது தோட்ட நிலங்களை பண்படுத்தும் பணியில் ஈடுபட்டுவருகின்றனர்.

# பதிவிறக்கப் பெட்டகம்

சிறந்த ஆங்கில அறிஞரான ஆல்ஸ்டன் சற்றே குள்ளமாக இருப்பார். ஆனால் புத்திசாலித்தனமும் பொறுமையும அவரிடம் அதிகம். கிண்டலாகப் பேசுவதிலும் விண்ணன்.

அவரைக் கேலி செய்யும் நோக்கத்துடன் ஒரு மனிதர் அவரைப் பார்த்துக் கிண்டலாக, "உங்களை என் கோட் பொக்கெற்றில் போட்டுக் கொள்ள முடியும். அந்த அளவுதான் இருக்கிறீர்" என்றார்.

"அப்படியே செய்யுங்கள். அப்படிச் செய்தால் உங்கள் தலையில் இருப்பதைவிட கோட் பொக்கெற்றில் அதிக மூளை இருக்கும்!" என்றார் ஆல்ஸ்டன்.

*** *** *** ***

பெர்னார்ட்ஷா பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோது, சக மாணவர்கள் அவரை மட்டம் தட்டிக்கொண்டேயிருப்பார்கள். அவர்களுக்குப் பாடம் புகட்ட, சரியான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தார் ஷா.

ஒருநாள் வகுப்பாசிரியர், மாணவர்களைப் பார்த்து, "உங்களில் சொர்க்கத்துக்குப் போக விரும்புகிறவர்கள் எழுந்து நில்லுங்கள்..." என்றார்.

உடனே பெர்னார்ட்ஷாவைத் தவிர அனைவரும் எழுந்து நின்றனர்.

திகைத்துப்போன ஆசிரியர், "உனக்கு மட்டும் சொர்க்கத்துக்குப் போக விருப்பம் இல்லையா?" என்று ஷாவிடம் கேட்டார்.

அதற்கு ஷா, "எனக்கும் போக ஆசைதான். ஆனால் இவர்களெல்லாம் சொர்க்கத்துக்குப் போன பிறகு, அது சொர்க்கமாகவா இருக்கும்..?" என்று கேட்டார்.

அவரை மட்டம் தட்டிய மாணவர்கள் முகத்தில் ஈயாடவில்லை.

*** *** *** ***

தபால் அலுவலகத்துக்கு ஒரு கடிதம்... 'கடவுள், சொர்க்கலோகம்' என்று, விலாசமிட்டு வந்திருந்தது. அனுப்பியவரின் முகவரி இல்லை. கடவுளுக்கு எப்படிக் கொண்டு போய் சேர்ப்பது... அனுப்பியவருக்கே எப்படி திருப்பி அனுப்புவது... கடிதத்தின் உள்ளே, அனுப்பியவரின் முகவரி இருக்கிறதா என்று பார்க்க. கடிதத்தை உடைத்தனர் தபால் அலுவலக ஊழியர்கள். உள்ளே முகவரியும் இருந்தது. அதை எழுதியவர், தன் கஷ்டத்தை எல்லாம் எழுதி, தனக்கு, 1000 ரூபா பணம் அனுப்பும்படி, கடவுளிடம், உதவி கேட்டிருந்தார். படித்த, தபால் ஊழியர்கள் மனம் நெகிழ்ந்து, ஆளுக்கு கொஞ்சம் பணம் போட்டு, அவருக்கு, 800 ரூபா பணம் அனுப்பினர். இரண்டு நாளில், அவரிடமிருந்து மற்றொரு கடிதம். கடவுளுக்கு நன்றி தெரிவித்து எழுதப்பட்டிருந்தது. அதில், 'கடவுளே...தாங்கள் அனுப்பிய பணத்தில், 200 ரூபாவை, தபால் ஊழியர்கள் திருடி விட்டனர்...' என்று குறிப்பிட்டிருந்தார்.

*** *** *** ***

ஒரு முறை தீட்சிதர் வீட்டில் திருடன் ஒருவன் நுழைந்து விடுகிறான். அவன் எல்லோரும் சாப்பிட்டுவிட்டு தூங்கட்டும் என கொல்லைப்புறத்தில் காத்திருக்கிறான். சாப்பிட்டு முடித்து கை கழுவப் போன தீட்சிதர் அவனை பார்த்துவிடுகிறார். ஆனால் உடனே எதுவும் செய்யாமல் அமைதியாக அருகில் இருக்கிற அண்டாவில் தண்ணீரை அள்ளி வாயில் ஊற்றி ஊற்றி கொப்புளிக்க ஆரம்பிக்கிறார்.

கொப்புளித்த நீரை மறைந்திருக்கும் திருடன் மீது துப்ப ஆரம்பிக்கிறார். தொடர்ந்து துப்ப நனைந்துகொண்டேயிருந்தாலும் திருடன் பதுங்கியே இருக்கிறான். கைகழுவப் போன மனுஷனை காணோமே என தீட்சிதரின் மனைவி வந்து பார்க்க இந்த ஆளோ துப்பிக்கொண்டே இருக்க.. என்னாச்சு உங்களுக்கு என கேட்கிறார். தீட்சிதரோ மனைவியின் மீதே இப்போது துப்ப தொடங்கிவிடுகிறார். அதுவும் விடாமல்.. இவருக்கு பித்துப் பிடித்துவிட்டது போலிருக்கே என்று பக்கத்து வீடுகளில் போய் சொல்ல.. அவர்கள் சிலர் மொத்தமாக வந்து என்ன தீட்சிதரே உங்கள் மனைவி மீது துப்புகிறீர்களாமே என்று கேட்க.. தீட்சிதர்..

'கேளுங்கள் நல்லவர்களே... என் மனைவிக்கு எவ்வளவோ பணம் செலவழித்து நகைநட்டு பட்டுச்சேலை எல்லாம் வாங்கிக் கொடுத்திருக்கிறேன்.. நான் ஒருமுறை அவள் மீது துப்பக்கூடாதா.. என்ன அநியாயம்.. இங்கே கிணத்துக்கு பின்னால் ஒரு நல்லவர் இருக்கிறார். அவர் மேல் அரை மணிநேரமாகத் துப்புகிறேன் ஆனால் அவர் ஏன் துப்புகிறீர்கள் என்று என்னை ஒரு வார்த்தை கேட்டிருப்பாரா.. எவ்வளவு மரியாதை. அந்த நல்லவருக்கு இருக்கிற பொறுமை என் மனைவிக்கு இல்லையே..." என்று சொல்ல.. பக்கத்து வீட்டுக்காரர்கள் சேர்ந்து திருடனைப் பிடித்துவிடுகிறார்கள். கூடவே தீட்சிதரின் தந்திரத்தையும் ரசிக்கிறார்கள்.

# சந்தர்ப்பங்களை சரியாகப்பயன்படுத்தி துன்ப வாழ்விலிருந்து விடுபட வேண்டும்

## வலி.வடக்கு பிரதேச சபை எதிர்க்கட்சி உறுப்பினர்

(யாழ்ப்பாணம்)

சந்தர்ப்பங்களை சரியாக பயன்படுத்தி இக் கட்டான துன்பமான நிலையிலிருந்து விடுபட்டு சுதந்திரமான வாழ்க்கை முறைக்கு திரும்ப முன்வருமாறு வலி. வடக்குப் பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து நலன் புரி நிலையங்களில் தங்கி வாழும் சொந்த இடங்களில் காணி அற்ற மக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வலி.வடக்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சி (ஈழ மக்கள் ஜன நாயக கட்சி) பிரதேச சபை உறுப்பினர் உதயகுமார் விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது,

தற்போது மழைக்காலமாகும். இக் காலங்களில் நலன் புரி நிலையங்களில் தங்கியிருந்து நீங்கள் படப்போகின்ற துன்ப துயரங்களை கருத்தில் கொண்டு தான் காங்கேசன்துறைப் பகுதியில் சொந்தமாக காணிகள் வழங்கப்படுவதுடன் குடியிருப்புகளுடன் ஏனைய பல சலுகைகளும் வழங்கப்பட உள்ளன.

சொந்த இடங்களில் காணிகளற்ற நலன்புரி நிலையங்களில் வாழும் மக்களுக்கு கிடைக்க இருக்கும். இத்திட்டங்களை அவர்களுக்கு கிடைக்க விடாமல் தடுப்பதில் வலி.வடக்கு பிரதேச சபையின் பிரதி தவிசாளரும், இடம் பெயர்ந்தோர் நலன் புரிச் சங்க தலைவருமான ச.சஜீவன் குழப்பி வருகின்றார்.

இவர்களின் பொய்ப் பிரசாரங்களை இனி மேலும் நம்பி ஏமாறாமல், உங்கள் வாழ்வை உங்கள் எதிர்காலத்தை தீர்மானிக்க வேண்டியவர்கள் நீங்கள் தான் அரசியல் வாதிகளல்ல. உங்களின் வாழ்வை அரசியலாக்கி, நீங்கள் நலன்புரி நிலையங்களில் இருக்கும் வரைதான் அவர்கள் இவ்வாறு தடுக்க முற்படுவார்கள்? உங்கள் மீது இரக்கப்படுவதாக காட்டிக் கொள்ளும் இத்தலைவர்கள் உங்களுக்கு கடுகளவு உதவியாவது செய்துள்ளார்களா? சரியாக சிந்தித்து முடிவெடுக்க வேண்டும் என அவர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## வடக்கு அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணப்பணி ஜனவரியில் ஆரம்பம்

(கொழும்பு)

வடக்கு அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணப் பணிகள் 2014ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படும் என பெருந்தெருக்கள் மற்றும் துறைமுகங்கள் செயற்றிட்ட அமைச்சர் நிர்மல கொத்தலாவல தெரிவித்துள்ளார்.

நான்கு கட்டங்களாக நிர்மாணிக்கப்படும் இந்த வீதியின் முதல் கட்டப் பணிகள் ஹெண்டரமுல்லையில் இருந்து மீரிகம வரை நிர்மாணிக்கப்படும்.இரண்டாம் கட்ட நிர்மாணப் பணிகள் குருணாகலில் இருந்து நிர்மாணிக்கப்பட உள்ளதுடன், மூன்றாம் கட்டப் பணிகள் மீரிகமவில் இருந்து கண்டி வரை நிர்மாணிக்கப்படும். 4 ஆம் கட்ட நிர்மாணப் பணிகள் குருணாகலில் இருந்து தம்புள்ளை வரை நிர்மாணிக்கப்படும். இந்தப் பணிகள் அனைத்தும் ஒரே நேரத்தில் ஆரம்பிக்கப்பட உள்ளது என்றார்.

இதேவேளை தென் பகுதிக்கான அதிவேக வீதியின் காலி முதல் மாத்தறை வரையான பகுதி 2014ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26 ஆம் திகதி திறந்து வைக்கப்படும் எனவும் அமைச்சர் நிர்மல கொத்தலாவல தெரிவித்துள்ளார்.

## மூன்று எழுத்து வாகனங்களால் 250 மில்லியன் ரூபா வருமானம்

(கொழும்பு)

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் அண்மையில் அறிமுகப்படுத்திய ஆங்கில எழுத்துக்கள் மூன்று அடங்கிய விசேட வாகனங்களால் இது வரையில் 250 மில்லியன் ரூபா வருமானம் பெறப்பட்டுள்ளது.

'முந்தைய வாகனப்பதிவுகளின் போது இரண்டு ஆங்கில எழுத்துக்களே உள்ளடக்கப்பட்டிருந்தன. இருப்பினும், புதிய நடைமுறைக்கமைய இந்த மூன்றெழுத்து அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தப் புதிய நடைமுறைக்கமைய முதல் 3000 இலக்கங்களும் வாடகை வாகனங்களுக்காக பதிவு செய்யப்பட்டு விட்டன' என்று திணைக்கள ஆணையாளர் நாயகம் எஸ்.எச்.ஹரிஸ்சந்திர தெரிவித்துள்ளார்.

'ஒரு நாளைக்கு 15 முதல் 20 வாகனங்கள் பதிவு செய்யப்படுகின்றன. ஒரு வாகனத்துக்காக 70 ஆயிரம் ரூபா பதிவுக் கட்டணமாக அறவிடப்படுகின்றது'. மாதமொன்றுக்கு 30 ஆயிரம் வாகனங்கள் பதிவு செய்யப்படுகின்றன அவற்றில் 5 ஆயிரம் மோட்டார் சைக்கிள்கள் அடங்குவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## காட்டில் கிடந்த கடிதங்கள் விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)

புத்தளம் ஆனமடு கொட்டுகச்சி உபதபால் நிலையத்திலிருந்த பெரும் எண்ணிக்கையிலான கடிதங்கள் அருகிலுள்ள காட்டிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக கிடைத்த தகவலுக்கு அமைய ஏற்கனவே விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக தபால் மாஅதிபர் ரோஹன அபேரத்ன தெரிவித்துள்ளார். தபால் விநியோகஸ்தர் ஒருவர் கடிதங்களை காட்டுப் பகுதியில் கைவிட்டுச் சென்றிருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

வடமேல் மாகாணத்திற்கு பொறுப்பான பிரதி தபால் மாஅதிபரின் தலைமையில் இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தபால் மாஅதிபர் தெரிவித்துள்ளார்.

## மாகாண சபைகளுக்கு கிடைத்துள்ள வரப்பிரசாதம் கல்வி மட்டுமே

### ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவர்

(கொழும்பு)

மாகாண சபைகளுக்கு கிடைத்துள்ள ஒரேயொரு வரப்பிரசாதம் கல்வி தான். பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை ஒரு போதும் அரசாங்கம் வழங்கப்போவதில்லை எனவும், அதற்காக போராடுவதில் எந்தவித பயனும் இல்லை எனவும் ஜனநாயக மக்கள் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசன் தெரிவிக்கின்றார்.

இந்த வருடம் புலமைப் பரிசில் பரீட்சையில் விசேட சித்தி பெற்ற மாணவர்களையும் அவர்களை பயிற்றுவித்த ஆசிரியர்களையும் கௌரவிக்கும் நிகழ்வொன்று ஜிந்துப்பிட்டி விவேகானந்த சபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில், பொலிஸ் காணி அதிகாரங்களை ஒருபோதும் அரசாங்கம் கொடுக்கப்போவதில்லை, அதற்காக சண்டையிட்டு பயனும் இல்லை.

மாகாண சபை மூலம் கிடைக்கப்பெற்றுள்ள வரப்பிரசாதம் கல்வி, சுகாதாரம் போக்குவரத்து மட்டும் தான். சுகாதாரத்தையும் போக்குவரத்தையும் பார்த்தால் மத்திய அரசாங்கம் அதிலும் தலையிட்டு அதையும் செய்துகொண்டிருக்கின்றது. ஆகவே எங்களுக்கு கிடைத்துள்ள ஒரே வரப்பிரசாதம் கல்வி தான் என்றார்.

## பால்நிலை அடிப்படையிலான வன்முறையை சகிக்க முடியாது

(கொழும்பு)

'பால்நிலை அடிப்படையிலான வன்முறையை எந்த வகையிலும் சகித்துக் கொள்ளமாட்டோம்' என பால் நிலை அடிப்படையிலான வன் முறைக்கு எதிரான மன்றம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, பால் நிலை அடிப்படையிலான வன் முறைக்கு எதிரான கொள்கைகளை தயாரிக்கும் போது பால் நிலை அடிப்படையிலான வன் முறையை சகித்துக் கொள்ளமாட்டோம் என்பதை கருப்பொருளாகக் கொண்டு கொள்கை தயாரிப்பதனை கொள்கை தயாரிப்பாளர்கள் கருத்தில் கொள்ளவேண்டும். சமூகத்தில் எல்லா மட்டங்களிலும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைக் கலாசாரம் ஊடுருவியுள்ளது.

இது உள்ளூர் ஆட்சி கட்டமைப்புக்களில் உள்ள நீதிகளை நடைமுறைப்படுத்தல், வேலை செய்யும் இடங்களில், பொது போக்குவரத்து முறை பாடசாலைகளில் இருந்து எமது வீடுகள் வரை காணப்படுகின்றது.

பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளை பொறுத்துக் கொள்ளும் கலாசாரம் இல்லாதொழிக்க வேண்டும்.

இனிமேலும் இவற்றைப் பொறுத்துக் கொள்ளாமல் வீட்டு வன்முறை, பாலியல் வன்முறை, பாலியல் துஷ்பிரயோகம் பாலியல் துன்புறுத்தல் பாலியல் பலாத்காரம், சிறு பிள்ளைகளுக்கெதிரான பாலியல் வன்முறை, கடத்தல் மற்றும் சகல பால்நிலை அடிப்படை வன்முறையை பொறுத்துக் கொள்ள மாட்டோம். என்ற அடிப்படையில் இவ் வருட செயற்பாடுகளை நாம் முன்னெடுத்துள்ளோம். எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சென்னை - கொழும்பு சேவையை நிறுத்துகின்றது ஜெட் எயர்வேய்ஸ்

(கொழும்பு)

கொழும்பு - சென்னை இடையிலான நாளாந்த விமான சேவையை நிறுத்த இந்தியாவின் ஜெட் எயர்வேய்ஸ் நிறுவனம் முடிவு செய்துள்ளது.

வரும் ஜனவரி இரண்டாம் திகதியுடன் கொழும்பு - சென்னை இடையிலான நாளாந்த விமான சேவைகளை நிறுத்திக் கொள்ளவுள்ளது இந்த நிறுவனம்.

அதற்குப் பிந்திய நாட்களில் முன்பதிவு செய்து கொண்டவர்கள் மாற்று ஏற்பாடுகளைச் செய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

சென்னை- கொழும்பு இடையில், குறைந்த கட்டண விமான சேவையை ஜெட் எயர்வேய்ஸ் நிறுவனம் நடாத்தி வந்தது.

போதிய இலாபமின்மையை காரணம் காட்டி இந்தச் சேவையை ஜெட் எயர்வேய்ஸ் நிறுத்தியுள்ளது.

இதனால், மருத்துவக் காரணங்களுக்காகவும், வியாபாரத் தேவைகளுக்காகவும், இந்தியா செல்லும் பயணிகள் அதிகளவில் பாதிக்கப்படுவர்.

அதேவேளை, அண்மைக் காலமாக, கொழும்புக்கும், தமிழ் நாட்டுக்கும் இடையிலான விமான சேவைகள் குறைக்கப்பட்டு வருகிறது.

ஏற்கனவே மிகின் லங்கா நிறுவனம் திருச்சிக்கும், கொழும்புக்கும் இடையில் நடாத்தி வந்த குறைந்த கட்டண விமான சேவையை நிறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



கைதடி வீரகத்தி பிள்ளையார் ஆலயத்தில் அண்மையில் நடைபெற்ற இயமசங்கார நிகழ்வைக் காணலாம். (51)

## சிறு ஏற்றுமதி பயிர் மேம்பாடு

சிறு ஏற்றுமதி பயிர் உற்பத்தியை மேம்படுத்த பொருளாதார அபிவிருத்தி அமைச்சு திட்டமிட்டுள்ளது. சிறு ஏற்றுமதிப் பயிர்களின் உற்பத்தியை மேம்படுத்தி ஏற்றுமதி செய்வதினூடாக அந்நிய செலாவணியை அதிகரிக்கச் செய்ய பொருளாதார அபிவிருத்தி அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதற்கமைய வாழ்வெழுச்சித் திட்டத்தின் கீழ் வீட்டுத் தோட் டங்களில் பயிரிடுவதற்காக சுமார் 1018886 கன்றுகள் பகிர்ந்தளிக் கப்பட்டுள்ளன.

63,400 ரூபா பெறுமதியான கறுவா கன்றுகளும் 40, 880 ரூபா பெறுமதியான மிளகு கன்றுகள் மற்றும் 28,400 பெறு மதியான கொக்கோ கன்றுகள் என்பனவே இவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

## புதிய கட்டடத்தில் கல்விக்கோட்டம்

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட கரவெட்டி கோட்டம் நாவலர் வித்தியாசாலையில் அமைந்துள்ள புதிய கட்டடத்தில் புதுப்பொலிவுடன் இயங்கி வருகின்றது. நாவலர் வித்தியாசாலையில் முன்னர் இவ் அலுவலகம் இயங்கி வந்த நிலையில் பின்னர் மூடப்பட்டது. எனினும் தற்போது யுனிசெவ்வின் நிதியுதவியுடன் பாடசாலை வளாகத்தில் புதிதாக காரியாலய கட்டடமும், களஞ்சிய அறையும், மலசல கூடத்தொகுதியும் அமைக்கப்பட்டு இப்புதிய கட்டடத்தில் கோட்டக் கல்வி அலுவலகம் இயங்கி வருகின்றது.

இதேவேளை இவ்வலுவகம் இருந்த பழைய கட்டடத்தை இதுவரை காலமும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் பயன்படுத்தி வந்தனர் தற்போது இக்கட்டடம் முற்றாக இடிக்கப்பட்டு சுண்ணாம்புக் கழிவுகளும் அப்புறப்படுத்தப்பட்டு வருகின்றது. கோட்டக்கல்வி அலுவலகத்திற்கென புதிய கட்டடம் அமைக்கப்படவேண்டும் என கரவெட்டி கோட்டக்கல்வி அதிகாரி சி.நற்குணலிங்கம் மேற்கொண்ட முயற்சியின் பயனாக இக்கட்டடம் அமைக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் செயற்பாடுகளை இலகுவாக மேற்கொள்ளக்கூடியதாக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (109)

# க.பொ.த சாதாரணதர மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை - 2013

# கல்வி முரசு

## வர்த்தகம்

பகுதி - I - II

2 மணி

ஆசிரியர்:-
எஸ்.சசீகரன்

01. தனி வியாபாரியான முருகனின் ஏடுகளில் இருந்து 31.12.2011 இல் பின்வரும் பரீட்சைமீதி எடுக்கப்பட்டது.

| விபரம் | பே.ப | வரவு (ரூபா.) | செலவு (ரூபா.) |
|---|---|---|---|
| 01.01.2011 இல் | | 50,000.00 | |
| தொக்கு | | 8,000.00 | |
| சம்பளம் | | | 80,000.00 |
| மூலதனம் | | 2,000.00 | |
| எழுதுகருவி | | 35,000.00 | |
| கொள்வனவு | | 3,500.00 | |
| உட்சுமை கூலி | | | |
| விற்பனை | | | 47,500.00 |
| இறைகள் | | 1,500.00 | |
| அறவிடமுடியாக்கடன் | | 1,250.00 | |
| போக்குவரத்துச் | | 500.00 | |
| செலவு | | | 600.00 |
| பெற்றகழிவு | | 6,000.00 | |
| கடன்பட்டோர் | | | 7,000.00 |
| கடன்கொடுத்தோர் | | 27,350.00 | |
| காணிக்கட்டடம் | | | |
| | | *135,100.00* | *135,100.00* |

*மேலதிகதகவல்கள்:-*

- 31.12.2011 இல் இருப்பு ரூபா 25,000.00
- அட்டுறு இறைகள் ரூபா 250.00
- முற்பணசம்பளம் ரூபா 750.00

*வேண்டப்படுவது:-*

31.12.2011 இல் முடிவடைந்தஆண்டுக்கானவியாபார இலாபநட்டக் கணக்கு.
31.12.2011 இல் உள்ளவாறான ஐந்தொகை.

**01. தனி வியாபாரியான வேலனின் ஏடுகளில் இருந்து 31.12.2011 இல் பின்வரும் பரீட்சை மீதிஎடுக்கப்பட்டது.**

| விபரம் | பே.ப | வரவு (ரூபா.) | செலவு (ரூபா.) |
|---|---|---|---|
| 01.01.2011 இல் | | 35,000.00 | |
| தொக்கு கொள்வன | | 60,000.00 | |
| வுகள் விற்பனைகள் | | | 124,000.00 |
| கூலிகள் | | 1,200.00 | |
| சம்பளம் | | 10,000.00 | |
| கப்பல் கட்டணம் | | 5,000.00 | |
| மின்சாரம் | | 2,500.00 | |
| பெற்றவாடகை | | | 4,000.00 |
| உட்காவுகை | | 1,250.00 | |
| வெளிக்காவுகை | | 2,400.00 | |
| உட்திரும்பல் | | 5,000.00 | |
| வெளித்திரும்பல் | | | 6,000.00 |
| சில்லறை | | | 1,600.00 |
| வருமானம் | | | |
| விளம்பரம் | | 3,000.00 | |
| உபசரணைச் | | 4,250.00 | |
| செலவு | | 45,000.00 | |
| தளபாடம் | | | 94,000.00 |
| மூலதனம் | | 55,000.00 | |
| மோட்டார் வான் | | | |
| | | *229,600.00* | *229,600.00* |

*மேலதிகதகவல்கள்:-*

- 31.12.2011 இல் தொக்குரூபா16,500.00
- அட்டுறுவிளம்பரம் ரூபா2,000.00
- அட்டுறுமின்சாரம் ரூபா1,500.00

*வேண்டப்படுவது:-*

31.12.2011 இல் முடிவடைந்தஆண்டுக்கானவியாபார இலாபநட்டக் கணக்கு.
31.12.2011 இல் உள்ளவாறானஐந்தொகை.

**01. தனி வியாபாரியான கந்தனின் ஏடுகளில் இருந்து 31.12.2011 இல் பின்வரும் பரீட்சை மீதி எடுக்கப்பட்டது.**

| விபரம் | பே.ப | வரவு (ரூபா.) | செலவு (ரூபா.) |
|---|---|---|---|
| மூலதனம் | | | 140,000.00 |
| கொள்வனவுகள் | | 75,000.00 | |
| விற்பனைகள் | | | 100,000.00 |
| காணிக்கட்டடம் | | 65,000.00 | |
| 01.01.2011 இல் இருப்பு | | 30,000.00 | |
| | | 25,000.00 | |
| தளபாடம் கடன்பட்டோர் | | 15,000.00 | |
| வங்கிகாசு பெற்றவட்டி | | 60,000.00 | |
| காப்புறுதி | | 12,500.00 | |
| கடன்கொடுத்தோர் | | | 2,500.00 |
| காகிதாதிகள் | | 1,850.00 | |
| உட்காவுகை | | | 20,000.00 |
| வெளிக்காவுகை | | 2,250.00 | |
| வங்கிக் கட்டணம் | | 1,500.00 | |
| விளம்பரம் | | 2,350.00 | |
| வங்கிக் கடன் | | 450.00 | |
| | | 4,100.00 | |
| | | | 32,500.00 |
| | | *295,000.00* | *295,000.00* |

*மேலதிகதகவல்கள்:-*

- 31.12.2011 இல் கையிருப்புரூபா12,750.00
- பெறவேண்டியவட்டிரூபா750.00
- முன்னதாகசெலுத்தியவிளம்பரம் ரூபா100.00
- கடன்பட்டோரில் 950.00 ரூபாவினைஅறவிடமுடியாக்கடனாகப் பதிவளிக்குக.

*வேண்டப்படுவது:-*

31.12.2011 இல் முடிவடைந்தஆண்டுக்கானவியாபார இலாபநட்டக் கணக்கு.
31.12.2011 இல் உள்ளவாறானஐந்தொகை.

**01. தனி வியாபாரியான வேலவனின் ஏடுகளில் இருந்து 31.12.2011 இல் பின்வரும் பரீட்சை மீதி எடுக்கப்பட்டது.**

01. முருகன் நிறுவனத்தின் பரீட்சை மீதி சமப்படவில்லை. வித்தியாசப்பட்ட ரூபா 800.00 தொங்கல் கணக்கொன்றிற்கு வரவு வைக்கப்பட்டது. பின்னர் பின்வரும் வழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

- விற்பனைகள் கணக்கு ரூபா 8,000 எனும் தொகையினால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.
- வழங்குநர் ஒருவருக்கான கொடுப்பனவு ரூபா 3,500 பிழையாக வழங்குநர் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.
- ரூபா 850 கடன் விற்பனை ஒன்று விற்பனைகள் கணக்கிற்கும் அத்துடன் பொருத்தமான கடன்பட்டோர் கணக்கிற்கும் செலவு வைக்கப்பட்டிருந்தது.
- ரூபா 1,150 இற்கான கொள்வனவு விலைப்பட்டியல் ஒன்று நாளேட்டில் இருந்து பொருத்தமான வழங்குநர் கணக்கிற்கு ரூபா 1,250 ஆக பதியப்பட்டிருந்தது.

வேண்டப்படுவது:-

வழுக்களை திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவு.
தொங்கல் கணக்கு.

**02.** ஆனைமுகன் என்ற வியாபாரியின் பரீட்சை மீதியில் ஏற்பட்ட வித்தியாசம் தொங்கல் கணக்கில் ரூபா 1,400 வரவில் இடப்பட்டது. பின்வரும் வழுக்கள் கண்டறியப்பட்டன.

- கொடுத்த சம்பளம் ரூபா 2,500 காசுக் கணக்கில் மாத்திரம் பதியப்பட்டது.
- ஆனைமுகன் சொந்த தேவைக்கு எடுத்த பொருள் ரூபா 1,500 ஏடுகளில் பதியப்படவில்லை.
- விற்பனை நாளேட்டைக் கூட்டும் போது ரூபா 1,250 குறைத்துக் கூட்டப்பட்டது.
- பெற்ற வாடகை ரூபா 1,300 உரிய வருமானக் கணக்கில் மாத்திரம் பதியப்பட்டது.
- பெற்ற தரகு ரூபா 1,150 காசுக் கணக்கில் மாத்திரம் பதியப்பட்டது.

வேண்டப்படுவது:-

வழுக்களை திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவு.
தொங்கல் கணக்கு.

**03.** தும்பிக்கையன் என்ற வியாபாரியின் பரீட்சை மீதியில் ஏற்பட்ட வித்தியாசம் தொங்கல் என ரூபா 4,970 செலவில் இடப்பட்டது. பின் வரும் வழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

- உட்திரும்பல் நாளேட்டைக் கூட்டும் போது ரூபா 2,500 கூட்டிக் கூட்டப்பட்டது.
- விற்பனை நாளேட்டைக் கூட்டும் போது ரூபா 3,500 குறைத்துக் கூட்டப்பட்டது.
- கொடுத்த தரகு ரூபா 1,250 ஏடுகளில் பதிவுசெய்யப்படவில்லை.
- பெற்ற கழிவு ரூபா 280 பெற்ற கழிவுக் கணக்கில் மாத்திரம் பதியப்பட்டது.
- வெற்றுப்பொருள் விற்பனை ரூபா 750 உரிய வருமானக் கணக்கில் மாத்திரம் பதியப்பட்டது.

வேண்டப்படுவது:-

வழுக்களை திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவு.
தொங்கல் கணக்கு.

**04. வேலன் நிறுவனத்தின் பரீட்சை மீதி 31.01.2012 இல் சமப்படவில்லை. காணப்பட்ட வித்தியாசம் ரூபா 9,900 வரவு மீதியாகக் காட்டியது. பின்னர் பின்வரும் வழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன.**

- உட்திரும்பல் ரூபா 1,500 தவறுதலாக வெளித்திரும்பல் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.
- இயேசுவிடம் வாங்கிய ரூபா 10,000 பெறுமதியான பொருட்கள் தவறுதலாக மரியாளின் கணக்கில் பதியப்பட்டிருந்தது.
- கொள்வனவு தினசேரியின் ஜனவரி மாத கூட்டுத் தொகையானது ரூபா 2,000 இனால் குறைவாக கூட்டப்பட்டிருந்தது.
- குழந்தை இயேசுவிற்கு விற்பனை செய்யப்பட்ட பொருட்களுக்கான ரூபா 1,950 ஆனது அவரது கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.
- கொடுத்த வாடகை ரூபா 1,350 காசுக் கணக்கில் சரியாகப் பதியப்பட்டிருந்த போதிலும் கொடுத்த வாடகைக் கணக்கில் ரூபா 350 ஆக வரவு வைக்கப்பட்டிருந்தது.

**வேண்டப்படுவது:-**

வழுக்களை திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவு.
தொங்கல் கணக்கு.

**05. முருகவேள் நிறுவனத்தின் நிதியாண்டு 2012.03.31 இல் முடிவுற்றது. இத் திகதியில் உள்ளவாறு ஏடுகளில் இருந்து பெயர்த்தெடுக்கப்பட்ட பரீட்சை மீதி ரூபா 13,100 வரவு மீதியாக வித்தியாசத்தினைக் காட்டியது. இத் தொகை தொங்கல் கணக்கு ஒன்றில் இடப்பட்டது. அதன் பின்னர் பின்வரும் பிழைகள் கண்டுபிடிக்கப்பட்டன.**

- ரூபா 7,500 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் கொள்வனவுத் திரும்பல் நாளேட்டில் பதிவு செய்யப்பட்டதுடன் கடன்கொடுத்தவரின் கணக்கிற்கு ரூபா 750 என வரவு வைக்கப்பட்டது. இக் கொள்வனவு தொடர்பாக ஏடுகளில் வேறு பதிவு ஒன்றும் செய்யப்படவில்லை.
- ரூபா 8,500 இற்கு விற்கப்பட்ட பண்டங்கள் விற்பனை நாளேட்டில் பதிவு செய்யப்பட்டு கடன்பட்டவரின் கணக்கில் ரூபா 850 என செலவு வைக்கப்பட்டிருந்தது.
- ரூபா 2,500 ஆன ஒரு விற்பனைப் பட்டியலும் ரூபா 3,500 ஆன ஒரு கொள் வனவுப் பட்டியலும் ஏடுகளில் முற்றாக பதிவு செய்யப்படாது விடுபட்டி ருந்தது.
- காசேட்டின் 32 ஆம் பக்கமான வரவுப் பக்கத்தில் உள்ள மொத்த தொகை 32,392,862 ஆனது 33 ஆம் பக்கத்திற்கு ரூபா 32,392,682 என முன் கொண்டு செல்லப்பட்டது.
- கொள்வனவுத் தினசேரி ரூபா 3,180 கூடுதலாக கூட்டிக் கணக்கிடப் பட்டிருந்தது.
- மோட்டார் வாகனத் திருத்தத்திற்காக 2012.01.26 ஆம் திகதி செலுத்தப்பட்ட ரூபா 3,500 தொகையானது மோட்டார் வாகனக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.
- உரிமையாளர் ரூபா 5,100 பொருளாக எடுத்துச் சென்றமை ஏடுகளில் பதிவு செய்யப்படவில்லை.
- கடன்பட்டோரில் ரூபா 1,500 அறவிடமுடியாக் கடனாக பதிவழிக்கப்பட வேண்டும்.

**வேண்டப்படுவது:-**

வழுக்களை திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவு.
தொங்கல். கணக்கு.

**06. கந்தன் கம்பனி தயாரித்த பரீட்சை மீதி இணங்கவில்லை. காணப்பட்ட வித்தியாசம் ரூபா 7,050 செலவு மீதியாகக் காட்டியது. கணக்காய்வின் போது பின்வரும் வழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன.**

- கொள்வனவு தினசேரியானது ரூபா 3,800 இனால் கூட்டி எழுதப்பட்டிருந்தது.
- வங்கி அறிவிட்ட வங்கிக் கட்டணம் ரூபா 950 முற்றாக தவறவிடப்பட்டிருந்தது.
- வங்கி வசூலித்த பங்குலாபம் ரூப்ா 5,000 காசுக் கணக்கில் பதியப்பட்டிருந்தது.
- கட்டடத் திருத்தச் செலவு ரூபா 4,000 தவறுதலாக கட்டடக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.
- கடன்பட்டோரிடம் இருந்து பெற்ற பணம் ரூபா 1,250 தவறுதலாக கடன்பட்டோர் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.
- பெற்ற கழிவுக் கணக்கானது ரூபா 750 இனால் குறைத்து எழுதப்பட்டிருந்தது.

**வேண்டப்படுவது:-**

வழுக்களை திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவு.
தொங்கல் கணக்கு.

**07. வேலவன் கம்பனி தயாரித்த பரீட்சை மீதி இணங்கவில்லை. வித்தி யாசம் தொங்கல் கணக்கில் இடப்பட்டது. பின்னர் பின்வரும் பிழைகள் கண்டுபிடிக்கப்பட்டன.**

- தேவனுக்கு விற்பனை ரூபா 750 தேவன் கணக்கில் இடம்பெறவில்லை.
- காசேட்டில் கொடுத்த கழிவு நிரலின் மொத்தம் ரூபா 300 எனும் தொகையினால் குறைவாகக் கூட்டப்பட்டிருந்தது.
- கிடைத்த வட்டியாகிய ரூபா 1,250 கொடுத்த வட்டியாகக் கருதப்பட்டு காசேட்டிலும் வட்டிக் கணக்கிலும் பதியப்பட்டிருந்தது.
- கொள்வனவு தினசேரியின் ஒரு பக்க கூட்டுத் தொகையான ரூபா 70,650 ஆனது மறு பக்கத்திற்கு கொண்டு செல்லும் போது ரூபா 70,560 என கொண்டு செல்லப்பட்டது.
- கிடைத்த தரகு ரூபா 150 காசுக் கணக்கில் மட்டும் பதியப்பட்டிருந்தது.

**வேண்டப்படுவது:-**

வழுக்களை திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவு.
தொங்கல் கணக்கு.

**08. வேல் முருகன் கம்பனி தயாரித்த பரீட்சை மீதி இணங்கவில்லை. விததியாசம் தொங்கல் கணக்கில் இடப்பட்டது. பின்னர் பின்வரும் பிழை கள் கண்டுபிடிக்கப்பட்டன.**

- காப்புறுதிக் கட்டணம் ரூபா 4,100 காசுக் கணக்கில் சரியாக பதிவுசெய்யப்பட்ட போதிலும் காப்புறுதிக் கட்டணக் கணக்கில் ரூபா 1,400 என செலவு வைக்கப்பட்டது.
- கடன்பட்டோரான இயேசுவிடம் பெற்ற காசோலை ரூபா 550 தவறுதலாக இயேசு கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.
- உட்திரும்பல் நாளேடு ரூபா 2,500 இனால் மிகைப்படுத்தப்பட்டிருந்தது.
- விற்பனை தினசேரியின் கூட்டுத்தொகையானது ரூபா 3,250 இனால் மிகைப்படுத்தப்பட்டிருந்தது.
- பெற்ற கழிவு ரூபா 990 தவறுதலாக கொடுத்த கழிவுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டது.

**வேண்டப்படுவது:-**

வழுக்களை திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவு.
தொங்கல் கணக்கு.

**09. தொப்பையப்பன் நிறுவனத்தின் பரீட்சை மீதி இணங்கவில்லை. வித்தியாசம் தொங்கல் கணக்கில் பதிவு செய்யப்பட்டது. பின்வரும் வழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன.**

- பெற்ற கழிவு ரூபா 300 கொடுத்த கழிவாக கருதப்பட்டு கொடுத்த கழிவுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.
- வங்கி மேலதிகப் பற்று ரூபா 2,150 பரீட்சை மீதியில் தவறுதலாக வரவு நிரலில் பதிவு செய்யப்பட்டது.
- முருகனிடம் கொள்வனவுரூபா 3,000 ஏடுகளில் முற்றாகப் பதிவு செய்யப்படவில்லை.
- அலுவலக உபகரணம் ரூபா 6,000 கொள்வனவுக் கணக்கில் பதியப்பட்டுள்ளது.
- விற்பனைக் கணக்கின் செலவு நிரல் மறு பக்கத்திற்கு கொண்டு செல்லும் போது ரூபா 13,000 ஆனது ரூபா 31,000 என பதிவு செய்யப்பட்டது.

**வேண்டப்படுவது:-**

வழுக்களை திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவு.
தொங்கல் கணக்கு.

**10. பிள்ளையார் கம்பனியின் ஏடுகளில் இருந்து பின்வரும் வழுக்கள் கண்டு பிடிக்கப்பட்டன.**

- தளபாடத் திருத்தச் செலவு ரூபா 1,250 தளபாடக் கணக்கில் பதியப்பட்டிருந்தது.
- உரிமையாளர் பற்றிக் கொண்ட ரூபா 3,000 பெறுமதியான பண்டங்கள் தொடர்பான பதிவுகள் ஏடுகளில் இடம்பெறவில்லை.
- கொடுத்த கழிவு ரூபா 1,000 ஆனது பெற்ற கழிவுக் கணக்கில் உள்ள டக்கப்பட்டிருந்தது.
- வேலன் என்பவரிடம் இருந்து கிடைத்த ரூபா 4,000 தொகையானது வேலவனின் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டது.
- கொள்வனவுக் கணக்கின் மொத்தம் ரூபா 8,000 எனும் தொகையால் குறைத்துப் பதியப்பட்டிருந்தது.
- காசு விற்பனை ரூபா 20,000 காசேட்டில் சரியாக பதிவு செய்யப்பட்ட போதும் விற்பனைக் கணக்கில் ரூபா 2,000 எனப் பதியப்பட்டிருந்தது.

**வேண்டப்படுவது:-**

வழுக்களை திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவு.
தொங்கல், கணக்கு.

**11. விநாயகர் என்ற வியாபாரியின் பரீட்சை மீதி இணங்கவில்லை. வித்தி யாசம் தொங்கல் கணக்கில் இடப்பட்டது. வேறுபாட்டுக்கான கர்ரணங்கள் வருமாறு.**

- வாடிக்கையாளர் ஒருவரால் திருப்பியனுப்பப்பட்ட பண்டங்களுக்கான ரூபா 350 செலவுத்தாள் குறிப்பொன்று உட்திரும்பல் ஏட்டிலும் வாடிக்கையாளரின் கணக்கிலும் இருதடவை பதியப்பட்டிருந்தது.
- விற்பனை நாளேடு ரூபா 900 இனால் மிகையாக கணக்கிடப்பட்டிருந்தது.
- மரியாள் எனும் வாடிக்கையாளர் ஒருவரிடம் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 1,350 காசேட்டில் சரியாக பதிவு செய்யப்பட்ட போதும் மரியாளின் கணக்கில் ரூபா 1,530 ஆக செலவு வைக்கப்பட்டிருந்தது.
- காசேட்டின் செலவுப் பக்கத்தில் காணப்பட்ட ரூபா 1,020 கழிவு ஆனது கழிவுக் கணக்கில் பிழையான பக்கத்தில் பதியப்பட்டிருந்தது.
- காசு விற்பனை ரூபா 865 ஆனது காசேட்டில் சரியாக பதிவு செய்யப்பட்ட போதிலும் கொள்வனவுக் கணக்கில் ரூபா 685 வரவு வைக்கப்பட்டிருந்தது.

**வேண்டப்படுவது:-**

வழுக்களை திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவு.
தொங்கல் கணக்கு.

**12. கந்தவேள் நிறுவனத்தின் 2012.03.31 இல் பரீட்சை நிலுவை தயாரிக்கும் போது வரவுப் பக்கத்தின் கூட்டுத் தொகையானது செலவுப் யக்கத்தின் கூட்டுத் தொகையிலும் அதிகமாக இருந்தது என்பது கண்டுபிடிக்கப்பட்டது. பின்னர் பின்வரும் வழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன.**

- உட்திரும்பல் நாளேட்டின் கூட்டுத் தொகையான ரூபா 950 உட்திரும்பல் கணக்கில் ரூபா 590 ஆக பதிவு செய்யப்பட்டிருந்தது.
- மரியாள் என்பவரிடம் இருந்து கிடைத்த ரூபா 500 பெறுமதியான காசோலை காசேட்டிலே சரியாகப் பதிவு செய்யப்பட்ட போதிலும் அது ஆட்குறுக் கணக்கில் வரவுப் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தது.
- ரூபா 3,250 பெறுமதியான வெளித்திரும்பல்கள் வெளிமுகத்திரும்பல் கணக்கில் பதிவு செய்து வழங்குநர் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.
- எழுதுகருவி செலவு ரூபா 250 சில்லறைக் காசேட்டில் மொத்தத் தொகை நிரலில் பதிவு செய்யப்பட்ட போதிலும் பொருத்தமான பகுப்பாய்வு நிரலுக்கு கொண்டு செல்லப்படவில்லை.
- வாடகைரூபா 310 ஆனது வாடகைக் கணக்கில் ரூபா 130 ஆகப் பதியப்பட்டிருந்தது.

**வேண்டப்படுவது:-**

வழுக்களை திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவு.
தொங்கல் கணக்கு.

**13. பானை வயிற்றோன் என்ற வியாபாரியின் பரீட்சை மீதியின் செலவுப் பக்கம் ரூபா 980 குறைவாகக் காணப்பட்டது. வித்தியாசம் தொங்கல் என இடப்பட்டது. பின்வரும் வழுக்கள் கண்டறியப்பட்டன.**

- வெளித்திரும்பல் நாளேட்டைக் கூட்டும் போது ரூபா 3,000 குறைத்துக் கூட்டப்பட்டது.
- கடன்கொடுத்தோருக்கு கொடுத்த ரூபா 1,100 கடன்கொடுத்தோர் கணக்கில் பக்கம் மாறிப் பதியப்பட்டது.
- அலுவலகப் பயன்பாட்டுக்காக கொள்வனவு செய்யப்பட்ட காகிதாதிகள் ரூபா 450 ஆனது தவறுதலாக கொள்வனவுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டி ருந்தது.
- காப்புறுதிக்கு செலுத்திய ரூபா 540 ஆனது காசுக் கணக்கில் வரவிலும் காப்புறுதிக் கணக்கில் செலவிலும் பதிவு செய்யப்பட்டது.
- விற்பனை நாளேடு ரூபா 180 இனால் குறைவாக கூட்டப்பட்டுள்ளது.

**வேண்டப்படுவது:-**

வழுக்களை திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவு.
தொங்கல் கணக்கு.


**14. பானை வயிற்றோன் நிறுவனத்தின் பரீட்சை நிலுவை இணங்கவில்லை. பின்வரும் வழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன.**

- விளம்பரக் கணக்கின் மீதி ரூபா 1,500 பரீட்சை நிலுவைக்கு கொண்டு வரப்படவில்லை.
- கொள்வனவு ரூபா 1,950 விற்பனையாகப் பதியப்பட்டிருந்தது.
- கொடுத்த தரகு ரூபா 4,000 பரீட்சை மீதியில் விடுபட்டிருந்தது.
- ரூபா 2,500 இற்கான வங்கி செலவு மீதி பரீட்சை மீதியின் வரவுப் பக்கத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.
- வெளித்திரும்பல் நாளேடு ரூபா 1,500 இனால் கூடுதலாக கூட்டப்பட்டிருந்தது.

**வேண்டப்படுவது:-**

வழுக்களை திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவு.
தொங்கல் கணக்கு.

# சனசமூக நிலையத்திற்கு தளபாடங்கள் வழங்கல்



அரியாலை சிறி முத்தி விநாயகர் சனசமூக நிலையத்திற்கு தளபாடங்கள் வழங்கப்பட்டன

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் ஆகியோரின் 2013 ஆம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியொதுக்கீட்டின் கீழ் அரியாலை சிறி முத்தி விநாயகர் சனசமூக நிலையத்திற்கு தளபாடங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி தளபாடங்களை நல்லூர் பிரதேசசபை எதிர்க் கட்சித்தலைவரும், ஈ.பி.டி.பியின் நல்லூர் பிரதேச இணைப்பாளருமான அம்பலம் இரவீந்திரதாசன் சனசமூக நிலைய நிர்வாகத்திடம் கையளித்தார்.

இந்த நிகழ்வில் நல்லூர் பிரதேச சபை செயலாளர் மேரி ஜோசப் சாந்த சீலன் கலந்துகொண்டார்.


## வடமாகாண பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவு நிறுவனங்களின் பேரிணையம் (வ-து)

### பதவி வெற்றிடம்

**தட்டெழுத்தாளர்**

மேற்படி பணி நிலைக்கு தகுதியுள்ள விண்ணப்பதாரரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சம்பளத்திட்டம் : 305/13
9950 - 11700
85 x 40 - 90 x 10

காலத்திற்குக் காலம் சுற்றுநிருபங்களிற்கு அமைவாக வழங்கப்படும் அனைத்துப் படிகளும் வழங்கப்படும்.

**தகைமைகள் :**

01) கூட்டுறவு ஊழியர் சாதாரண தரப்பத்திரம் - க.பொ.த. சாதாரண தரத்துடன் தே.க.பொ.தரம் சமபந்தப்பட்ட மொழியுடன் 06 பாடங்களுடனான சித்தியுடன் தமிழ தட்டெழுத்தில் நிமிடத்திற்கு 20 சொற்களுக்கும் ஆங்கில தடடெழுத் தில் 30 சொற்களுக்கும் எனற வேகத்தில் இருத்தல் வேண்டும். தட்டெழுத்து, கணனிப் பயிற்சி நெறியில் சித்தியடைந்தமைக்கான சான்றிதழ் இருத்தல் வேண்டும். அத்துடன் கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பளத திட்டதில் தமிழ் / ஆங்கில தட்டெழுத்தாளர் பதவி யொன்றில் குறைந்தது 02 ஆண்டுகால அனுபவம் இருத்தல் வேண்டும்.

02)

1. வயது 18 தொடக்கம் 35 இற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது கணிப்பிடப்படும்.
2. சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது. சங்கப் பணியாளர்கள் தங்களது சங்கத்தினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.
3. சேவைத்தகைமை, தொழில் அனுபவம் கவனத்தில் எடுக்கப்படும்.
4. விண்ணப்பமுடிவுத் திகதி 07.12.2013

**குறிப்பு:** விண்ணப்பங்கள் தலைவர், வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பேரிணையம், ஏ-9 வீதி, கிளிநொச்சி எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**வடமாகாண ப.தெ.வ.அ.கூ. நிறு. பேரிணையம்,**
**ஏ -9 வீதி கிளிநொச்சி.** (C/3203)


# வெறுப்புணர்வு ஊடக பயன்பாடு; விளக்கமளிக்குமாறு உத்தரவு

மக்களை வெறுப்படையச் செய்யும் வகையில் ஊடகத்தை பயன்படுத்தியமை தொடர்பில் விளக்கமளிக்க எம்.ரி.வி. மற்றும் எம்பி.சி நிறுவனத்தின் தலைவர் ராஜ மகேந்திரனை நீதிமன்றில் ஆஜராகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

அடுத்தமாதம் 11 ஆம் திகதி மாத்தறை நீதவான் நீதிமன்றில் ஆஜராகுமாறு அவருக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

மக்களை வெறுப்படையச் செய்யும் வகையில் ஊடகத்தைப் பயன்படுத்தியதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தாக்கல் செய்த மனு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

மாத்தறை பிரதேசத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் இரு பிரிவினர் மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தின்போது ஏற்பட்ட மோதல் குறித்த காணொளி ஒளிபரப்பு தொடர்பிலேயே மங்கள சமரவீர இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

# யுத்த சாட்சியங்களாக உலாவரும் மனிதர்கள்

## இவர்களின் வாழ்க்கையை வளம்படுத்தும் செயற்றிட்டம்

*(நேற்றைய தொடர்ச்சி....)*

1) ஒவ்வொரு நாள் பிற்பகலிலும் துண்டித்த பகுதியை இளம் சூடான நீரினாலும் மென்மையான சவர்க்காரத்தினாலும் நன்கு கழுவவும்.

2) கழுவிய பின் நன்கு உலரவிட்டு செயற்கை அவயத்தை பாவிக்கவும்.

3) சுத்தமான மேஷ் (உறை) பாவிப்பதுடன் ஒவ்வொரு நாளும் அதைக் கழுவி உலர விட்டு அணியவும்.

4) வைத்தியரின் அனுமதியின்றி துண்டத்திற்கு பவுடர் கிறீம் பாவிப்பதை தவிர்க்கவும். ஏனெனில் அவை துண்டத்திற்கு பாதிப்பு ஏற்படுத்தும்.

5) ஒவ்வொரு தடவையும் செயற்கை அவயவங்களை கழற்றிய பின் உங்கள் துண்டத்தில் காயங்கள், கொப்புளங்கள், உராய்வுகள் உள்ளதா என முகம பார்க்கும் கண்ணாடியின் மூலம் அவதானிக்கவும். அப்படி இருப்பின் வைத்தியரின் ஆலோசனை பெறவும்.

6) நீரிழிவு நோய் ஒவ்வாமை இரத்த அழுத்தம் உள்ளவர்கள் துண்டத்தில் காயங்கள் ஏற்படும்போது வைத்தியரின் ஆலோசனை பெறவும்.

உங்கள் அவயவங்கள் துண்டிக்கப்பட்ட பின் மீதமுள்ள அவயவங்கள் உங்களுக்குப் பெறுமதிமிக்க சொத்தாகும். எனவே இவற்றை நன்கு பாதுகாத்து காயங்கள், வலிகளில் இருந்து இவற்றையும் இழக்காது பாதுகாத்தல் அவசியமாகும்.

பாதங்களில் வீக்கம் காணப்படின் காலை உயரமான பொருளின் மேல் உயர்த்தி வைத்திருத்தல் வேண்டும் (Stool).

தொடர்ந்து கதிரையில் இருக்கும்போது கதிரையின் விழிம்புகள் தொடையின் இரத்த நாளங்களை அழுத்தாமல் இருப்பதை உறுதி செய்தல் வேண்டும். ஏனெனில் இவை பாதங்களுக்கு விறைப்பு தன்மையைக் கொடுக்கும்.

**வடக்கில் நடைபெற்ற யுத்தம் முடிவுக்கு வந்து நான்கு ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. எனினும் யுத்த காலத்தில் பொது மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் ஏராளம் அதிலும் குறிப்பாக உடல் அவயவங்களை இழந்தவர்கள் இன்னமும் சந்தித்துவரும் துன்பங்கள் ஏராளம்.**
**அவர்களின் துயரம் துடைக்க மன்னாரில் இயங்கும் 'மெத்தா' நிறுவனம் முன்வந்திருக்கிறது. செயற்கை அவயவங்கள் பொருத்தும் சேவையில் ஈடுபடும் இந்த நிறுவனம் செயற்கை அவய பாவனையாளர்களுக்கான ஆலோசனைகளை வழங்க முன்வந்துள்ளது.**

கட்டிலில் படுக்கும்போது இரு கால்களையும் குறுக்காக வைத்திருப்பதை தவிர்க்கவும். குதிக்கால்கள் தொடர்ந்து படுத்திருக்கும்போது கட்டிலில் அழுத்துவதனாலும் குப்புறப் படுக்கும் போதும் கால் விரல்கள் கட்டிலில் அழுத்தாமல் இருப்பதற்காக இடது, வலது பக்கம் சாய்ந்து படுக்கவும். கட்டிலில் இருந்து எழும்பும் போதும் இறங்கும் போதும் குதிக்காலுக்கு அதிக அழுத்தம் கொடுக்காதீர்கள்.

படுத்திருக்கும்போது உங்கள துண்டிக்கப்பட்ட அவயம் அடுத்த காலின் கீழ் தலையணையை வைக்காதீர்கள். ஏனெனில் இவை முழங்கால் இடுப்பு பகுதியை விறைப்பாக்கும்.

காலுறைகள் அணியும்போது இறுக்கமான உறைகளையும், காலுறையில் Elastic இருப்பதை தவிர்க்கவும். ஏனெனில் இவை இரத்த ஓட்டத்தை தடை செய்யும்.

பாதங்கள் துண்டிக்கப்பட்ட பகுதி காய்ந்து வரண்டு இருந்தால் பேபி கிறீம் (baby Cream) பாவிப்பது நல்லது.

பாதணிகளையும், துண்டிக்கபட்ட பகுதிகளில் போடும் உறைகளையும் ஜெலி உறைகளையும் (Jeli Socks) அடிக்கடி நன்கு கழுவி காயவிடவும்.

**புதிய செயற்கை உறுப்புக்கள் பொருத்துபவர்களின் கவனத்திற்கு**
(Attention to the new artificial limbs receivers)

புதிய செயற்கை உறுப்புக்கள பொருத்த வரும்போது சில சமயம் 2 - 3 நாட்கள் நடைப் பயிற்சி வழங்குவதற்காக வைத்தியசாலையில் தங்க வேண்டி வரும். எனவே, தங்குவதற்குரிய ஆயத்தங்களுடன் வரவும்.

பெண்கள், தாய்மார்கள், சிறுவர்கள், வயோதிபர்கள் போனவர்கள் இன்னும் ஒருவரின் உதவியுடன் வருவது நல்லது.

செயற்கை அவயம் பொருத்தப்பட்டு பின்பு கழற்றி மீண்டும் பொருத்துவதற்கு பழகிக் கொள்ளவும். பின்பு எழுந்து நின்று ஒன்று அல்லது இரண்டு அடி தூரம் நடந்து பார்க்கவும். உங்களுக்கு நம்பிக்கை ஏற்பட்ட பின் இரு சமாந்திர கைபிடி சட்டத்தில் (Paraller bars) நடந்து பழகவும்.



இதில் நம்பிக்கை ஏற்பட்ட பின் 1-2 கைத்தடியின் உதவியுடன் நடந்து பழகவும். இரு காலகளையும் இழந்தவர்களுக்கு 'வோக்கர் (Walker) இன் உதவி தேவைப்படும்.

இதில் நம்பிக்கையும் திடமும் பயமும் இல்லாதிருப்பின் உங்களுக்கு படிகளில் ஏறுவதற்கும், இறங்குவதற்கும் சாய்வு தளத்தில் மெதுவாக ஏறுவதற்கும் இறங்குவதற்கும் மேலும் வெவ்வேறு கடின தரைகளில் நடமாடுவதற்கும் பயிற்சி அளிக்கப்படும்.

செயற்கை அவயவங்களை முழங்கால் பகுதிகளில் மடிப்பதற்கு (lock) பாவிக்கும் முறையும் சொல்லித்தரப்படும்.

மேற்கூறியவற்றில் உங்களின் நம்பிக்கை அதிகரித்த பின் நீங்கள் சுயமாக 1 -2 கைத்தடிகளுடன்.

சுலபமாக நடப்பதற்கும் ஒரு வித ஆதாரங்களும் இன்றி சுயமாக நடப்பதற்கு கற்றுத்தரப்படும்.

மேற்படி நடைப் பயிற்சிகள் ஒரு சிலருக்கு கிழமைகள் மாதங்கள் எடுக்கக்கூடும். உளவியல் ரீதியாக சில தாக்கங்கள் ஏற்படின் உங்கள் பகுதி இயன் மருத்துவரை அணுகவும்

நீங்கள் சுயமாக நடமாடுவது உங்கள் முயற்சிகளில் தங்கியுள்ளது.

**பாதிக்கப்பட்ட அவயவங்களை வைத்திருக்கும் முறை**
(After care to your prosthetic & Orthotic devices)

உங்கள் செயற்கை அவயவங்களின் இயக்கம் - நடமாட்டதற்கு விசேட கருவிகள் (tools) பாவிக்கப்படல் வேண்டும எனவே இவை சிலசமயம் இருக்காதிருத்தல் நீங்கள் அவற்றைச் சரிசெய்யாது உறுப்புக்களை உடனடியாக வைத்திய சாலைக்குக் கொண்டு வரவும். ஏனெனில் பிழையான கருவிகளின் பாவனை செயற்கை அவயவங்களின் பாவனைக்கு பாதிப்பை ஏற்படுத்தும்.

ஒவ்வொரு நாள் பாவனைக்குப் பின்பும் ஈரமான துணியினால் செயற்கை அவயவங்களின் உட்புறமும், வெளிப்புறமும் துபபுரவு செய்வதுடன் நன்கு உலரவிடவும். சுகாதார மான செயற்கை உறுப்புக்கள் நோயற்ற நீண்ட பாவனையைத் தரும்.

*(தொடரும்...)*

# சிரியாவின் உள்நாட்டுப் போரில் 11ஆயிரத்து 420 குழந்தைகள் பலி



சிரியாவில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக நடந்து வரும் போராட்டத்தில், இது வரையிலும் 11 ஆயிரம் குழந்தைகள் பலியானதாக தற்போது தகவல் வெளியாகியுள்ளது.

சிரியாவில் கடந்த 2011ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடங்கிய போராட்டம், இன்று வரை தொடர்ந்து கொண்டு தான் உள்ளது.


இதில் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் பலியாகி இருப்பதுடன், மில்லியன் கணக்கான வர்கள் அகதிகளாக பல்வேறு நாடுகளிலும் தஞ்ச மடைந்துள்ளனர்.

இந்நிலையில் இதுவரையிலும் 11,420 குழந்தைகள் பலியாகியுள்ளதாக அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

இதனை லண்டனைச்சேர்ந்த ஒக்ஸ்போர்ட் ஆய்வுக் குழுவினர் வெளியிட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் 17 வயதுக்குட்பட்டவர்கள் எனவும், 128 குழந்தைகள் கடந்த ஆகஸ்ட் மாதம் நடந்த இரசாயன தாக்குதலில் கொல்லப்பட்டதாகவும் அந்த ஆய்வு தெரிவித்துள்ளது.

# இந்தியாவுக்கு தங்கம் கடத்திய 56 இலங்கையர்கள் கைது



இலங்கையில் இருந்து இந்தியாவின் கொச்சிக்கு விமானம் மூலம் தங்கம் கடத்திச் சென்ற 56 இலங்கையர்களை நேற்று முன்தினம் இந்திய பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கொழும்பில் இருந்து கொச்சிக்கு சென்ற விமானத்தில் சில பயணிகள் தங்கம் கடத்தி வருவதாக கொச்சி சுங்கத்துறை அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலையடுத்தே குறித்த நபர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

அந்த விமானத்தில் நடத்திய சோதனையின் போது 28 பெண்கள் - 14 ஆண்களும் மறைத்து வைத்திருந்த 10 கிலோ தங்க நகைகளை இந்திய பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

அவர்களின் விசாவை பரிசோதித்ததில், அவர்கள் அடிக்கடி கொழும்பில் இருந்து விமானத்தில் தென்னிந்தியாவில் உள்ள பல நகரங்களுக்கு சென்றமையும் ஒரே நாளில் கொழும்பில் இருந்து புறப்பட்டு மீண்டும் திரும்பியமையும் தெரியவந்துள்ளது.

கொழும்பில் உள்ள ஒரு கும்பல், அவர்களை தங்கம் மற்றும் பொருட்களை கடத்தி செல்வதற்கு பயன்படுத்தி வந்தமை விசாரணையில் தெரியவந்துள்ளது இதேவேளை, 1.733 கிலோ கிராம் தங்கத்துடன் மேலும் 14 இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.


உலகச் செய்திகள்

# அமிலமழை பொழிவால் அனர்த்தங்கள் ஏராளம்

பூமியில் 25 கோடி ஆண்டுகளுக்கு முன்பு பொழிந்த அமில மழை மற்றும் ஓசோன் குறைவு காரணமாக மிகப் பெரிய அளவிலான அழிவு ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

பெர்மியான் காலத்தின் முடிவில் ஏற்பட்ட இந்த பேரழிவின் போது கடலில் வாழ்ந்த 90 சதவிகித உயிர்களும், நிலத்தில் வசித்த 70 சதவிகித உயிர்களும் இறந்துவிட்டன என்று சமீபத்திய ஆய்வுகள் கூறுகின்றன. இதில் மிகவும் அதிர்ச்சியூட்டக் கூடிய மிக கொடிய மிருகங்கள் என அறியப்பட்டனவும் இறந்துவிட்டன என்று கூறப்படுகிறது.

அதே நேரத்தில் சைபீரியாவில் மிகப்பெரிய எரிமலை வெடித்து சிதறியபோது வெளியேறிய வாயுக்களால் வளிமண்டலத்தில் ஏற்பட்ட மாற்றமே இந்த அமில மழை பொழிவிற்கு காரணம் என்றும் சில ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.



இந்த மிகப்பெரிய அழிவிற்கு பிறகு பூமியில் பல மில்லியன் ஆண்டுகளுக்கு எந்த உயிர்களும் தோன்றவில்லை என்றும் கிடைத்த படிமங்கள் அடிப்படையில் கருதப்படுகிறது என்று அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பூமி தோன்றி சுமார் 500 கோடி ஆண்டுகள் ஆகிவிட்டதாக விஞ்ஞான ஆய்வுகள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# கிறிஸ்தவ கிராமம் மீது தாக்குதல் 200வீடுகள் தீக்கிரை; 5பேர் பலி



நைஜீரியாவில் கிறிஸ்தவ கிராமத்தை சுற்றிவளைத்து 300 தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 5பேர். பலியாகியுள்ளதுடன் 200வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

மத்திய ஆபிரிக்க நாடுகளில் இஸ்லாமிய சட்டதிட்டங்களுக்கு உட்பட்ட ஆட்சி அமைக்க வேண்டுமென போகோ ஹரம் என்ற தீவிரவாத அமைப்பு ஆயுதமேந்திய போராட்டங்களில் ஈடுபட்டு வருகிறது.


நைஜீரியாவில் உள்ள கிறிஸ்தவ தேவாலயங்களை தாக்கி அழிக்கும் போகோ ஹரம் தீவிரவாதிகள் அப்பாவி பொதுமக்களையும் கொன்று குவித்து வருகின்றனர்.

இந்நிலையில், மத்திய நைஜீரியாவில் கிறிஸ்தவர்கள் அதிகம் வாழும் குக்கா என்ற கிராமத்தை நேற்று முன்தினம் ஆயுதமேந்திய சுமார் 300 போகோ ஹரம் தீவிரவாதிகள் சுற்றி வளைத்தனர்.

சுமார் 200 வீடுகளை தீயிட்டு கொளுத்திய அவர்கள் கண்மூடித்தனமாக சுட்டனர்.

இந்த கொலைவெறி தாக்குதலில் 5 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர். படுகாயமடைந்த பலர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# டைனோசர் எலும்புக்கூடு ஏலம்



மிகவும் பழமைவாய்ந்த 17மீற்றர் நீளமுள்ள டைனோசர்ஸ் எலும்புக் கூடு ஆறுகோடி ரூபாவரை ஏலம் போகும் என தெரிவிக்கப்படுகிறது.

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு டைனோசர்ஸ் என்ற ராட்சத விலங்குகள் வாழ்ந்து அழிந்துவிட்டன. தற்போது அவற்றின் முட்டைகள் மற்றும் எலும்புக் கூடுகள் கண்டெடுக்கப்பட்டு வருகின்றன. அவ்வாறு கிடைக்கப் பெற்ற ஒரு ராட்சத டயனோசரசின் எலும்புக்கூடு நாளை லண்டனில் ஏலம் விடப்படுகிறது.

இது 4 கோடி ரூபா முதல் 6கோடி ரூபா வரை ஏலம் போகும் என எதிர்பார்க்கப்படுகிறது. பெண் டைனோசர்ஸ் ஆன இதன் எலும்புக் கூடு 17 மீற்றர் நீளம் உள்ளது.

தாவரங்களை மட்டுமே சாப்பிட்டு உயிர் வாழ்ந்த இந்த டைனோசர்ஸ் மிக அரிய வகையை சார்ந்தது என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

# அணு நிலையங்களை சோதனையிட ஈரான் ஒப்புதல்

(ஜெனிவா)

பொருளாதார தடையிலிருந்து மீள்வதற்காக தங்கள் நாட்டில் உள்ள அணு உலைகளை சோதனையிட, ஈரான் ஒப்புக்கொண்டுள்ளது.

ஈரான் நாட்டில், இரகசியமாக செயற்படும் அணுசக்தி நிலையங்களில், அணு ஆயுதம் தயாரிப்பதாக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் நீண்ட காலமாக சந்தேகிக்கின்றன. ஐ.நா., அணு ஆயுத ஒழிப்பு ஒப்பந்தத்தில், ஈரான் கையெழுத்திட வேண்டும் என இந்த நாடுகள் ஈரானை நிர்ப்பந்தப்படுத்தின. இதற்கு ஈரான் மறுத்ததால் அந்நாட்டின் மீது கடுமையான பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதனால் ஈரான், மசகு எண்ணெயை விற்க முடியாத நிலை ஏற்பட்டு, கடும் பொருளாதார சிக்கலைஅனுபவித்து வருகிறது. சமீபத்தில், ஈரானில் நடந்த தேர்தலில், மிதவாத போக்குடைய அதிபர் ஹசன் ரவ்கானி தேர்வு செய்யப்பட்டார். தங்கள் நாட்டின் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதார தடையை தளர்த்து வதற்குரிய நடவடிக்கையில் ரவ்கானி ஈடுபட்டார். அணு சக்தி ஒப்பந்தம் தொடர்பாக, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுடன் பேச்சு வார்த்தை நடத்த ரவ்கானி ஒப்புக்கொண்டார்.

இதையடுத்து, ஜெனிவாவில் கடந்த வாரம், பேச்சு வார்த்தை நடந்தது. அமெரிக்கா, பிரிட்டன் பிரான்ஸ் ஜேர்மனி, சீனா ரஷ்யா ஆகிய நாடுகளின் வெளியுறவுத் துறை அமைச்சர்களுடன், ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் விவாதித்தார். முதல் சுற்று பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்படவில்லை. இதையடுத்து, இரண்டாவது சுற்று பேச்சுவார்த்தை நடந்தது.

அணு உலைகளை பார்வையிட, சர்வதேச பார்வையாளர்களை அனுமதிக்கவும், அணு சக்தி நிலையங்களில் பயன்படுத்தப்படும் யுரேனியத்தின் அளவைக் குறைத்துக் கொள்ளவும், பதுக்கி வைத்துள்ள அணு ஆயுதங்களை குறைக்கவும், ஈரான் அரசு ஒப்புக்கொண்டுள்ளது.

ஈரானின் இந்த ஒப்புதலால், ஆறு மாத காலத்துக்கு, அந்நாட்டின் மீது மீண்டும் பொருளாதார தடை எதையும் விதிக்கப்போவதில்லை என அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் உறுதியளித்துள்ளன. இதன் மூலம், 45 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பொருளாதார தடையிலிருந்து, ஈரானுக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. தற்போது ஏற்பட்டுள்ள இந்த ஒப்பந்தத்துக்கு, அமெரிக்க அதிபர் ஒபாமா பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

# நோபல் பரிசு பெறும் தகுதி ஒபாமாவுக்கு இல்லை ஹொலிவுட் நடிகை



அமெரிக்க அதிபர் ஒபாமாவுக்கு அமைதிக்கான நோபல் பரிசு பெறும் தகுதியில்லை என்று ஹொலிவுட் நடிகை சூசன் சாரன்டோன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் கோவாவில் நடைபெற்ற சர்வதேச திரைப்பட விழாவில் நடிகை சூசன் சாரன்டோன் கலந்து கொண்டார்.

அங்கு அவர் உரையாற்றுகையில் மக்கள் விடுதலைக்காக ஒபாமா பெரும் சாதனையைப் படைக்கவில்லை ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தானில் நீண்ட காலமாக படை வாபஸ் பெறப்படாமல் உள்ளது.

மேலும் அவருக்கு நோபல் பரிசு பெறும் தகுதியில்லை என்று உணர்கின்றேன் என்றார்.

# வங்கக்கடலில் லெஹர் ஆந்திராவிற்கு எச்சரிக்கை

வங்கக் கடலில் புதிதாக உருவாகியுள்ள லெஹர் புயல் நாளை மறுதினம் ஆந்திர மாநிலத்தில் கரையைக் கடக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனால் தமிழகத்திலும் குறிப்பாக கடலோர பகுதிகளில் கன மழை பெய்ய வாய்ப்புள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவிக்கையில்:

வங்கக்கடலில் தெற்கு அந்தமான் பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை கடந்த சில நாட்களுக்கு முன்பு உருவானது. இது இப்போது புயலாக வலுப்பெற்றுள்ளது. இதற்கு லெஹர் புயல் என்று பெயரிடப்பட்டுள்ளது.

இது தென்கிழக்கு வங்கக் கடலில் நகரும்போது, தீவிர புயலாக வலுப்பெறும். பின்னர் மேற்கு - வடமேற்கு திசையில் நகர்ந்து ஆந்திர மாநிலம் மசூலிப்பட்டினம் மற்றும் கலிங்கப்பட்டினம் இடையில் நவம்பர் 28ஆம் திகதி கரையைக் கடக்கும். இந்தப் புயலின் திசை மாறினால், தமிழகப் பகுதியில் கரையைக் கடக்கவும் வாய்ப்புள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த இரு தினங்களுக்கு முன்புதான் ஹெலன் புயல், மசூலிப்பட்டினம் அருகே ஆந்திரத்தை தாக்கியது என்பது குறிப்பிடத்தக்கது.

### பனை அபிவிருத்திச் சபையின்

# கொழும்பு நகர கிளைக்கு அமைச்சர் டக்ளஸ் விஜயம்



(கொழும்பு)

பனை அபிவிருத்திச் சபையின் ஊழியர்களது பிரச்சினைகள் மற்றும் பனை அபிவிருத்தி சபையின் கொழும்பு நகர கிளையினை மறுசீரமைப்பு தொடர்பில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்றுப் பிற்பகல் அக்கிளைக்காரியாலயத்திற்கு சென்று கலந்துரையாடினார்.

இதன்போது அதிகாரிகள் மற்றும் ஊழியர்களது பிரச்சினைகள் தொடர்பில் அவதானம் செலுத்திய அமைச்சர், அவற்றைத் தீர்ப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படுமெனத் தெரிவித்தார்.

மேலும் கட்டடத்தை புனர்நிர்மாணம் செய்வது தொடர்பில் உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

இதன்போது பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, அமைச்சரின் ஆலோசகர் திருமதி வீ.ஜெகராஜசிங்கம் உள்ளிட்ட துறைசார்ந்த அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

## மாவீரர்...

விடுதலைப்புலிகளைக் கொண்டாடுவதோ அல்லது அவர்களை ஊக்குவிப்பதோ தண்டனைக்குரிய குற்றமாகும் என தேசிய பாதுகாப்புத் தகவல் நிலையம் தெரிவித்திருக்கின்றது.

நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடாது. அவ்வாறு மேற்கொள்பவர்கள் நீதிமன்றத்தின் மூலம் சட்ட நடவடிக்கைக்கு உள்ளாக்கப்படுவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மாவீரர் தினத்தை அனுசரிக்கக்கூடாது என வலியுறுத்தும் அறிக்கையை தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் வெளியிட்டுள்ளது.

அதேவேளை கரவெட்டி பிரதேசசபையில் நேற்று இடம்பெற்ற அமர்வின்போது மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், நினைவுத் தீபங்களும் ஏற்றி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (116)

## பயங்கரவாதத்திற்கு...

அபிவிருத்தி செய்ய வர்த்தக நோக்கிலேயே சீனா உதவியுள்ளது. அதனை, முத்துமாலை வியூகத்தின் கோர்ப்பாக தவறாக எடைபோடக்கூடாது.

எமது நாடு எப்போதுமே அணிசேராத, வெளிநாட்டுக் கொள்கையை கொண்டுள்ள நாடு. நாம் தொடர்ந்து எமது துறைமுகங்களுக்கு வரும் எந்தவொரு நாட்டினதும், கடற்படைக் கப்பல்கள் உள்ளிட்ட கப்பல்களுக்கும் தேவையான விநியோக மற்றும் ஏனைய உதவிகளை வழங்கி வருகிறோம்.

இந்தநிலையில், வெளிநாட்டுக் கொள்கையை மாற்றிக் கொள்ள வேண்டிய தேவை எமக்குக் கிடையாது.

இந்தியா எமது மிகப்பெரிய அண்டை நாடு. பிராந்தியத்தின் [illegible]வும் முக்கியமான நாடு. எமது கலாசார, சமூக, பொருளாதார, அரசியல் உறவுகள் வரலாற்று ரீதியானவை.

அதேபோல சீனாவுக்கும் எமக்கும் இடையிலான உறவும் பல நூற்றாண்டுகள் பழமை வாய்ந்தவை. இந்த இரண்டு நாடுகளுடனும், மிகப்பெரிய பரஸ்பர உறவுகளையும், நட்புறவையும் எமது நாடு கொண்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக, எமது நாட்டின் அபிவிருத்தியின் முக்கிய பங்காளியாக சீனா விளங்குகிறது. சீனாவின் உதவியுடன் அமைக்கப்பட்டுள்ள அம்பாந்தோட்டை துறைமுகம் முற்றிலும் வர்த்தக நோக்கிலானதே என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## சர்வதேச...

அதன்படி, மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான வியன்னா பிரகடனத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை ஒத்துக்கொண்டுள்ளது.

இதனால், மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச சட்டதிட்டங்களுக்கு இலங்கை மதிப்பளிக்க வேண்டும், அதனை மீறினால் சர்வதேச சமூகம் இந்த விவகாரத்தில் தலையிட முடியும். ஆனால் இந்த அரசாங்கம் நாட்டு மக்களுக்கு அதை மறைக்கிறது.

இலங்கை வாக்குறுதி அளித்துள்ளதன்படி, தன்மீதுள்ள மனித உரிமைக் குற்றச்சாட்டுக்களை வரும் மார்ச் மாதத்துக்குள் விசாரித்து முடிக்க வேண்டும். இல்லாவிட்டால் சர்வதேச மட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் கூறியிருந்தார்.

எங்களின் விடயங்களில் சர்வதேசம் விரல் நுழைக்க ஏன் நீங்கள் இடமளிக்க வேண்டும் என்றுதான் நாங்கள் அரசிடம் கேட்கிறோம்?

இலங்கையின் எந்தவொரு குடிமகனையும் போர்க் குற்ற நீதிமன்றத்துக்கோ வேறு எந்த நீதிமன்றத்துக்கோ கொண்டுசெல்ல சட்டம் எதுவும் இல்லை என்று கூறிய ஐக்கிய தேசியக் கட்சி, 2002 ஆம் ஆண்டில் ரோம் சமவாயம் கைச்சாத்திடப்பட்டபோது அப்போதைய இலங்கைப் பிரதமர் ரணில் விக்ரமசிங்க அதில் கைச்சாத்திடவில்லை என்பதையும் சுட்டிக்காட்டியது.

இலங்கை வாக்குறுதி அளித்துள்ளதன்படி நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை நடைமுறைப்படுத்தி, விசாரணைகளை நடத்தி உரிய காலத்தில் முடிக்காவிட்டால் சர்வதேச தலையீடுகளை இலங்கை எதிர்கொண்டுதான் ஆகவேண்டிவரும் என்கிற நிலையே தற்போது ஏற்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கவிஞர்...

வெள்ளிக்கிழமை வவுனியா, மாங்குளம் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார்.

தனது தாயின் சமாதிக்கு அஞ்சலி செலுத்தச் சென்ற வேளை அவர் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலா விசாவில் இலங்கை சென்ற நோர்வே பிரஜை ஜெயபாலன், விசா விதிமுறைகளை மீறி யாழ்ப்பாணத்தில் கூட்டங்களை நடத்தியதாக பொலிஸார் குற்றம்சாட்டியுள்ளனர்.

இலங்கை சென்ற ஜெயபாலன் ஊடகவியலாளர்கள், உறவினர்கள், நண்பர்கள் என பல தரப்பினரையும் சந்தித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனினும் எப்போது நாடு கடத்தப்படுவார் என்பது தெளிவில்லை. தற்போது தடுப்பு முகாமில் உள்ளார்.

## அழுத்தங்களுக்கு...

மற்றும் உயர் அதிகாரிகள் இந்த வைபவத்தில் கலந்து கொண்டனர்.

## மன்மோகனின்...

விரிவுரையாளர் ரமேஸ் தாகூர் தெரிவித்துள்ளார்.

மாநாட்டை புறக்கணித்தமைக்கான விலையை இந்தியா செலுத்த நேரிடும். இலங்கை மனித உரிமை நிலைமைகளின் அடிப்படையில் மன்மோகன்சிங் இந்த முடிவை எடுக்கவில்லை.

தமிழகம் வாழ் மக்களின் வாக்குகளை மையமாகக் கொண்டே இந்த முடிவை மன்மோகன் எடுத்திருந்தார்.

எனவே, மாநாட்டை புறக்கணித்தமை இந்தியாவுக்கு அதிக பாதிப்புக்களை ஏற்படுத்தும் என தாகூர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## அரச...

எனினும் அத்தியாவசிய மருத்துவ சேவைகளைப் பாதிக்காத வகையில் தமது போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளதாகவும் யாழ். போதனா வைத்திய சாலையின் சிரேஷ்ட தாதிய உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை அத்தியாவசிய மருத்துவசேவையை முன்னிட்டு தமது குழு ஒன்று நெருக்கடி நிலையைச் சமாளிக்க வைத்திய சாலையில் நிலைகொண்டிருக்கும் எனவும் தெரிவித்தார். அத்துடன் ஏனைய மருத்துவ சேவைகளில் பாதிப்பு ஏற்படலாம் எனவும் தெரிவித்துள்ளார். (பா)

# அழகுசாதன நிலையத்தில் திருடர்கள் கைவரிசை

(யாழ்ப்பாணம்)

யாழ். அரியாலை பாரதி வீதியிலுள்ள அழகுசாதன நிலையமொன்றில் இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

இந்த அழகு சாதன நிலையத்தின் உரிமையாளர் நேற்று முன்தினம் காலை அழகுசாதன நிலையத்தை திறப்பதற்குச் சென்றபோது, அழகுசாதன நிலையத்தின் முன் கதவு உடைக்கப்பட்டு அங்கிருந்த அழகுசாதனப் பொருட்கள் கொள்ளையிடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்த நிலையில், கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ள இந்தக் கொள்ளைச் சம்பவம் தொடர்பில் யாழ். பொலிஸ் நிலையத்தில் மேற்படி அழகுசாதன நிலையத்தின் உரிமையாளர் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்தக் கொள்ளைச் சம்பவம் தொடர்பில் விரிவான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# 'கொக்கோகோலா' உற்பத்திகளுக்கு மூன்று மாத தடை விதிப்பு

(கொழும்பு)

கொக்கோகோலா பேவரோஜஸ் தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள சகல அனுமதிப்பத்திரங்களையும் மூன்று மாதங்களுக்கு தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கெப்பிட்டிகொல்லாவ நீதவான் நீதிமன்றமே இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

பயன்படுத்தக்கூடிய காலத்தை குறிப்பிடாமல் கொக்கோகோலா போத்தல் ஒன்றை விற்பனைக்காக, விநியோகம் செய்தமை தொடர்பான மூன்று குற்றச்சாட்டுக்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

இந்த தீர்ப்பின் படி பியகமவில் இருக்கும் கொக்கோகோலா நிறுவனத்தில் உற்பத்தி செய்தல், களஞ்சியப்படுத்தல், விநியோகம் செய்த மற்றும் விற்பனை செய்தல் போன்ற நடவடிக்கைகளுக்கு மூன்று மாதங்களுக்கு தடை செய்யப்பட்டுள்ளன.

இந்த நிலையில் நீதவான் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு எதிராக வடமத்திய மாகாண மேல் நீதிமன்றத்தில் மேன்முறையீட்டு மனுவொன்றை தாக்கல் செய்ய அந்த நிறுவனம் தீர்மானித்துள்ளது.

# தனியார் பஸ் சேவையை கண்காணிக்க பாதுகாப்பு கமராக்கள்

(கொழும்பு)

தனியார் போக்குவரத்து சேவை, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு பெஸ்த்தியன் மாவத்தை பஸ் நிலையம் ஆகியவற்றை ஒரு பாதுகாப்பு கமரா முறையின் கீழ் கொண்டுவரவுள்ளதாக தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சு கூறியுள்ளது.

இதன் மூலம் புறக்கோட்டையிலுள்ள பஸ் நிலையங்களை கண்காணிக்க முடியுமெனவும் இதனால் இந்த பஸ் நிலையங்களில் காத்திருக்கும் பயணிகளுக்கு தொந்தரவு செய்வோரை கண்காணிக்க முடியுமெனவும் அமைச்சர் சி.பீ.ரத்னாயக்க கூறினார்.

தனியார் பஸ்களில் பயணச் சீட்டுகளுக்கு பதிலாக முற்கொடுப்பனவு அட்டைகளை பயன்படுத்துமாறு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு ஒன்றரை வருடங்களுக்கு முன்னரே பணித்துள்ளபோதும் அது நிறைவேற்றப்படவில்லை இதை கட்டாயமாக்குவதற்கு தனியார் போக்குவரத்து சேவை அமைச்சர் ஒரு அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பிக்கவுள்ளார் என அமைச்சின் செயலாளர் கூறினார்.

# விளக்கமறியல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நாச்சிமார் ஆலய தேர்க் கட்டடத்திலிருந்து கடந்த ஒக்ரோபர் மாதம் மீட்கப்பட்ட பெண்ணின் சடலம் 'தொடர்பில் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபருக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்தேகநபரை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 9 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

ஒக்டோபர் மாதம் 27ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட இந்தச் சந்தேக நபருக்கு எதிரான வழக்கு விசாரணை நேற்று யாழ். நீதிமன்றத்தில் நடைபெற்றது.

இதன்போதே இந்தச் சந்தேக நபரை டிசம்பர் மாதம் 9 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதவான் நீதிமன்ற நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார். (25)

## ஜெயபாலன்...

குடியகல்வுத் திணைக்களம் தடுத்துவைத்துள்ளதாக பொலிஸாரினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.


நவம்பர் மாதத்தின் இறுதி வாரமானது பிரபாகரனின் பிறந்த தினத்தை ஒட்டியதாக இருப்பதால் தேவையற்ற அசம்பாவிதங்களுக்கு இடமளித்து விடக்கூடாது என்பதில் கண்காணிப்புகள் தீவிரப்படுத்தப்பட்டிருப்பது வழமையாகும். இக்காலகட்டத்தில் ஜெயபாலனின் வருகையும் அவர் காட்டிய பரபரப்பும் இந்த அசம்பாவிதங்களுக்கு காரணமாக அமைந்திருக்கலாம்.

எனவே அவரின் முதுமையையும் சூழலையும் கவனத்தில் கொள்ளவேண்டியது அவசியமாகும். அதன் அடிப்படையில் கவிஞர் ஜெயபாலனை விடுதலை செய்து நோர்வே நாட்டிற்கு திருப்பி அனுப்புவதற்கு மனிதாபிமான அடிப்படையில் இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என ஈ.பி.டி.பி கேட்டுக்கொள்கிறது.

கவிஞர் ஜெயபாலனின் விடுதலை தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும் உரியவர்களுடன் பேச்சுக்களை நடத்தவும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி முயற்சிகளை எடுத்துள்ளது என்பதனையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாகாண அதிகாரம் யாருக்கு?

# அரசிடம் கேட்கிறார் சுரேஷ்



வட மாகாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுள்ள நிலையில் அரசியல் அமைப்பில் ஏற்றுகொள்ளப் பட்டுள்ள 13 ஆவது திருத்தத்தின் பிரகாரம் மாகாண அதிகாரம் முதலமைச்சருக்கா? அல்லது ஆளுநருக்கா என்பது தொடர்பில் தீர்மானிக்கும் தருணம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட எம்.பி.யுமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

அரசியல் சாசனத்தில் கூறப்பட்டுள்ள அதிகாரங்கள் தமிழர்களுக்கு கிடைக்குமா என்பதனையும் தீர்மானிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வரவு - செலவுத் திட்ட மூன்றாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி கூறிய சமாதானம் பாதுகாப்பு என்பது இந்நாட்டின் பெரும்பான்மை மக்களுக்கு மாத்திரமா? அல்லது இந்த நாட்டில் வாழக்கூடிய அனைத்து இன மக்களுக்குமா என்ற பாரிய கேள்வி ஒன்றுள்ளது.

யுத்தம் முடிந்து நான்கு வருடங்கள் முடிந்து விட்ட நிலையிலும் கூட இந்த வரவு செலவுத் திட்டம் என்பது பாதுகாப்புத்துறைக்கு அல்லது முப்படைகளுக்கும் முன்னுரிமை கொடுத்து தயாரிக்கப்பட்ட வரவு செலவு திட்டமாகவே உள்ளது என்றார்.

## பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு இலகு கடன் திட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட 8 குடும்பங்களுக்கு மாவட்ட சர்வோதய நிறுவனம் 20 ஆயிரம் ரூபா வீதம் இலகு கடன் வசதியை வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

யுத்தத்தின் பின்னர் மீள்குடியேறிய நிலையில் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள் வாழ்வாதார ரீதியாக மிகவும் கஷ்டத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்நிலையில் இவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் 8 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இக்குடும்பங்கள் தற்போது சுயதொழிலை மேற்கொண்டு வரும் நிலையில், அவற்றை மேம்படுத்தி வருமானத்தை அதிகரிக்கும் நோக்குடன் இலகு கடன் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (கே)

## புலமைப்பரிசில் பரீட்சையை மறுசீரமைக்க ஆலோசனைகள்

### மனித உரிமை ஆணைக்குழு வெளியிடும்

(கொழும்பு)

தரம் - 5 ஆம் புலமைப் பரிசில் பரீட்சையில் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்கள் குறித்து கல்வியாளர்களிடம் பெறப்பட்ட கருத்துகள் அடங்கிய அறிக்கை எதிர்வரும் வாரங்களில் வெளியிடப்படும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இம்முறை சிறுவர் தினத்தில் புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறு வெளியிடப்பட்டதால் பாரிய பிரச்சினை ஏற்பட்டது.

இது குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. முறைப்பாட்டின் அடிப்படையில் 30 கல்வியாளர்களிடம் கருத்தறிய இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்தது.

அதன் இறுதி அறிக்கை எதிர்வரும் வாரங்களில் வெளியிடப்படும் என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் கலாநிதி பிரதிபா மகாநாம ஹேவா தெரிவித்தார்.

## இலங்கை மீனவர்கள் கைது

இந்தியக் கடற்பரப்பினுள் பிரவேசித்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் 22 இலங்கை மீனவர்களை இந்திய கரையோர பாதுகாப்பு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

இந்த மீனவர்களுடன் 04 மீன்பிடி படகுகளும் நேற்று முன்தினம் கைப்பற்றப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஆந்திர பிரதேசத்தின் கிருஷ்ணப்பட்டின கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டப்போது இலங்கை மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள இலங்கை மீனவர்களையும் அவர்களின் படகுகளையும் பொலிஸாரிடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## சூதாட்ட வழக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

கொழும்பில் உள்ள யூனியன் பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் நடத்தப்பட்ட சூதாட்ட விடுதிக்கும் அங்கு கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராகவும் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு பெப்ரவரி 17 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் நீதவான் திலின கமகே முன்னிலையில் நேற்று திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டபோதே இந்த வழக்கை 2014 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதிக்கு நீதவான் ஒத்திவைத்தார்.

சட்டவிரோதமான முறையில் சூதாட்ட நிலையத்தை நடத்தியமை மற்றும் சூதாட்டத்தில் ஈடுபட்டமை ஆகிய குற்றச்சாட்டுகளின் பேரில் கைது செய்யப்பட்ட 10 பேரும் நீதவான் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டபோது அவர்களை தலா 10 இலட்சம் ரூபா பெறுமதியான சரீர பிணையில் விடுவிக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

## இனிவரும் தேர்தல்கள் புதிய வாக்காளர் அட்டவணைப்படியே

### தேர்தல் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

2014 ஆம் ஆண்டு நடத்தப்படும் எந்தத் தேர்தலும் 2013 ஆம் ஆண்டின் வாக்காளர் அட்டவணைப்படியே நடத்தப்படும் என தேர்தல் ஆணையாளர் அலுவலகம் அறிவித்தல் விடுத்துள்ளது.

இதேவேளை, டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் தேர்தல் ஒன்றை நடத்துமாறு தேர்தல் ஆணையாளருக்கு உத்தரவிடப்பட்டால், 2013 ஆம் ஆண்டின் வாக்காளர் பெயர் அட்டவணைப்படியன்றி 2012 ஆம் ஆண்டின் வாக்காளர் பெயர் அட்டவணைப்படியே தேர்தல் நடத்தப்படுமென பிரதித் தேர்தல் ஆணையாளர் எம்.எம்.முஹம்மட் தெரிவித்தார்.

2012 ஆம் ஆண்டின் வாக்காளர் பெயர் அட்டவணை டிசம்பர் 31 ஆம் திகதியன்று வெளியாகும். தற்போது இந்தப் பணிகள் குறிப்பிடத்தக்க அளவு பூர்த்தி பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல்களுக்காக 2013 ஆம் ஆண்டின் வாக்காளர் பெயர் அட்டவணை பயன்படுத்தப்படுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## விதை உற்பத்தியாளர் சங்கத்திற்கு காணி கொள்வனவு செய்ய ஏற்பா[illegible]

கிளிநொச்சி மாவட்டத்தில் விதை உற்பத்தியாளர் சங்கத்திற்கான காணியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

இம்மாவட்டத்தில் இயங்கும் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் கட்டடமின்றி நிரந்தர காணியின்றி இயங்கிவரும் நிலையில் நிரந்தர காணியை வழங்குமாறு அரச அதிபரிடம் சங்கம் கோரிக்கை விடுத்திருந்தது.

இந்நிலையில் இச்சங்கத்திற்கென காணி வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும், ஏ - 9 வீதியின் கிழக்குப் பக்கமாக அதிக விவசாயிகள் வாழ்வதால் அப்பகுதியில் இச்சங்கத்துக்கென காணியை வழங்குவதற்கு ஏதுவாக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக அவர் தெரிவித்தார். (கே)

## ராஜீவ் கொலை வழக்கு; மறு விசாரணை வேண்டாம்

(கொழும்பு)

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் மறு விசாரணை கோருவது சரியல்ல என்று மத்திய அமைச்சர் நாராயணசாமி கூறியுள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், முன்னாள் பாரத பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் உயர் அதிகாரிகள் திடீரென்று மாற்றுக் கருத்துக்களை கூறி வருகின்றனர்.

அரசு உயர் அதிகாரிகள் பதவியில் இருக்கும்போது ஒரு மாதிரியும், ஓய்வு பெற்ற பிறகு வேறு மாதிரியும் மாற்றி, மாற்றி பேசி வருவது சரியல்ல.

கடந்த 22 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த ராஜீவ்காந்தி கொலை வழக்கு விசாரணை முழுவதும் உச்சநீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு, உறுதி செய்யப்பட்ட நிலையில் திடீரென மறு விசாரணை கோருவது சரியல்ல என்றார்.

## வரவு செலவுத்திட்டத்தை எதிர்த்து தெற்கில் கண்டன ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் செயற்றிறன் அற்றது எனத் தெரிவித்து, மக்கள் விடுதலை முன்னணி ஏற்பாடு செய்திருந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டமும், கூட்டமும் நேற்று நடைபெற்றது.

இந்த எதிர்ப்பு நடவடிக்கை புஞ்சி பொரளையில் காலை ஆரம்பமானது. வரவு செலவுத் திட்டத்தில் போலி வேண்டாம், மக்களுக்கு நிவாரணத்தை வழங்குங்கள் என்ற தொனிப் பொருளில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வரவு செலவுத் திட்டத்திற்கு எதிர்ப்பை தெரிவிக்கும் நோக்கிலான எதிர்ப்பு நடவடிக்கையின் ஊடாக, மக்களுக்கு நிவாரணத்தை வழங்குமாறும் இதில் கலந்துகொண்டவர்கள் கேட்டுக் கொண்டனர்.

## மூவருக்கு டெங்குத் தொற்று; போதனா வைத்தியசாலையில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

டெங்கு நோய்த் தொற்றிற்கு இலக்காகிய மூவர் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிக்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காரைநகர், கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருந்து ஒவ்வொருவரும், கொழும்பு சீதுவைப்பகுதியைச் சேர்ந்த ஒருவருமாகவே இந்த மூவரும் யாழ்.போதானா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுடன் இந்த மாதம் யாழ்.போதனா வைத்தியசாலையில் டெங்குநோய்த் தொற்றுக்கு 15 பேர் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், இந்த வருடத்தில் இந்த எண்ணிக்கை 523 ஆக அதிகரித்திருப்பதாக வைத்தியசாலையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேலும் இனிவரும் நாட்களில் மழை அதிகரிக்கும் நிலை இருப்பதன் காரணமாக இந்த நோயின் தாக்கம் அதிகரிக்கும் சாத்தியமிருப்பதாக சுகாதாரப் பகுதியினர் எச்சரித்துள்ளனர். மக்கள் தேவையான தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (பா)

## மாணவர்கள் துஷ்பிரயோகம்; பாடசாலை அதிபர் கைது

(ஹப்புத்தளை)

மாணவர்கள் 14 பேரை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியதாக கூறப்படும் அதிபர் ஒருவரை சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

ஹப்புத்தளை, ஹல்துமுல்லை பகுதியிலுள்ள தமிழ் பாடசாலையொன்றில் தரம் - 7 மற்றும் தரம் - 8 ஐச் சேர்ந்த மாணவர்களையே குறித்த வித்தியாலயத்தின் அதிபர் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியதாக தெரிவிக்கப்படுகின்றது.

துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியதாக கூறப்படும் மாணவர்கள் மருத்துவ சோதனைக்காக தியத்தலாவை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 நவம்பர் 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.